விலை - சதம் 25

# சுதந்திரன்

SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1999 ஆவனி திங்கள் 4-ம் நாள் (20—8—67) ஞாயிற்றுக்கிழமை ஜ.அவ் 13
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1183

புத்தகம் 22
இதழ் 3

# மேலும் 75,000 பேர் அனுப்பப்படுவர்?

## இந்தியாவுக்கு செல்பவர் மொத்தம் 600,000

சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தில் தீர்க்கப்படாது விடப்பட்ட 150,000 'நாடற்றவர்கள்' என்று கூறப்படும் மக்களின் கதிபற்றி அடுத்தமாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் பாரதப் பிரதமர் இலங்கைப் பிரதமருடன் விவாதிப்பாரென்றும், அவர்களில்பாதிப்பேர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளும் என்றும், பாதிப்பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் அவர் யோசனை தெரிவிப்பாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த யோசனைக்கு மலையகத் தொழிற்சங்க வட்டாரங்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இலங்கையில் இந்தியவம்சாவளி மக்கள் 'நாடற்றவர்கள்' என்ற நிலைமையில் 975,000 பேர் இருக்கிறார்களென்று சிறிமா—சாத்திரி ஒப்பந்தம் கையெழுத்திட்டபோது கூறப்பட்டது அவர்களில் 525,000 பேர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவது என்றும், 300,000 பேர்களுக்கு இலங்கைக்குடியுரிமை வழங்குவதென்றும், எஞ்சிய 150,000 பேர்களின் எதிர்காலம் பற்றி பின்னர் முடிவு செய்வதென்றும் ஒப்பந்தம் கூறுகிறது.

இப்பொழுது இந்த 150,000பேர்களின் பிரச்சினையை இந்தியா எடுத்துக்கொண்டிருப்பதாக தெரிகிறது. இலங்கை—இந்தியர் பிரச்சினையை இறுதியாகத் தீர்த்து விட வேண்டுமென்று இந்திய அரசாங்கம் கருதுகிறதாம.

செப்டம்பர் 3வது வாரத்தில் பாரதப்பிரதமர் இந்திரா காந்தி இலங்கைக்கு விஜயம் செய்வாரென்று ஒரு செய்தி கூறுகிறது. அப்பொழுது அவர் இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுடன் அந்த 150,000 பேர்களின் கதி பற்றி பேச்சுவார்த்தை நடத்துவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பேச்சு வார்த்தைகளின் போது 150,000ல் 75,000 பேர்களுக்கு இலங்கைப் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென்றும், 75,000 பேர்களை இந்தியா ஏற்றுக்கொள்ள சம்மதிக்கும் என்றும் பாரதப் பிரதமர் யோசனை தெரிவிப்பார் என்றும் அறியப்படுகிறது.

இந்த யோசனை ஏற்கனவே இலங்கைக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக புது டில்லி செய்தி ஒன்று கூறுகிறது. இந்த யோசனைக்கு இணங்கலாமென்று டில்லி எதிர்பார்க்கிறதாம்.

இது பற்றி மலை நாட்டுத் தொழிற்சங்க வட்டாரங்களில் வினவிய போது, இது மலையக மக்களுக்குப் பாதகமான ஒரு யோசனையென்றும், இதனால் மொத்தம் 600,000 தமிழர்கள் இந்நாட்டிலிருந்து வெளியேறும் அபாயகரமான ஒரு நிலைமை ஏற்படுமென்றும் அவர்கள் கருத்து தெரிவித்தனர்'

'நாடற்றவர்கள்' என்பவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வது நல்லது' என்று திரு. தொண்டமான் இவ்வாரம் ராகலையில் ஒரு கூட்டத்தில் கூறியிருப்பதை மலையகத் தொழிற்சங்க வட்டாரங்கள் வன்மையாகக் கண்டித்தன.

அவரது விபரீதமான போக்கால் மலையக மக்களின் எதிர்காலம் இருண்டுவிடும் என்றும் கருத்து தெரிவித்த இந்த வட்டாரங்கள், இந்தியப் பிரசாவுரிமை பெறுவதற்கு யாரும் அவசரப்படக் கூடாதென்று கூறின. இதற்கு ஆதரமாக, பாரதத்தில் நிலவும் பொருளாதாரக் கஷ்டங்களையும், அண்மையில் சென்னையில் பத்திரிகை நிருபர்களிடம் சென்னை முதன் மந்திரி அறிஞர் அண்ணா இது பற்றி குறிப்பிடுகையில், 'மத்திய அரசாங்கம் அளிக்கும் உதவிக் கேற்ப இலங்கை—இந்தியரை தமிழ் நாடு ஏற்கும் விகிதாசாரம் இருக்கும்' என்று கூறியிருப்பதையும் இந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. மத்திய அரசாங்கத்தின் உதவி [illegible]நகமாக 'குதிரைக் கொ[illegible]ாகத்தான் இருக்குமாம். ஆகவே மலையகத் தமிழர்கள் தொண்டமான் கோஷ்டியின் பிரசாரத்தில் மயங்கிவிடக் கூடாதென்று இந்த வட்டாரங்கள் எச்சரித்தன.

---

# சுதந்திரன்

## விபரீத புத்திமதி

"இலங்கைவாழ் இந்திய வம்சாவளித் தமிழர்கள் இந்தியாவுக்குச் செல்வதே சிறப்பு' என்று திரு. தொண்டமான் இவ்வாரம் ராகலையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதாக ஒரு செய்தி கூறுகிறது. அதற்கு அவர் எடுத்துக்காட்டியுள்ள காரணம் இங்கு அவர்கள் உரிமைகளின்றி நாடற்றவர்களாக வாழ்கிறார்கள் என்பதே. அபகரிக்கப்பட்ட அவர்களின் உரிமைகளைப் போராடிப் பெற்றுக்கொடுக்க வேண்டியதே ஒரு தலைவரின் தலையாய கடமை. அதற்குப் பதிலாக, எல்லோரும் ஓடிப்போவதே சிறப்பு என்று கூறுதல் ஒன்று கோழைத்தனமாக இருத்தல் வேண்டும், இன்றேல் ஏதோ ஓர் அந்தரங்கத் திட்டத்தை அமுல் நடத்துவதற்காகச் செய்யும் ஆரம்பஏற்பாடாக இருத்தல் வேண்டும். எதுவாக இருப்பினும் திரு. தொண்டமானின் போக்கு விபரீதமானது—மலையகத் தமிழர்களின்நலன்களுக்கு மாறானதுஎன்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மலைக்காடுகளை வெட்டி மேடுறுத்தி, கொட்டும் பனியையும் அட்டைக்கடியையும் பொருட்படுத்தாது செந்நீரையும் கண்ணீரையும் கொட்டி, தேயிலைத் தோட்டங்களை உருவாக்கியவர்களும், தேசிய வருமானத்தின் பெரும்பகுதியை இன்றும் உழைத்துக் கொடுப்பவர்களும், பல்லாண்டுகளாக இந்நாட்டிலே வாழ்ந்து குடியுரிமை, வாக்குரிமைகளைப்பெற்று அனுபவித்து வந்தவர்களுமான ஏழைத் தொழிலாளர்களான தோட்டத் தமிழர்களைப் பார்த்து 'நீங்கள் இந்தியாவுக்குத் திரும்பிச்செல்வதே சிறப்பு' என்று கூசாமல் புத்திமதி கூறுவதற்கு என்ன நெஞ்சழுத்தம் வேண்டும்?

இலைதுஆண்டாண்டுகளாக உதிரத்தை உறிஞ்சிய பின்னர், எஞ்சிய சக்கையைத் தூக்கி பாக்கு நீரிணைக்கு அப்பால் எறியும் நன்றிகெட்ட செயலாகும் என்று கூறின் மிகையாகாது.

தென்னகத்திலே, வீடு, நிலம் சொந்தமாக உள்ளவர்கள், அங்கு கஷ்டமின்றி வாழ வசதியுள்ளவர்கள் இந்தியப் பிரசாவுரிமைபெற்று, திரும்பிச் செல்வதில்எமக்கு ஆட்சேபமில்லை.

ஆனால், பிறரின்கையை எதிர்பார்த்து, 'இந்திய அரசாங்கம் உதவி அளிக்கும்' என்ற வெறும் நம்பிக்கையைமட்டும் சுமந்து கொண்டு அக்கரை செல்ல முயற்சி செய்வது அறிவுடமையாகாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

இந்தியாவுக்கு வருபவர்கள் அங்குள்ள மக்களுடன் சேர்ந்து கஷ்டப்படுவதற்குத் தயாராகவே வரவேண்டுமென்றும் தி. மு. க. பிரமுகரும், தமிழக மூதவை உறுப்பினருமான திரு. சிற்றரசு அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது மலையக மக்களை எச்சரித்திருந்தார்.

அவரது எச்சரிக்கை இ. தொ. கா. மலையக மக்களிடையே நடத்தும் போலிப் பிரசாரத்தின் தன்மையை அம்பலப்படுத்தியுள்ளது.

ஆகவே, மலையகத் தமிழர்கள் இந்தியக் குடியுரிமை பெறும் விடயத்தில் அவசரப்பட வேண்டியதில்லை. அவதானித்து வருவதே சாலவும் நன்று. பித்தலாட்டப் பிரசாரங்களிலும் கட்டுக்கதைகளிலும் அவர்கள் ஏமாந்து விடக் கூடாது.

---

## 'அடையாள அட்டை வழங்க முடியாது' —எம். பி.

இன்றுள்ள சட்டப்படி நாட்டின் எந்தப் பகுதி மக்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட முடியாது. அப்படி வழங்குவதற்கு சட்டத்தில் வசதிகளில்லை. ஆகவே வட பகுதி மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவிருப்பதாக வந்த செய்தி ஆதாரமற்றது.' இவ்வாறு தமிழரசுப் பொதுச் செயலாளரும் வட்டுக் கோட்டை பா. உ. வுமான திரு. அ. அமிர்தலிங்கம் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

வடபகுதி மீனவர்களுக்கும் அவர்களது வள்ளங்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படவிருப்பதாக ஒரு தினசரியில் வெளிவந்த செய்தி பற்றி திரு. அ. அமிர்தலிங்கத்திடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:-

'நாட்டின் எப் பகுதி மக்களுக்காவது அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்றால் அது இன்றைய சட்டங்களின் கீழ் செய்ய முடியாது. அடையாள அட்டைகள் மசோதாவை நிறைவேற்றினால் மட்டுமே யாருக்கென்றாலும் அடையாள அட்டைகள் வழங்க முடியும்.

ஆனால் அடையாள அட்டைகள் மசோதா கொண்டுவரும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டுவிட்டது. எனவே வட பகுதி மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுமென்பதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது'

சினிமா உலகைக் கலக்கிய

# எம். ஜி. ஆர்.

கொலை முயற்சி வழக்கு

விசாரணை (முழுவதும்) புத்தகவடிவில்

வெளிவந்து விற்பனையாகின்றது!



88 பக்கங்கள்

வண்ணமுகப்பு

விலை ரூபா 1-00

வியாபாரிகளுக்கு 20 வீதம் கமிஷன் தரபபடும்.

பிரதிகள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்

குறிப்பிட்ட தொகைப்பிரதிகளே கைவசமிருப்பதால் தேவையானோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,
த. பெ. இல. 1183
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாளியும் தமிழும் கலந்தது சிங்களம்

## ஓர் ஆராய்வு

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி தமிழர்கள் என்பதில் நாம் பெருமைப்படுகின்ருேம். அத்தகைய மூத்த குடியில் பிறந்தவள் நம் முத்தமிழ் அன்னை. கால வெள்ளத்தால் அழியாத செந்தமிழ்ச் செல்வியின் கைகளிலே இருக்கும் இலக்கியச் சுவடிகளும், சரித்திரச் சான்றுகளும் தமிழின் பெருமையையும், தமிழர்களின் சிறப்பினையும் என்றும் இயம்பிக் கொண்டேயிருக்கும்!

சங்கம் வைத்து மொழி வளர்த்தவர்கள் தமிழர்கள். முதற் சங்கம், இடைச் சங்கம் கடைச் சங்கமென சங்க காலத்தை பிரித்துள்ளார்கள் இத்தகைய முதற் சங்கம் கி. மு. 7000 ஆண்டுகளும், இடைச் சங்கம் கி. மு. 2000 ஆண்டுகளும் கி. பி. 2ம்-நூற்ருண்டில் கடைச்சங்கமும் இருந்தன. திருவள்ளுவர் தந்த திருக்குறள்தான் தனித் தமிழ் நூல்களின் கடைசி நூலாகும். திருவள்ளுவரோடு பழந்தமிழ்ப் புலவர் வரிசையும் முடிவடைகிறது.

### நாகரும் இயக்கரும்

இலங்கைக்கு விசயன் வந்த போது இங்கு வாழ்ந்து வந்தவர்கள் நாகரும் இயக்கருமாவர். இவர்களுள் நாகர் மங்கோலிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பே மத்திய ஆசியாவிலிருந்துஇந்தியாவின் தென் பகுதியிலும் இலங்கையின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளிலும் குடியேறியவர்கள் இவர்களைப் போலவே இயக்கரும் ஒருவித மஞ்சள் நிற மங்கோலிய சாதியனராவர். இவர்கள் ஆரியரின் நெருக்கடியினுல் தென்னிந்தியாவிலும் இலங்கையின் மத்திய பகுதிகளிலும் தெற்கிலும் குடியேறியவர்கள்.

இப்படி இலங்கை முழுவதும் பரவியிருந்த இப்பூர்வ குடிகள் சைவ சமயத்தினரென்றும் திராவிட இனத்தினரெனவும் மகாவம்சம் கூறுகிறது. இதைவிட அன்றைய இலங்கை வேந்தன் இராவணன் ஒரு சிறந்த வீரன், சிவபத்தன், சைவசமயி, திராவிடன்—ஒரு தமிழன் என்று அறிஞர்கள் பலரும் ஒப்புக் கொண்டுள்ளனர்,

### விசயனுக்கு முன் தமிழர்

'சிங்கள மக்களின் நாகரிகம், சமயம், தமிழ் மக்களுடையதைப் பெரும்பாலும் ஒத்துள்ளன. அவர்களுடைய மொழி மகத நாட்டு மொழியும், தமிழும் கலந்துள்ளன' என 'பிறிற்ருேவும்' சிங்கள மக்கள் திராவிட இனத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினர் என்று 'கேக்க' லும் ஆரர்ய்ந்து கூறியிருக்கின்றனர். இவைகளிலிருந்து, விசயன் இலங்கைக்கு வரு முன்னர் இங்கு வாழ்ந்த மக்கள் தமிழர் என்பது சரித்திர உண்மை!

கி. மு. 1000ல் ஆரியரும், கி. மு. 300ல் கிரேக்கரும், கி. பி. 9 ம் நூற்ருண்டில் முகமதியரும், 17ம் நூற்ருண்டில் ஆங்கிலேயரும் தமிழ் நாட்டுக்கு வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிவாகும்.

### "நடமாடி"

வட இந்தியாவிலிருந்து இங்கு பரப்பப்பட்ட புத்த சமயத்தைப் பற்றிய பாலி நூல் மொழியும் தமிழ் மொழியும் கலந்து சிங்கள மொழி உருப்பெற்றது என்பது மொழியாராய்ச்சியினர் கண்ட முடிவு.

### ஈழத்தமிழரும் தமிழகத் தமிழரும்

இன்று மட்டுமல்ல, அன்றும் தென்னிந்திய மக்களுக்கும் இழங்கைத் தமிழ் மக்களுக்கு மிடையில் வேற்றுமையிருக்கவில்லை. பேசும் மொழி, நடை, உடை, பாவனை அத்தனைகளிலும் ஒற்றுமை உண்டு. இலங்கையையும் இந்தியாவையையும் பிலித்து நிற்கும் பாக்கு நீரிணை இன்று போல் விரிந்துமிருக்கவில்லை, அண்மையில் தானிருந்தது.

ஆங்காங்கு நடைபெற்ற பூமி அதிர்வினுலும் பிரளயங்களினுலும் யாழ்ப்பாணத்துக்கு மேற்கேயிருந்த ஒரு தீவு இன்று பல தீவுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டன. காரைதீவு, வேலணை, மண்டைதீவு, புங்குடுதிவு, அனலை தீவு, நயினுதீவு இவைகள் எல்லாம் ஒரு தீவகத்தின் பல பிரிவுகளாகும். இலங்கையின் மேற்குப் பகுதியில் ஒரு பாகம் கடல் வாய்ப்பட்டதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பக்கத்தேயுள்ள இந்தியாவும் இலங்கையும் நாட்டைப் பிரித்த கடற் கோள்களினுல் சிறிது தூரம் சென்று விட்டன. தென்னிந்திய மக்கள் எப்பொழுது தமிழ் பேசி, தமிழ்ப் பண்போடு விளங்கினுர்களோ அப்போதிருந்தே நாமும் அவர்களைப் போல வாழ்ந்திருக்கிருேம்.

இந்திய நாட்டிலிருந்து மத்தியதரைக் கடலோரங்களில் குடியேறிய பீனீசியர் என்னும் தமிழர் பிரமி எழுத்தையும் கொண்டு சென்றனர். இவர்களிடமிருந்து கிரெக்கரும், கிரேக்கரிடமிருந்து உரோமரும், அவர்களிடமிருந்து ஐரோப்பியரும் எழுத்தைத் தெரிந்து கொண்டார்கள்.

### கிரேக்க மொழியில் தமிழ்

பன்னெடுங்காலமாக இலங்கையோடு வணிகஞ் செய்தவர் கிரேக்கர், கிரேக்க மொழியில் பல தமிழ்ச் சொற்கள் கலந்திருக்கின்றனர். அரிசி, இஞ்சி, கறுவா என்பன சில எடுத்துக்காட்டுகளாகும்.

அயர்லாந்து நாட்டில் இன்றும் சிவலிங்கத்தை வைத்து வழிபட்டு வருகிருர்கள். தமிழருடைய பண்புகள் பல அங்கே இருக்கின்றன. அமெரிக்க நாட்டு எழுத்தும் மொழியும் தமிழினத்தையுடையது எனப் 'பிரட்றிக்றைட்' என்பவர் ஆராய்ந்து கூறியுள்ளார்.

இவைகளிலிருந்து பண்டைத் தமிழன் பெருமை, அவன் பண்பு, கலை, வீரம் எத்தகையது என்பதை நாம் அறியலாம்! இன்று தன்னிலையைத் தமிழன் மறந்திருந்தாலும், உலகம் அவனை என்றுமே மறவாது!

---

# தமிழ் நாடகங்கள் பின் தங்கியுள்ளனவா?

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

'உண்மையான பியர் (Beer) போத்தலை உடைத்துக் குடிப்பதையும், கிளாசை நொறுக்குவதையும் பார்த்துவிட்டு அந்த யதார்த்த(!) அருட்டுணர்வின் கைதட்டுவதற்கும் நடிப்புக்கும் என்ன உறவோ?'

'கதைக்கும் கீழைத்தேய பண்பாட்டிற்கும் என்ன சம்பந்தம்?'

'இந்த நாடகம் அல்லது ஒரு காட்சி எவருடைய மனத்லாவது சிறு சலனத்தையேனும் ஏற்படுத்தியதா?'

'ஒரு நாடகம் பார்த்த உணர்ச்சியே சிறிதும் இல்லையே?

இதெல்லாம் என்ன என்று யோசிக்கின்றீர்களா? சமீபத்தில் யாழ்ப்பாணத்தில்மேடையேற்றப்பட்ட ஒரு சிங்கள நாடகத்தைப் பார்த்தவர்கள் கூறிய பரவலான விமர்சனங்களே தான் இவை அத்தனையும்.

இப்படியான கருத்துமணிகள் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட எந்தத் தரமான நாடகத்துக்கும் கூறப்பட்டதே இல்லை என்று துணிந்து கூறலாம். ('தரமான' என்று ஏன் குறிப்பிடுகின்றேனென்ருல் குறிப்பிட்ட அந்த நாடகம் தரமானது என கூறப்பட்டதாலும், தரங்கெட்ட நாடங்கள் யாழ்ப்பாணத்திலும் 'தனியாக' உண்டு என்பதனுலுமேயாகும்.)

### குறைகாண முடிந்ததா?

இதுவரை எத்தனையோ நாடகங்கள் மேடையேற்றப்

**மு. கனகராசன்**

பட்டிருக்கின்றன: அவற்றிடையே நாம் சிலாகித்துச் சொல்லக் கூடியனவும் சில இருக்கத்தான் இருக்கின்றன. அந்த நாடகங்களில் என்ன குறை காணக்கிடக்கிறது, கதையில் முரணு? காட்சிகளில் குறையா? பாத்திரங்களிற் குற்றமா? வேடத்தில் பிழையா? நடிப்பில் தவரு? வசனங்களில் வழுவா? எதை எதைக் காட்ட முடியும்?—எதுவுமே இல்லை.

அதோடு இந்த உண்மையையும் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். — யாழ்ப்பாண (ஆமாம்) நாடக உலககம் உள்ளத்தைக் கொண்டு நல்லத்தைச் செய்யும் நிலையிற்ருன் இன்னமும் இருக்கின்றதே தவிர நல்ல வசதிகளை யெல்லாம் கொண்டு உள்ளதைச் செய்யும் நிலைக்கு வரவில்லை. எனவே இதற்காகப் போய் 'தமிழ் நாடக உலகம் நீண்ட தூரம் நடக்க வேண்டும்' எனக் கூறுவது பச்சையான பாமரத்தனமேதான்'

### நமது மக்களின் ரசனை

நமது ரசிகர்களைப் பற்றியும் சிறிது கூறத்தான் வேண்டும். அந்தப் பெருமக்களின் ரசனை நம்மால் உருவாக்கப் பட்டதல்ல. [illegible] பொன்ற 'மொழமொழ' வென்ற வண்ணங்களையும் வெண்திரை பேர்வழிகளின் 'கை, வாய், உடல் சேஷ்டை' களையுமே பார்த்துப் பார்த்து வளர்ந்தவர்கள்( ) அவர்கள். ஆனல் உணர்ச்சிகளும், கருத்துகளும், உண்மைகளும் மொழு மொழு வென்ருே வெள்ளை வெளேரென்ருே என்றுமே இருந்ததில்லை. எனவே நமது நாடக இயக்குநர்களின் சங்கடம் இரட்டிப்பாகிறது. தண்ணீரையே பருகிவந்த 'குடல்' சத்தான பதார்த்தங்களை இலகுவில் தன்மயமாக்காது என்பதனுற்ருன்.

### நமது நிலையும் மற்றையோர் நிலையும்

சத்தியஜித்ரே போன்ற இயக்குநர்களின் சினிமாப் படங்களே (நாடகமல்ல) வசூல் தராமல் இன்னமும் இலட்சியப் படங்களாகவே இருக்கும்போது நாடகங்களின் நிலையை என்னென்று கூறுவது? ஈழத்துத் தமிழ் நாடக மேடைகள் இலட்சியங்களைத் தாங்கத் திராணியற்றது.

ஏன்?

நெஞ்சின் நினைவுகள் மட்டும் கலையாகாது என்பதால்.

கலையின் நினைவுகள் மட்டும் சோருகாது என்பதால், ஆமாம்!

மாலிக்கபூர், எதிர் நீச்சல், வாஷிங்டனில் திருமணம் என்பனவெல்லாம் வெற்றிகரமாக மேடையேற்றப்படுகின்றன வென்ருல் அதன் காரணம் 'வசதிகளும்' அதனுல் அவை 'ஹவுஸ்புல்லாக ஓடுவதும் தான்.

நாமோ இன்னமும் வீடு தேடிப் போய்த் தானே டிக்கட் விற்கவேண்டியுள்ளது. இரசிகர்களிடமேதேடிப்போய் விற்க வேண்டியதாயிருக்கும் போது 'விசிறி'களைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை.

நம் ரசிகர்களும் உள்ளூர் விஷயத்தில் எப்போதுமே சந்தேகப் பிராணிகள் (மன்னிக்கவும்) தான். ஒரு பெஷனும் (fashion) கூடத்தானே எனவே 'பெரியவாள்' களோடு சேர்த்து இவர்களுக்கும் ஒரு நம்பிக்கை சொல்லத்தான் வேண்டும்:—தயவு செய்து நீங்கள் திறந்த வெளியரங்கு நாடகங்களை மாத்திரம் கொண்டு தமிழ் நாடக உலகை விமர்சிக்காதீர்கள், 'தமிழ் நாடகங்களில் என்ன இருக்கின்றன' என்று எவரும் கேட்டால் அவர் தரமான தமிழ் நாடகத்தைப் பார்க்கவில்லை என்றே அர்த்தம். அவர் ஏன் தரமான நாடகங்களைப் பார்க்கவில்லை. என்ருல் அந்த நாடகங்கள் தரமானவை என்ற ஒரே காரணம் தான்.

### எனது நம்பிக்கை

ஒரே தைரியமான வார்த்தையை மாத்திரம் நான் நம்பிக்கையோடு கூறமுடியும். இனி உருவாக்கப்படும் எந்த நாடகமேனும் இலவசமாக மேடையேற்றவென்று தயாராகாது. விசில்வசன பகிடி' கூத்துகளும் (நகைச் சுவையல்ல) எடுபடாது. எனவே தரமான நாடகங்களையே எதிர்பார்க்கலாம். இது சர்வ நிச்சயம். இதுவே அந்த நம்பிக்கை.

'தமிழ் நாடகம்' என்றவுடன் 'பின் தங்கிய நிலையிலுள்ளது' என்ற குரல் இன்றும் கேட்கத்தான் கேட்கிறது. இந்த மதிப்பீடும் சிங்கள நாடகங்களைக் கொண்டே கடாட்சிக்கப்படுகிறது.

நவீன உத்திகள் இல்லையாம். அவர்கள் கூறுவது டெக்னிக்குகளைப் பற்றித் தான். ஓ... விஞ்ஞான பூர்வமான வளர்ச்சியைத் தான் சொல்கின்ருர்கள்.

### அர்த்தமற்ற கூச்சல்!

ஆனல் தமிழ் நாடகக் கலைஞர்கள் பின் தங்கிய நிலையிலுள்ளார்கள் என்று எவரும் கூறவில்லையே. அப்படிக் கூருததையிட்டு நாம் ஒவ்வொருவரும் மார்தட்டிக் கொள்ளத் தான் வேண்டும்.

(14-ம் பக்கம் பார்க்க)

---

# கவிதைப் பூங்கா

## புது முறைக் கவி அரங்கு—(3)

கவிஞர்களே!

இங்கு விளக்கப்படும் நிகழ்ச்சியைக் கொண்டு ஒரு கவிதை இயற்றி அனுப்புங்கள். கவிதை வெண்பாவாகவோ, விருத்தமாகவோ, வேறு எவ்வகையாகவோ இருக்கலாம். 14-9-67 க்கு முன்னர் கவிதை அனுப்பப்படல் வேண்டும்.

### நிகழ்ச்சி

தேவன் ஒருவன் விண்ணுலகிலிருந்து இவ்வுலகிற்கு வருகிருன். உலகின் பல நாடுகளையும் பார்த்துவிட்டு ஈற்றில் ஈழ நாட்டிற்கு வருகிருன். ஈழத்தின் இயற்கையழகை ரசித்த அவன் ஈழத்தின் இயற்கை அழகு பற்றி ஒரு கவிதை பாடுகிருன். அவன் பாடியதாகக் கற்பனை செய்து ஒரே ஒரு கவிதை மட்டும் இயற்றிஅனுப்புங்கள். கவிதைகளிற்சிறந்தவை 26-9-67-ந் திகதி சுதந்திரனில் வெளிவரும். மிக மிகச் சிறந்த கவிதைக்கு ஒரு பரிசும் உண்டு.

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

புது முறைக் கவிதை
'சுதந்திரன்'
த. பெ. எண் 1183
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மிராண்டா,
கருக்குப்பனே.

கே: ஒருவன் ஒருத்தியைக் காதலித்த பிறகு, அவன் வேறொரு கன்னியைக் கைபிடித்தால் காதலித்த பெண்ணின் கதியென்ன?

ப: அவள் வேறொரு காளையைக் கைப்பிடிக்க வேண்டும்.

ஃ

இழப்பார் அறியாதவன்,
இலுப்பைக்குளம்.

கே: என் நண்பன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறன். ஆனல் அவளோ நண்பனைவிட்டு என்னைக் காதலிக்கின்றள். நான் நண்பனுக்காகக் காதலை இழப்பதா?

ப: நீங்கள் காதலிப்பதாகக் கூறவில்லையே. எனவே காதலை இழக்கும் பிரச்சினை உங்களுக்குக் கிடையாது.

ஃ

ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்.

கே: தி. மு. க. வின் திட்டங்களுக்கு ஈ. வே. ரா. அவர்கள் ஆதரவு அளிப்பது போல இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நல்ல திட்டங்களுக்கு திரு. ஜீ. ஜீ. ஆதரவு அளிக்க முன்வருவாரா?

ப: வைக்கம் சத்தியாக்கிரக வீரர் ஈ. வே. ராவுடன் ஜீ. ஜீ யை ஒப்பிடாதீர்கள்! தமது வாழ்நாள் முழுதும் சமுதாயச் சீர்கேடுகளைத் துணிவுடன் கூறி வருபவர் ஈ. வே. ரா. தீண்டாமையைப்பற்றி கூட வாய் திறக்கப் பயப்படுகிறரே ஜீ. ஜீ. ஈ. வே. ரா. எங்கே? ஜீ. ஜீ. எங்கே?

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: சென்னையில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதற்கு காங்கிரஸ்காரர்கள்தான் காரணம் என சிலர் கூறுகிறர்களே இது உண்மையா?

ப: காங்கிரஸ்காரர்கள்சிலர் காரணமாக இருக்கலாம். ஆனல் காங்கிரஸ் காரணமாக இருக்க முடியாது. வேறு எந்த அரசியற் கட்சியும் காரணமாக இருக்க முடியாது.

ஃ

எம். பாத்துமுத்து,
ஏருவூர்.

கே: குயுக்தி! உனக்குச் சோதிடம் சொல்லத் தெரியுமோ?

ப: தெரியும் அரசியல் சோதிடமும் காதல் சோதிடமும்.

ஃ

எம். எம். கே. டீன்,
உடப்பு.

கே; சில இளம் பெண்களின் வாயில் இருந்து எந்நேரமும் சினிமாப் பாடல் வந்த வண்ணமே இருக்கின்றது. இதன் காரணம் என்ன?

ப: பக்திதான் காரணம் சினிமா மீது.

ஃ

யாழினி,
மன்னிப்பட்டினம்.

கே: திரு. பொன்னம்பலத்தைப்பற்றி ஏதாவது திட்டி எழுதிக்கொண்டு இருப்பதாற்தான் சுதந்திரன் வியாபாரம் பெருகிறது எனச் சிலர்கூறுகிறர்களே?

ப: அந்த அளவுக்கு அவர் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறதா?

ஃ

'மங்களவாசம்',
திருகோணமலை.

கே: 'மாவட்டசபை நிறுவுதல் என்றல் என்ன?

ப: மாவட்டம்தோறும் நிர்வாக விடயங்கள் சிலவற்றை கவனிப்பதற்காக மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட சபைகளை அமைத்தல்.

சிவாசி,
முள்ளியவளை.

கே: தீண்டாமைக்கு எதிராக வாதாடி வெற்றிகண்ட வழக்கறிஞர் தீண்டாமை எதிர்ப்பு இயக்கம்தொடங்குமுன்—அதாவது சுமார் 15 வருடங்களுக்கு முன்பு இவர் என்ன சாதியை சேர்ந்தவர்?

ப: இன்றுபோல் அன்றும் அவர் மனிதசாதியைச் சேர்ந்தவராகத்தான் இருந்தார் தீண்டாமை என்று தோன்றியதோ அன்றே தீண்டாமை எதிர்ப்பும் தோன்றிவிட்டது. எனவே 15 வருடங்கள் என்று கூறுவது தவறு.

ஃ

மன்னர்மணி,
மன்னர்.

கே: சிங்களம்மட்டும் சட்டம் போகும் போக்கையும் கல்விமந்திரியின் போக்கையும் பார்த்தால் தமிழருக்கு நெருக்கடியான காலம் மிகச் சமீபத்திலிருக்கிறதல்லவா?

ப: அஞ்சவேண்டாம்! தமிழரசுக்கொடியின் கீழ் திரண்டு நிற்கும்வரை அஞ்சவேண்டியதில்லை.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> 194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
> கொழும்பு-12

பி. எஸ். மார்க்கண்டு,
களுதாவளை.

கே: பணம் பெரிதா? மனிதன் பெரியவனு?

ப: மனிதன் பெரியவன்! பணம் மனிதனின் சிருஷ்டி! ஆனல் பணமே மனிதனைப் பெரியவனுக்கியுள்ளது. மனிதனே பணத்தைப் பெரியதாக்கியுள்ளான்.

ஃ

இ. தர்மபாலன்,
நெடுங்கேணி.

கே: தற்போது சில பெண்களின் ஆணவப் பேச்சும் அதிகாரத் தோரணையும் அடங்கிவிட்டதே, சிறிமாவின் வீழ்ச்சிதான் இதற்குக் காரணமா?

ப: எப்படி அடங்கும்? இந்திரா இன்னும் பிரதம மந்திரியாக இருக்கிறரே!

கே: உலகத்தைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருந்தால் என்ன நடக்கும்?

ப: நீங்கள் ஓர் உலகப் பிரஜையாகி விடுவீர்கள்.

ஃ

அ. ஜஸ்டின்,
கருக்குப்பனே.

கே: ஒருவன் தாயையா! தனது மனைவியையா விஷேடமாகக் கவனிக்கவேண்டும்?

ப: தாயை மனைவியுடன் ஒப்பிடுவது தவறு—இருவரையும் கவனிக்க வேண்டியது அவனுடைய பொறுப்பு.

ஃ

கந்த. ஞானமுத்தன்,
கைதடி தெற்கு.

கே: சிறிமா-சாத்திரி ஒப்பந்தம் அமுலாகி விட்டதைப் பற்றி பொ. கட்சியினர் என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளனர்?

ப: இன்னும் அந்த ஒப்பந்தம் அமுலாகவில்லை. பொ. கட்சியினர் அதனை பாராளுமன்றத்துள் ஆதரித்தனர். வெளியே வந்து எதிர்க்கின்றனர்.

கே: வடமாகாணத்தில் சில கோவில்கள் சிறுபான்மைத் தமிழருக்காக திறந்துவிட்டிருப்பதைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: சாதிப் பேய்களை இதர கோவில்களிலிருந்தும் விரட்டுவதற்கு இது ஆரம்பப் பூசை.

கே: மத்திய கிழக்கில் மீண்டும் யுத்தம் ஏற்படப் போகிறதாமே...?

ப: ஆம், அதைத்தவிர அங்கு வேறு வழிகிடையாது.

ஃ

ஜீ. ஜீ. பிரமுகர்,
கொழும்பு-12.

கே: ஐந்தேகால் லட்சம் மலைநாட்டுத் தமிழர்களை நாடுகடத்தல் செய்யும் சட்டத்தை தமிழரசுக்கட்சி ஆதரித்து, அவர்களுக்கு துரோகம் செய்துவிட்டது என்று ஜீ. ஜீ. பிரசாரம் செய்கின்றரே!

ப: அப்படியா? அவரும் தான் ஆதரித்தார். அந்த 'துரோகத்தில்' அவருக்கும் முழுப்பங்கு உண்டு. அச்சட்டத்தில் நாடுகடத்தல் எதுவும் கிடையாதே!

கே: தீண்டாமை விடயமாக பொன்னம்பலம் தனது கொள்கையை தமிழ் மக்களுக்கு விளக்க இன்னும் முன்வராதது ஏன்?

ப: வாக்குவேட்டை பாதிக்கும் என்பதுதான் காரணம்.

கே: மாவட்ட சபையை எதிர்த்து எதிர்த்து படுதோல்வி கண்ட பொன்னம்பலம் தற்சமயம் என்ன செய்து கொண்டிருக்கிறர்?

ப: ஓய்வெடுப்பதற்காக காட்டாறுமாசம் செல்லத் தயாராகிக் கொண்டிருக்கிறராம்.

கே: திரு. பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதை நிறுத்திவிட்டாரா?

ப: அப்படி நீங்கள் கூறுவதில் தவறில்லை என்றுதான் தெரிகிறது. ஏனெனில் மிக முக்கியமான வரவு-செலவுத் திட்ட விவாதத்திலும் கூட பங்குபற்றவில்லையாம்.

ஃ

விஜயலட்சுமி,
வேலணை.

கே: ஒரு பெண்ணுக்கு அழகு எது?

ப: வாடிவீட்டுப் பக்கம் போகாதிருத்தல்.

ஃ

எஸ். கமலநாதன்,
கொழும்பு-6.

கே: சீன இலங்கை மீது யுத்தப் பிரகடனம் செய்து விட்டதாமே!


ப: இல்லை, இங்குள்ள சீனத் தூதராலயம் இலங்கை அரசாங்கத்துக்கு ஒருஎச்சரிக்கைக் குறிப்பு அனுப்பியுள்ளது. அது யுத்தப் பிரகடனம் போல இருக்கிறது. அவ்வளவுதான்!

ஃ

எஸ். ஜோசப்,
நீர்கொழும்பு.

கே: இலங்கை அரசாங்கத்துக்கு சீனத்தூதர் செய்துள்ள இறுதி எச்சரிக்கையைப் பார்த்தால், சீன தன் கைவசமுள்ள அணுகுண்டுகளிலொன்றை நம் தலையில் போட்டுவிடுமோ என்று பயமாக இருக்கிறது.

ப: பயப்பட வேண்டாம்! சீன அப்படிச்செய்யாது. ஏனெனில் சீன முதலில் அணுகுண்டைப் போடாது என்று பிரதமர் சூ என் லாய் கூறியுள்ளார்.



பருவம் சொல்லும் பாடம்

சென்னையில் நர்சுகளுக்கு மர்ம காய்ச்சல்.

—செய்தி.

—பருவக்காய்ச்சலாக இருந்தாலும் இருக்குமோ?

பின்னர் என்றல் இல்லை!

நேருவின் வாக்குறுதியை சட்டமாக்குவது பின் போடப்பட்டது.

—செய்தி.

—பின்னர் என்பதும்பிறகு என்பதும் இல்லையென்பதற்கு அடையாளம் என்பது ஒரு முதுமொழி.

இதற்கு பரீட்சை இல்லையா?

வெளி நாட்டு விதை நெல்லை பரீட்சித்துப் பார்க்காமல் கொடுக்கக் கூடாதென அரசாங்கம் எச்சரித்துள்ளது.

—செய்தி.

—விதை நெல்லுக்கு மட்டும்தானு இது? வெளி நாட்டிலிருந்து இநநாட்டில் விதைக்கப்படும் ஆபாச சஞ்சிகைகளுக்கும், ஆபாச சினிமாக்களுக்கும் ஆபாசக் கருத்துக்களுக்கும் 'சோதனை' போட வேண்டாமா?

பெற்ரேல் தண்ணீர் ஆகுமா?

புங்குடுதீவில் பெற்ரேல் ஊறுகிறது.

—செய்தி.

—பெற்ரேல் ஊறி என்ன பிரயோசனம் தண்ணீர் ஊறுத போது என்கிறர் ஒரு தீவு வாசி.

மழை வெள்ளம் வேண்டாம்?

வயல்களில் இனி இசை வெள்ளம் பாயும்.

—செய்தி.

—விவசாயத்துக்கு மழை வெள்ளத்தை விட இசை வெள்ளம் தான் தேவையென்பது நவீன விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புபோலும்!

வரப்புயர......!

விவசாய அமைச்சுக்கு ஒன்பது மாடிக் கட்டடம் கட்டப்படும்.

—செய்தி.

—"வரப்புயர" மாடி உயர்கிறதோ? என்கிறர் ஒரு விவசாயி.

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலையை மீண்டும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்க!

—உடுவில் எம். பி.

## அழுவதா? சிரிப்பதா?

"சந்தேகி"

காடாய்க் கிடந்த மலைநாட்டை வெட்டித் திருத்தி பொன் விளையும் பூமியாக்கி, இந்நாட்டின் வளத்துக்காக தங்கள் உடலையும் உதிரத்தையும் கொடுத்த மலைநாட்டுத் தமிழ் தொழிலாளிகளை எப்படியாவது இந்தியாவுக்கு 'கலைத்துவிட' வேண்டுமென்று படாத பாடுபட்டு வருகிறார் மலையக மக்களின் தலைவர் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் ஒருவர்.

இந்த நாட்டுக்காக தொண்டுசெய்தது போதும், இனி அந்தமான் சென்று அவதிப்படுவோம் வாரீர், வேண்டுமானால் பாக்கையும் தேங்காயையும் மூட்டை கட்டிக்கொண்டுசெல்லலாம் என்று அழைப்பு விடுகிறார் இந்த 'மான்'.

மலைநாட்டுத் தமிழர்களுக்காக, போராடுகிறோம், உயிரையும் கொடுக்கிறோம் என்று கூறி மலைநாட்டுத் தமிழ்மக்களை இதுநாள்வரை ஏமா[illegible] வந்தவர்களைப் பற்றி மலைநாட்டுத் தொழிலாளி இன்று சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறான்.

மலைநாட்டுத் தொழிலாளரின் சந்தாப்பணத்தில் முன்னேறி, ஜெனிவாவுக்கும் ஏனைய வெளிநாடுகளுக்கும் இதுநாள்வரை பறந்த தலைவர், இப்பொழுது மலைநாட்டு தமிழ்மக்களை அக்கரை அனுப்புவதற்கு மும்முரமாக முயலும்போது தான், அவரது கபடவேடத்தை உணரமுடிகிறது தோட்டத் தொழிலாளியால்.

பாக்கும் தேங்காயும் கொண்டு செல்லலாம் என்று கூறிவிட்டு பின்னர் அதற்கு விளக்கம் வேறு. இன்னுமா மலைநாட்டுத் தமிழ்த்தொழிலாளி ஏமாறுவான?

அந்தமானுக்கு அனுப்ப முயலும் தலைவரின் முகமூடி கிழிக்கப்பட்டு விட்டதால், மலைநாட்டுத் தொழிலாளி நிலைமை புரிந்து அவரது தொழிற்சங்கத்தை விட்டே வெளியேற ஆரம்பித்துவிட்டான். ஈற்றில் அந்தமான் போவது அந்த 'மான்' தானு?

ஈழத்தின் இலக்கியத்தை வளர்ப்பதற்காக கல்வியமைச்சு புதிய பரிசுத்திட்டம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதாம். பிரதமர் பரிசுத்திட்டம் என்று அதற்குப் பெயராம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்படும் சிறந்த சிருஷ்டிக்கு ரூபா 25,000, 10,000, 5000 என்று பரிசுகள் வழங்கப்படுமாம். வசனநடை இலக்கியம், கவிதை, தொழில் முறைக்கலை, சித்திரம் சிற்பம், சங்கீதம் ஆகிய ஐந்து துறைகளிலும் பரிசுகள்வழங்கப்படுமென்று சொல்லப்படுகிறது. இது ஒரு நல்ல திட்டம்தான்.

ஆனல் ஒன்று. இப்போதுள்ள சாகித்திய மண்டலத்தில் நடைபெறும் 'திருவிளையாடல்கள்' பிரதமர் பரிசுத்திட்டத்திலும் தொற்றிவிடக் கூடாது என்பதே நமது ஆசை. அதில் அமைச்சு கவனமெடுக்கவேண்டும்.

அடுத்தது கல்வியமைச்சிற்கு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கெட்டபெயர், தமிழ், சிங்களம் என்று பாரபட்சம் காட்டுவதாக. பிரதமர் பரிசுத் திட்டத்திலும் 'பாரபட்ச' அம்சங்கள்இடம் பெறுமற் பார்த்துக்கொள்ளுமென்று எதிர்பார்க்கலாமா?

வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது சென்ற கிழமை பாராளுமன்றத்திலே எதிர்க்கட்சியிலிருக்கும் கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த கற்றுக் குட்டி உறுப்பினர் ஒருவ தமிழரசுக்கட்சியை வாய் வலிக்குமளவுக்கு திட்டித் தீர்த்து [illegible]ந்தோஷமடைந்தார்.

குறித்த [illegible]றுப்பினர் பேசுவதை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் புன் சிரிப்புடன் கேட்டிருந்தனர்.

ஆனல் கட்சியின் இளம் உறுப்பினர்கள் பொறுத்துக் கொண்டு இருப்பார்களா? குறித்த உறுப்பினரின்வாதங்களை அக்கு வேறு ஆணி வேருக்கினர்.

தி. மு. க. ஆதரவாளன் என்று இந்த உறுப்பினர் தம்மைக் கூறிக்கொள்வது வழக்கமாம். ஆனல் தி. மு. க. பூச்சாண்டி காட்டும் சுதந்திரக்கட்சியில் உறுப்பினர் இவர்.

இவர் சுதந்திரக்கட்சியில் இருப்பது ஏன் தெரியுமா? தனது பதவியை நிரந்தரமாகப் பாதுகாத்துக் கொள்ளத்தானே தவிர கட்சிக் கொள்கையை ஆதரித்தல்லவாம்.

சுதந்திரக்கட்சியில் இருந்தால் மட்டுமே சிங்கள மக்களின் ஆதரவுடன் இரண்டாவது எம். பி.யாக வரலாம் என்பதால்தான் இவர் சுதந்திரக்கட்சியில் இருக்கிறாராம்.

ஐயகோ, என்ன உலகம்? பதவிக்காக கட்சியா? கட்சிக்காக பதவியா?

இலங்கைக்கு வரும் இந்திய தி. மு. க. தலைவர்கள் யாரும் பொ. கட்சியைச் சேர்ந்தவர்களை இதுவரை சந்தித்ததில்லை. இதற்குக் காரணம் பொ. கட்சியினரின் மொழித்துரோக, இனத்துரோக நடவடிக்கைகளை தி. மு. க. தலைவர்கள் தெரிந்து வைத்திருப்பது தான்! தமிழ்மொழிக்காக தீக்குளிப்பவர்கள் நிரம்பிய தி. மு. க. வைச் சேர்ந்தவர்களுக்கும், பதவிக்காக இனத்தை விற்ற பொ. கட்சியினருக்கும் என்ன உறவு இருக்க முடியும்?

அண்மையில் ஈழத்துக்கு பல தி. மு. க. பிரமுகர்கள் வந்தார்கள், புரட்சி நடிகர் வந்தார், இலட்சிய நடிகர் வந்தார், மைனர் மோக[illegible]

(11-ம் பக்கம் பார்க்க)

'மலையாளம் புகையிலை யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாக்கப்பட்டு மலையாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது இந்த ஏற்றுமதி இன்று தடை செய்யப்பட்டு இருக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து மலையாளம் புகையிலை இன்று மலையாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. ஆகையால் இலங்கை இந்தியாவுக்கு ஏராளமான பணம் கொடுக்க வேண்டிய இந்த நேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மலையாளம்



புகையிலையை மீண்டும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யவேண்டிய வாய்புக்களையும் வசதிகளையும் இலங்கை ஏற்படுத்த வேண்டும். இலங்கை இதனல் பலனடையும்.

'இலங்கைப் பிரதமர் அவர்கள் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வரும்பொழுது இது பற்றிப் பேசி யாழ்ப்பாண மலையாளம் புகையிலையை மீண்டும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளார் உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம்.

இந்த ஆலோசனையை அவர் வரவு செலவு திட்ட விவாதத்தின் போது சமர்ப்பித்தார்.

திரு. தர்மலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

'இதுவரையிலே சிறு கைத்தொழில்களுக்காக வசூலிக்கப்பட்ட 5% பொருளுற்பத்தி வரியை—ஒரு வீதமாகக்குறைத்ததையிட்டு நான் அமைச்சரவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். தமிழரசுக் கட்சியின் சார்பில் நல்லூர்ப் பிரதிநிதி அவர்களும், கோப்பாய்ப் பிரதிநிதி அவர்களும் 1966 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19 ஆம் தேதி நிதி அமைச்சரவர்களைச் சந்தித்து இந்த பொருளுற்பத்தி வரியை குறைக்க வேண்டும் அல்லது இல்லாமல் செய்ய வேண்டும்; அப்படிச் செய்தால் தான் யாழ்ப்பாணத்திலே இருக்கும் சுருட்டுத் தொழிற்சாலைகள் இயங்க முடியும், வளர முடியும்; என்று வற்புறுத்தியது அமைச்சரவர்களுக்கு ஞாபகமிருக்கும் என நினைக்கிறேன்.

இதன் பின்னர் திரு. [illegible]

(11-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பகுதிகளிலே..

★ இலங்கை சாகித்திய மண்டலப் பரிசளிப்புக் குழுவினரின் சாகித்திய விழா இம்முறை முதன் முறையாக திருக்கோணமலையில் நடைபெறும் என திருக்கோணமலைக்கு விஜயம் செய்த திரு. சதாசிவம் தெரிவித்தார்.

★ இன்னும் இரண்டு மாதத்திற்கிடையில் திருமலை 9 ம் வட்டாரத்தில் 4000 ரூபா செலவில் நகரசபைப் படிப்பகம் உருவாகுமென 9 ம் வட்டார உறுப்பினர் திரு. வீ. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

★ யாழ்நூல் தந்த விபுலானந்த அடிகளின் நினைவு விழாவைத் திருகோணமலை விபுலானந்த இயக்கத்தினர் இம்மாதம் கொண்டாட இருக்கின்றனர்.

★ யாழ்ப்பாண மாவட்டத்தின் சில பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம் ஏற்றுமதி செய்வதில் ஏற்பட்டுள்ள கஷ்ட நிலையினல் அப்பகுதி வெங்காயம் விற்பனை செய்ய முடியா திருப்பதோடு விவசாயிகளுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

★ யாழ் மாவட்டத்தில் மேலும் இரு குடியேற்றத் திட்டங்களில் படித்த வாலிபர்கள் குடியேற்றப்படவிருக்கிறார்கள். விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படவிருக்கின்றன.

★ மட்டக்களப்பில் நவீன வசதி கொண்ட தபால் நிலையத்திற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

★ இளவாலைக்கு மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. இதற்கான ஆக்க வேலைகள் மேற்கொள்ளப்படுவதாக விளானில் நடந்த விழா ஒன்றில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிட்டார்.

★ புங்குடுதீவு மக்களின்குடி தண்ணீர்க் கஷ்டத்தை நீக்குமுகமாகச் சமூக சேவைப் பகுதியினர் தற்போது கூப்பன் ஒன்றுக்கு அரைக்கலன் தண்ணீர் வழங்கி வருகின்றனர்.

★ வவுனியாவுக்கு சுமார் இரண்டு ஆண்டுகளாக வைத்திய அட்சகர் நிரந்தரமாக இல்லாது இருப்பதால் வவுனியா முல்லைத்தீவு மன்னர் ஆகிய இடங்களுக்குப் பல அத்தியாவசியத் தேவைகள் தடைப்படுகின்றன.

★ சுழிபுரம் கிராமசபையின் பன்னிரண்டாம் வட்டாரத்தை பண்ணாகம், சித்தங்கேணி என இரு வட்டாரங்களாக ஆக்கும்படி அவ்வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு பகுதி மக்கள் கௌரவ உள்ளூராட்சி அமைச்சரை வேண்டியுள்ளனர்.

★ யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் பிறக்கும் பிள்ளைகளின் பிறப்பை தமிழில் பதிவதில்லையென பொது மக்கள் புகார் செய்துள்ளனர்.

★ 'இன்னும் 3 மாதகாலத்தில் யாழ்ப்பாணத்திற்கு சிறந்த பஸ் சேவை அளிக்கப்படும். இந்த மூன்றுமாத காலத்தில் கோண்டாவில் மத்திய டிப்போவின் குறை வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும்' இச்செய்தியை சாவகச்சேரியில் நடந்த விழா வொன்றில் இ. போ. ச. அதிபர் ஆர். டி. சில்வா தெரிவித்தார்.

★ தரமான வட இலங்கைப் பொதுப்போக்குவரத்து பிரயாணிகள் சம்மேளனம் ஒன்றை உருவாக்கும் விஷயத்தில் சமூக சேவைப்பகுதியைச் சேர்ந்த அமைப்பாளர்முயற்சி செய்து வருகிறார்.

★ பொன்னாலை குளத்துக்கு அருகில் புதிய கிணறுகள் வெட்டி அக்கிணற்று நல்ல நீரை குழாய்கள் மூலம் காரைநகருக்கு விநியோகம் செய்வதற்கான திட்டத்தை அமுல் நடத்துவதற்கான ஆராய்ச்சியில் நீர்ப்பாசன இலாகா நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.

★ காரைநகரில் ஒரு உப்பளத்தையும் மீன் பிடித் துறைமுகத்தையும் அமைத்துத் தருமாறு காரைநகர் பொது நலச் சங்கம் மீன்பிடி இலாகா டைரக்டருக்கும் உப்பு இலாகா அத்தியட்சகருக்கும் மகஜர்களை அனுப்பியுள்ளது.

★ தோப்பூர் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞானம் போதிப்பதற்கான விஞ்ஞானப்பட்டதாரிகள் இல்லாமையால் மாணவர் பெரிதும் இடர்ப்படுகிறார்கள்.

★ வல்வெட்டித்துறையிலுள்ள ராணுவ முகாம் அகற்றப்படும். அங்கு கள்ளக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கைகள் பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட விருக்கிறது.

★ கள்ளக்குடியேற்றத்தை தடுப்பதற்காக வடபகுதி மீனவர்களுக்கு அக்டோபர் முதல் அடையாள அட்டைகள் வழங்கப்பட விருக்கிறது. அத்துடன் மீன்பிடிவள்ளங்களுக்கும் அடையாள இலக்கம் பொறிக்கப்படுமாம.

★ மட்டுநகரில் லக்சல என்று அடுத்த நிதி வருடத்தில் ஆரம்பிக்கப்படும் என்று உள்நாட்டமைச்சர் அறிவித்துள்ளார்.

★ திருகோணமலை அரசாங்க அதிபரின் நடவடிக்கை ஒற்றுமையைப் பாதிக்கும் செயல் என கண்டனம் தெரிவித்து கிண்ணியா பட்டின சபை பிரதமர் டட்லி சேனநாயக்காவிடம் முறையிட்டுள்ளது.

★ உடுப்பிட்டி பல்வேறு பாகங்களிலும் சில மாதங்களாக நடைபெற்று வரும் பெற்றோல் எண்ணெய் வள ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் நிபுணர்கள் தற்பொழுது வல்லை அர்சுவேலி, வளலாய் முதலிய இடங்களில் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

★ கிழக்கிலங்கையின் பல்வேறு பிரிவுகளிலும் திருடர்களின் கூட்டமொன்று போலிசாருக்கு டிமிக்கி கொடுத்துக் கொண்டு திருட்டுத் தொழிலை வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வருகிறது என்று போலிஸ் வட்டாரம் நம்புகிறது.

★ யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசவிழா அடுத்த மாதம் 11 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கிறது.

★ குடாக்கரை கிராம சபைத்தலைவர் ஜனப் கே. ஜெயினுதீன் அண்மையில் செனட்டராகத் தெரிவு செய்யப்பட்ட ஜனப் மசூர் மவுலானுவிற்கு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஓர் அரசியற்கட்சி தவருன வழி காட்டுகிறது"

தீண்டாமையை யொழித்து தமிழ் பேசும் இனத்தை ஒன்று படுத்துவது தமிழரசுக்கட்சியின் அடிப்படைக் கொள்கை இந்தப் பணியில் அன்பு வழியில் கட்சி கடந்த 17 ஆண்டுகளாக போராடி வருகிறது. ஆனல் அண்மையில் பலாத்காரத்தை ஆயுதமாகக் கொண்ட ஓர் அரசியற் கட்சி சிறுபான்மைத் தமிழ் மக்களிடையே செல்வாக்கைப் பெறுவதற்கு தவருனவழியில் அவர்களை திசை திருப்பிவிட முயற்சிக்கிறது. வன்முறைச் செயல்களும் பலாத்காரமும் பிரச்சினைகளைத் தீர்க்காது என்பதை சிறுபான்மைத் தமிழர்களும், உயர்சாதித் தமிழர்கள்என்று கூறப்படுபவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.' இவ்வாறு தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

திரு. அமிர்தலிங்கத்தின் அறிக்கை மேலும் கூறுவதாவது:-

'தீண்டாமை யொழிப்பின் பெயரால் வட பகுதியின் சில பகுதிகளில் நடைபெற்ற பலாத்கார சம்பவங்கள் அத்துறையில் நாம் அடைந்த முன்னேற்றங்களைப் பின் தள்ளப் பார்க்கிறது. சாத்வீக முறையில் பொது இயக்கங்களினுலும் பிரசாரங்களினுலும் இப் பிரச்சினையில் கடந்த 10 ஆண்டுகளில் எவ்வளவோ முன்னேற்றங்களைக் கண்டோம். மனமாற்றத்திஞலும், சட்ட நடவடிக்கையினுலும் தீண்டாமைப் பேயை ஒழிக்க நாம் நடவடிக்கையெடுத்து வருகிறேம்.

'பலாத்காரத்தை ஆயுதமாகக் கொண்டிருக்கும் ஓர் அரசியற் கட்சி சிறுபான்மைத் தமிழ் மக்களிடையே தங்கள் செல்வாக்கைப் பெருக்குவதற்கு இவ் வேளையில் இறங்கியுள்ளது.

'தேனீர்க் கடையில் சமத்துவம் வேண்டும் என்று கேட்பது வேறு; தேனீர்க் கடைச் சமயலறையில் தடியோடு சென்று தேனீர் கொடு என்று கேட்பது வேறு: பின் சொல்லியது போன்ற சம்பவங்கள் கண்டிக்கப்பட வேண்டியவை. பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புவோர் இப்படிச் செய் மாட்டார்கள். தோட்டங்களை அழித்தல், தீயிடுதல் போன்ற வன் முறைச் செயல்கள் தமிழ் இனத்தின் அழிவுக்கே வழிகோலிவிடும்.

நாம் எல்லோரும் குரோதத்தை மறந்து விஷமிகளுக்கு இடம் கொடாது நடந்து கொண்டால், விரைவில் இப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்பது உறுதி. வன்முறையும் பலாத்காரமும் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க மாட்டாது என்பதைசகலரும் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புரையோடிய புஸ் போல உள்ள தீண்டாமை நீக்கி இனத்தை யொன்று படுத்துவதுஎன்றஅடிப்படைக் கொள்கையுடன் தமிழரசுக் கட்சி செயலாற்றி வருகிறது. தமிழ்த் தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் என்ற உணர்ச்சியோடு அன்பு வழியில் இப் பிரச்சினையைத் தீர்க்க எம்முடன் ஒத்துழைக்கும் படி இரு சாராரையும் கேட்டுக் கொள்ளுகிறேம்'



## மக்கள் குரல்

### அமைச்சரின் துவேச பேச்சுக்கு கண்டனம்

அண்மையில் கல்வி கலாச்சார அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்லை பத்தேகமவில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய கூற்று இன்றையதேசிய ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய வகுப்புவாதப் பிதற்றலாகவே கருதக் கூடியதாக இருக்கிறது.

தேசிய அரசின் பிரதமர் உள் நாட்டிலும், அண்மையில் வெளிநாட்டு விஷயத்தின் போதும் தேசிய ஐக்கியத்தைக் கட்டி எழுப்பிவிட்டேன் எனப் பெருமை கூறும் இவ்வேளையில் அதன் அத்திவாரத்தையே தகர்த்தெறியக் கூடிய முறையில் பிரதமரின் சகாவான தேசிய அரசின் ஒரு முக்கிய அமைச்சர் கூறிய இக்கூற்றுதேசிய ஒற்றுமையை விரும்புகின்ற மக்களை வேதனைப்படுத்துவது மட்டுமல்ல, தேசிய ஒற்றுமையைக் குலைக்க கங்கணம் கட்டி வகுப்புவாத துவேசத்தை பரப்பிவரும் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா அவர்களுக்குத் துணை புரிகிருர் என கூறக்கூடியதாக உள்ளது.

வட பகுதிப்பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள் அதிகம் இருப்பதாகவும், தமிழர்களே உயர் பதவிகளில் இருப்பதாகவும் வேதனைப்பட்டு தனது வகுப்புவாத நஞ்சைக் கக்கியுள்ளார். இவர் வட மாநில பாடசாலைகளில் விஞ்ஞான கூட வசதிகள் அப்பகுதி பெற்றேர்களும், ஆசிரியர்களும் எடுத்த பெரு முயற்சியால் அமைந்தவை என்பதை கல்வி அமைச்சர் அறியாதது வேதனைக்குரியது' முந்திய கல்வி அமைச்சர் காலத்திலும் சரி, இன்றைய கல்வி அமைச்சர் காலத்திலும் சரி அரசாங்கத்திஞல் பூரண உதவியினுல் எந்த ஒரு வட மாநில விஞ்ஞான கூடமும் வளர்ச்சியடையவில்லை என்பதை கல்வி அமைச்சருக்குச் சொல்லிவைக்க ஆசைப்படுகின்றேம். இதே வேளையில் குறிகிய கண்ணேட்டமும், வகுப்புவாத வெறியும் தலை தூக்குமாயின் அது இலங்கையின் எதிர் காலத்தையே தரை மட்டமாக்கத் தூபமிடுவதாகின்றது.

இந்த நடைமுறையைப் பார்க்கும் போது அமைச்சரின் பண்பில்லா பொறுப்பில்லா துவேச பேச்சு இன்றைய தேசிய ஐக்கியத்தைச் சீர் குலைப்பதோடு தமிழரை வெளியேற்ற முயற்சிக்கின்ருரா என்றே எண்ணத்தூண்டுகின்றது. இப்பேச்சை வேறு யாரோ ஒருவரோ இன்றி மற்ற எந்த மந்திரியாவது பேசியிருந்தால் கூட நாம் அதிக அக்கறை காட்டமாட்டோம். ஆனல் கடும் துவேச மனப்பான்மை படைத்த எதிர்க்கட்சியாளர்களால் கூட இந்த அளவு துணிந்து பேச இயலாத கட்டத்தில் எம் வருங்கால சந்ததியினருக்கு வழி காட்டும் கல்விப்பகுதி மந்திரியாரே பொறுப்பில்லாமல் பேசுவதாயிருந்தால் இவர் பொறுப்பில் இயங்கும் கல்வியின்எதிர் காலம் என்ன?

உலக அரங்கில் எங்கும் தாய் மொழியே போதனு மொழியாக இருக்க எங்குமில்லாதவாறு பெற்றேர் விரும்பும் மொழி என்றபுதுக் கோஷத்தை அமைச்சர் முன் வைத்ததை இந்த அறிக்கையுடன் தொடர்பு படுத்திப் பார்க்கையில், அவரது அந்தரங்கம் என்ன? என்ற கேள்வி பிறக்கின்றது. இவரது பொறுப் பற்ற இப்பேச்சையிட்டு பிரதம மந்திரியவர்கள் நடவடிக்கை மேற்கொள்வாரா?

ந. அருணுலசம்
செயலாளர்,
இலங்கைத் தமிழரசு வாலிபர் முன்னணி, யாழ்ப்பாணம்.

### தொன்மையோ முதுமையோ மொழிக்குப் பெருமை தராது

எம் மொழிக்கும் இலக்கணமமமை யாத காலத்திலேயே நம் மொழிக்கு இலக்கணமமைந்திருந்தது.

தமிழ் தனி மொழி, அதன் சிறப்பு தனிச் சிறப்பு உலகம் நம்மை மதிக்காத இந்நிலையில் தமிழின் தொன்மையோ அதன் முதுமையோ மொழிக்குப் பெருமை தேடித் தராது. இது மொழி வளர்ச்சியில் அக்கறை உள்ள ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டிய விடயம்.

ஒரு நாட்டின் சிறப்பை, வனப்பை அதன் வளமையைப் பெருமையை அக்காலத்து அவண் எழுந்த இலக்கியமன்றே விளக்கிக் காட்டுவது. செந்தமிழ்க் காவியமாம் சிலப்பதிகாரத்தில் வரும் வழக்குரை காதை அக்காலத்தில் தமிழகத்திலே நிலவி வந்த நீதி முறையையும் அது தவறின் நடக்கும் அசம்பாவிதங்களையும் தெற்றென விளக்கிக் காட்டுகிறது. கூடவே அக் காவியத்தில் பூம்புகாரின் வளமையும் செழுமையையும் நமக்கு நேரில் காட்டுவது போல் காட்டுகிருர் இளங்கோ. இருப்பினும் இதைப் படிப்பவர் எத்தனை பேர். பலர் கடுந்தமிழ் கொடுந்தமிழ் என்று கூறிப் பழைய இலக்கியங்களை ஒதுக்குகிருர்கள். இத்தகையவர்களுக்கு தமிழில் வெறுப்பே தவிர ஆங்கிலத்தில் மோகம் அபாரம். ஆங்கிலேயனலேயே காலத்திற்கு ஒவ்வாதது எனக் கழிக்கப்பட்ட இலக்கியங்களை அகராதியின் துணை கொண்டு பல்லுடையப்படாமாக்கி, அவ்விதம் பெற்ற புலமையை சமயமறிந்து மற்றவர்களுக்குத் தெரியவைப்பதில் பெருமைகொள்ளும் கூட்டம் நம் மத்தியில் இருக்கும் வரை தமிழை வாழவைக்க நம்மைப் படைத்த கடவுளாலே கூட முடியாது.

அது மாத்திரமல்ல என் மகன் ஆங்கிலம் இலத்தீன் முதலிய பாஷைகளில் விசேச சித்திபெற்றிருந்தும் தமிழில் சித்தி எய்தவில்லை எனப் பெருமையுடன் பேசும் பெற்ருேர் உள்ள வரை தமிழை அழிக்கும் திருப்பணிக்கு வெளிச் சக்திகளே அவசியமில்லை. இத்தகைய சக்திகளையெல்லாம் களைய வேண்டியது தமிழை வளர்க்க முயற்சிக்கும் ஒவ்வொருவருடையவும் தலையாய கடமையாம்.

அடுத்து நம் கவனத்திற்குரியது பறிக்கப்பட்ட நம் உரிமைகளாம். இவை தமிழ் வளர்ச்சிக்கு தடையாய் இருக்கின்றன என்பதில் சற்றேனும் ஐயமில்லை. ஆனல் பறிக்கப்பட்ட உரிமைகளைக் காட்டிலும் செவ்வனே பாவிக்கப்படாத உரிமைகள் நம் கவனத்திற்கு அதிகம் உரியனவாகும். சிறு வி[illegible]மாயினும் கீழ்க் காணும் சம்பவம் மேற்கூறிய விடயத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

யாழ் நகரின், மத்தியில் மாநகரசபையாற் பரிபாலிக்கப் படும் பொதுசன நூல் நிலையத்திலே, உடனுதவும் நூல்களுள்ள பகுதியிலே, நூல்களின் பெயரையும் பாவிப்பரின் பெயர் விலாசத்தையும் எழுதுவதற்குரிய பதிவேடு ஒன்றுண்டு. அந்நிய மொழி வாசனையேயின்றி தனித் தமிழில் இருக்கும் அவ் வேட்டில் தமிழ் வாசனையேயின்றி ஆங்கிலத்தில் பெயர்களை எழுதுகிருர்கள் அங்கு வருபவர்கள் நம்முடைய இடத்தில் நம்முடைய செயல்களில் தமிழுக்கு உரிமை கொடுப்பது இழுக்கு என நாம் எண்ணினல் தமிழின் தலைவிதியை யாம் என்னென்றுரைக்கலாம்.

ம. சுணநாயகன்
மானிப்பாய்.

### இ போ சவில் தமிழ் புறக்கணிப்பு தமிழரசுத் தந்தை புகார்

இ. போ.ச. பஸ்களிலும், பஸ்தரிப்பு நிலையங்களிலும் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதாக தமக்கு அடிக்கடி புகார்கள் வருவதாகவும், பஸ் தரிப்பு நிலையங்களில் உள்ள அறிவிப்புக்கள் தமிழில் எழுதப்படாததால் தமிழர்கள் தொல்லைப்பட நேரிடுகிறதென்றும் இப்படி அடிக்கடி நிகழ்வதால் இவற்றைக் கவனித்து சீர் செய்ய இ. போ. ச. வில் இதற்கென ஒரு அதிகாரி நியமிக்கப்பட [illegible] ஜே. வே. செல்வநாயகம் தேசியமய சேவை அமைச்சர் திரு வி. ஏ. சுகததாசவிடம் தெரிவித்துள்ளாரென்று அறியப்படுகிறது.

இ. போ. ச. பஸ்களின் பெயர்ப்பலகைகளில் அடிக்கடி தமிழ் மறைந்துவிடுவதும் இதனுல் தமிழர்கள் கஷ்டமடைய நேரிட்டுள்ளதும் தெரிந்ததே. சில வேளைகளில் 'றூட் நம்பர்' கூட இன்றி, தனிச் சிங்கள பெயருடன் பஸ்கள்சேவைக்கு விடப்படுகின்றன.

அண்மையில் ஆங்காங்கே இ. போ. ச. பல பஸ்தரிப்பு நிலையங்களை நிறுவியிருக்கிறது. இந்த பஸ்தரிப்பு நிலையங்களில் பஸ் செல்லும் பாதைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன; இவற்றிலும், தனிச்சிங்களமே தவிர தமிழ் கிடையாதென்பது குறிப்பிடத்தக்கது.

இ. போ. ச. வின் இந்தத் தமிழ் 'ஒழிப்பு' பற்றி தேசியமய சேவை அமைச்சர் திரு. சுகததாசவைச் சந்தித்து தமிழரசுத் தந்தை இவ்வாரம் பேச்சுவார்த்தை நடத்திஞர். இ. போ. ச. பஸ்களிலிருந்து அடிக்கடி தமிழ் மறைந்து விடுவதாயும் ஒவ்வொரு தடவையும், தமிழரசு எம். பீக்கள் இதைக் கவனித்துக்குக் கொண்டு வரவேண்டியிருப்பதாகவும் தெரிவித்த திரு. செல்வநாயகம். பஸ்தரிப்பு நிலையங்களில் தமிழிலும் விபரங்கள் எழுதப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திஞர்.

அடிக்கடி இப்படிபட்ட பிரச்சினைகள் எழுவதால், இவற்றைக் கவனித்து, தமிழை நிரந்தரமாக இடம் பெறச் செய்வதற்கும் இத்தகைய தவ

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வைசம்பவம்: சட்டநடவடிக்கையெடுக்கப்படுமா?

## அடுத்தவாரம் அட்டோர்னிஜெனரல் அறிவிப்பார்

வல்வெட்டித்துறைத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் பொலீசார்மீது சட்ட நடவடிக்கையெடுக்க முடியுமாவென்பதைஇப்பொழுது மறு பரிசீலனை செய்து வருவதாகவும், அடுத்த வாரம் தமது முடிவைத் தெரிவிப்பதாகவும் அட்டோர்னி ஜெனரல் ஜனாப். ஏ. சி. எம். அமீர் இம்மாதம் 16ம் திகதி தம்மைச் சந்தித்த தமிழரசுத் தூதுக் குழுவிடம் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

வல்வெட்டித்துறைத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சம்பந்தமாக திரு. சா, ஜே. வே. செல்வநாயகம் பா. உ. திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பா. உ. ஆகிய மூவரையும் கொண்ட தூதுக்குழு ஒன்று இம்மாதம் 16ம் திகதி காலை 11 மணிக்கு அட்டோர்னி ஜெனரல் ஜனாப். அமீரை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது. இந்தப் பேச்சுவார்த்தையின் போது சொலிசிட்டர் ஜெனரலும் கலந்துகொண்டாரென்று தெரிகிறது. சுமார் 1 மணி நேரம் இப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

வல்வெட்டித்துறைச் சம்பவம் கொலையென்று திட்டவட்டமாக பருத்தித்துறை நீதவான் கூறியிருப்பதால் பொலீசார் மீது சட்டநடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென்பதை தமிழரசுத் தூதுக் குழுவினர் அட்டோர்னி ஜெனரலிடம் வற்புறுத்தினர் என்று தெரிகிறது.

தமிழ்பேசும் மக்கள் இது விஷயத்தில் மிகுந்த அக்கரை காட்டி வருவதாகவும், இவ்விடயத்தில் அரசாங்கத்திலிருந்து நீதி கிடைக்காவிட்டால், தமிழ்மக்களுக்கு அரசாங்கத்தின் மீதுள்ள நம்பிக்கை குறையக் கூடுமென்றும் அவர்கள் ஜனாப் அமீரிடம் சுட்டிக்காட்டியதாக அறியப்படுகிறது.

இவ்விஷயத்தை தாம் மிகுந்த அக்கறையுடன் பரிசீலனை செய்து வருவதாகவும், அடுத்த வாரம் தமது முடிவை தமிழரசு எம். பீக்களிடம் தெரிவிப்பதாகவும் அட்டோர்னி ஜெனரல் உறுதியளித்ததாக அறியப்படுகிறது.

நல்லூர் எம். பியும் தமிழரசுக் கட்சித் தலைவருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் இதற்கு முன்பும் இது விஷயமாக அட்டோர்னி ஜெனரலைக் சந்தித்து பேசியிருப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

# வடபகுதியில் நடைபெறுவது என்ன?

## தீண்டாமையொழிப்பா? தீயோரின் சூழ்ச்சியா?

வட பகுதியின் சில கிராமங்களில் அண்மைக் காலமாக தீண்டாமையொழிப்பு என்ற பெயரின் கீழ் நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் தமிழினத்துக்கு ஒரு நீங்காத கறையை ஏற்படுத்திவிட்டது. இதனால் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்களின் பயனாகத் தீண்டாமை யொழிவதற்கு பதில், தீண்டாமை யொழிப்பு முயற்சியில் கடந்த பத்தாண்டு காலமாக ஏற்பட்டு வந்த வெற்றிகூடப் பின் தள்ளப்பட்டு விடலாம் என்ற அச்சம் ஏற்படுகிறது.

தமிழ் மக்களிடையே தீண்டாமை என்னும் நோய் இன்று நேற்று இரவோடிரவாக ஏற்பட்டதல்ல. பல தலைமுறைகளாகவே இருந்து வருகிறது. மனித நாகரீகத்திற்கும் வள்ளுவன் நெறிக்கும் சைவ சமய சித்தாந்தத்துக்கும் மாறாக, தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இந்தத் தீண்டாமைப் பேய்க்கு சாவு மணியடிக்கப்பட வேண்டும் என்பதில் நமக்கு இரண்டுபட்ட கருத்துக் கிடையாது.

தீண்டாமையொழிய வேண்டும், தமிழ் மக்கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக வாழவேண்டும் என்ற இலட்சியத்துக்காக நாம் எப்பொழுதுமே வாதாடி வருகிறோம்.

### நமது வழி

ஆனால் தீண்டாமையொழிப்பு அன்பு வழியில், காந்திய வழியில் நடைபெற வேண்டும் என்பதே நமது தீர்க்கமான கொள்கையாகும். பிரசாரத்தின் மூலம் மக்களிடையே மனமாற்றத்தையேற்படுத்தி அமைதி வழியில் ஆண்டாண்டு காலமாக இருந்து வரும் தீண்டாமைப் பேயை விரட்ட வேண்டும் என்றே திட்டவட்டமாக வலியுறுத்தி வருகிறோம்.

### பலாத்காரத்தை ஆதரிக்க முடியாது

தீண்டாமை யொழிப்பு விஷயத்திலும் சரி வேறு எந்தப் பிரச்சினையிலும் சரி எந்த உருவத்திலும் வன்முறையோ பலாத்காரமோ தலை தூக்குவதை நாம் சிஞ்சிற்றும் ஆதரிக்க முடியாது. மாறாக அவற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம். பலாத்காரத்தின் மூலம் எதனையும் சாதிக்க முடியாது. வன்முறைச் செயல்கள் ஆத்திரத்தையும், அமைதியின்மையும் கிளப்பி, பிரச்சினையைச் சிக்கலாக்கி விடும். உண்மையில் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள விரும்பும் எவரும் வன்முறைச் செயல்களில் இறங்க மாட்டார்கள்.

### 10 ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட மாற்றம்

தீண்டாமையை அனுஷ்டிக்குப் விஷயத்தில் வடபகுதயில் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலை வேறு, இன்று இருக்கும் நிலை வேறு. வட பகுதியில் உள்ள பல பழம் பெரும் கோவில்கள் சிறுபான்மைத் தமிழர்களுக்காக திறந்து விடப்பட்டுள்ளன. பலதேனீர்க் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், சிறுபான்மைத் தமிழர்களுக்கு சம இடம் கொடுக்கின்றன. வடபகுதியிலுள்ள நகரங்களில் பெரும்பாலானவற்றில் தீண்டாமையென்ற பேச்சுக்கே இடமில்லை. வளர்ந்து வரும் இன்றைய இளைஞர் பரம்பரை தீண்டாமை நம்சமூகத்திலுள்ள ஒரு தீமையென்பதையும் அது ஒழிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்து வருகிறது.

### காரணம் என்ன?

இத்தகைய பெருமைப்படத்தக்க மாற்றம் உருவானது எப்படி என்பதை சிறுபான்மைத் தமிழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மாற்றம் கடந்த 10 ஆண்டுகளுக்குள் ஏற்பட்டுளளது. இந்த மாற்றத்துக்குக்காரணம் பலாத்காரமா? வன்முறைச்செயலா? இதை தவறான வழியில் திருப்பி விடப்பட்டிருக்கும் சில சிறுபான்மைத் தமிழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இத்தகைய மனமாற்றத்துக்குக் காரணம், தீண்டாமை யொழிப்பு நடவடிக்கைகள் அன்பு வழியில், சமாதான முறையில யாருக்கும் ஆத்திரமூட்டாதவாறு நடைபெற்று வந்ததேயென்பதை எவரும் மறுக்க முடியாது.

### சாதகமான சூழ்நிலை

தமிழ்மக்கள் மத்தியிலிருந்து தீண்டாமை யொழிக்கப்பட வேண்டுமென்பதற்காக தமிழ் மக்களுடைய நலனிலே உண்மையான அக்கறையுள்ள அரசியற் தலைவர்களும், சமயத் தலைவர்களும் சமூக சீர்திருத்த வாதிகளும் அன்பு வழியிலே பிரச்சாரங்கள் மேற்கொண்டு, ஓர் அமைதிப் புரட்சியையே நடத்திக் காட்டினர். அதன் பயனாகவேதான் தீண்டாமை யொழிப்பு வலுவடைந்து வந்தது. உயர்சாதித் தமிழர்கள் என்று கூறப்படுவோர் தீண்டாமை அனுஷ்டிப்பது தவறு என்று அவர்களாகவே உணர்ந்து திருந்தும் ஒரு நல்ல சூழ்நிலை உருவாகிவந்தது.

தீண்டாமை யொழிவதற்கு அமைந்து வந்த ஒரு சாதகமான சூழ்நிலை வட பகுதியில் நடந்த பலாத்கார சம்பவங்களின் பின்னர், பாதகமான சூழ்நிலையாக மாறுமோ என்ற ஐயம் இன்று பலரது மனதில் எழுந்துள்ளது.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

தெரிந்தோ தெரியாமலோ சிறுபான்மைத் தமிழர்களில் ஒரு பகுதியினர், புரட்சி, இரத்தம் என்றுபேசும் சீனத் துக்கைப் பாவைகளின் பொம்மையாகி, தவறான வழியில் திசை திருப்பப்பட்டு விட்டனரென்றே நாம் கருத வேண்டியுள்ளது.

சீனர்களின் கையாட்களான சிலர், பலாத்காரம் வன்முறை, கலாசாரப் புரட்சியென்றெல்லாம் பசப்புமொழிகளைக்கூறி சிறுபான்மைத் தமிழர்களில் சிலரை தம் மாய வலையில் சிக்கவைத்ததன் பிரதிபலன்தான் யாழ்ப்பாணத்தில் நடந்த வன்முறைச்சம்பவங்களுக்கு அடிப்படையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

### நோக்கம் என்ன?

யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் நடந்திருக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போது, கலவரங்களை ஏற்படுத்தவென்றே தீண்டாமை யொழிப்புப் ‘புரட்சி’ நடத்தப்பட்டதென்று கருதவேண்டியுள்ளதே தவிர உண்மையில் தீண்டாமை யொழிய வேண்டுமென்ற நோக்கத்துடனல்ல.

ஒரு தேனீர்க் கடையில் தேனீர் அருந்தப்போவது ஒரு விஷயம்; ஐந்து ஆறு பேர் கூட்டாகச் சென்று ‘நாங்கள் இன்ன சாதியினர். எமக்கு தேனீர் தருகிறாயா இல்லையா’ என்று கடைக்காரரை மிரட்டுவதும் வன்முறையில் இறங்குவதும் வேறு விஷயம். இரண்டாவது முறை ஒரு அடாத செயலாகும். இப்படிப்பட்ட பலாத்கார நடவடிக்கைகளால் [illegible] வழியிற் செல்லும் சில சிறுபான்மைத் தமிழர்கள் உணரவேண்டும்.

உண்மையில் யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் நடந்தது தீண்டாமை யொழிப்பு கிளர்ச்சியேயல்ல; தீண்டாமையொழிப்பின் பெயரால் சிறுபான்மைத் தமிழர்கள் சிலரை ஒரு ‘புரட்சி’ அரசியற்கட்சி தன் செல்வாக்குக்குப் பயன் படுத்திற்று என்றே நாம் கருதுகிறோம்.

அப்படியில்லாவிட்டால், வீடுகளைக் கொளுத்துவதும் வாழைகளை வெட்டுவதும், தோட்டங்களை அழிப்பதும் எப்படி ‘தீண்டாமை யொழிப்பு’ நடவடிக்கையாக முடியும்?

மதத்தை அபின் என்று கூறுகின்ற—மத நம்பிச்கையும் கடவுள் நம்பிக்கையுமற்ற ‘புரட்சி’ கட்சியினர் இன்று ஆலயப் பிரவேசத்தில் அக்கறை செலுத்துவது வேடிக்கையானதும் விநோதமானதுமாகும்.

### உண்மையான நோக்கம் என்ன?

சிறுபான்மைத்தமிழர்களின் பின்னால் இருந்து முடுக்கிய இந்தப் ‘புரட்சி’ கட்சிக்கும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளுக்கும் உண்மையில் தமிழ் மக்களிடையேயுள்ள தீண்டாமை யொழிக்கப்படவேண்டும் என்பதில் அக்கறை கிடையாது. மாறாக தீண்டாமை நிலைக்க வேண்டுமென்பதும், சிறுபான்மைத் தமிழர்கள் என்று தமிழர்களிடையே ஒரு பிரிவினர் இருக்க வேண்டுமென்பதுமே அவற்றின் குறிக்கோள். ஏன் தெரியுமா? தீண்டாமை ஒழிக்கப்படாமலிருந்தால்தான் சிறுபான்மைத் தமிழ்மக்களிடம் தமக்குள்ள அற்ப சொற்ப ஆதரவை நிரந்தரமாகப்பாது காக்கமுடியும் என்ற ரகசியத்தை அவை புரிந்து வைத்திருக்கின்றன.

தமிழ் மக்களிடையே தீண்டாமை படிப்படியாகமறைந்து வருவதைக்கண்டு, தீண்டாமையை ஒழியவிட்டால் தாழ்த்தப்பட்ட மக்களிடையேயுள்ள தமது அரசியல் செல்வாக்குக்கு ஆபத்து என உணர்ந்து தீண்டாமைப் பிரச்சினையை மீண்டும் சிக்கலாக்கிவிடும் நச்சு எண்ணத்துடன்தான் இந்தப் ‘புரட்சி’க்கட்சி சிறுபான்மைத் தமிழர்களில் சிலரை திசை திருப்பிவிட்டுள்ளது.

சீனதாசர்களின் இந்த ஆஷாடபூதித்தனத்தை உணர முடியாது சிறுபான்மைத் தமிழர்கள் சிலர் அவர்களின் மாய வலையிற் சிக்கினர். இதன் பலனாக தீண்டாமை யொழிப்பு பிரச்சினை மீண்டும் சிக்கலாகி விடக்கூடும் என்று அஞ்சுகிறோம்.

சிறுபான்மைத் தமிழர்களுக்கும் உயர்சாதித் தமிழர்கள் என்று கூறப்படுவோருக்கும் ஒன்று கூறிவைக்கிறோம். வன்முறையும், பலாத்காரமும் ஒருபோதும் பிரச்சினையைத் தீர்க்காது என்பதை இருசாராரும் உணரவேண்டும்.

### ஏற்றத்தாழ்வுகள் தீரவேண்டும்

சிறுபான்மைத் தமிழர்களிடையேயுள்ள அறிஞர்கள் பலர் வன்முறைகளைக்கண்டித்திருப்பதுடன் சமாதான வழியில்தான் தீண்டாமைப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளனர்.

இதே நேரத்தில் இன்னுமொன்றையும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். சிறுபான்மைத் தமிழர்கள் என்று பொதுவாகக் கூறப்படுபவர்களுக்குள்ளேயே பல சாதியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்த சாதிகளுக்குள்ளும் ஏற்றத்தாழ்வுகளும் தீண்டாமையும் தாராளமாக இருக்கிறது. ஒரு சாதிக்காரர் வீட்டில் மற்றவர் உணவுட்கொள்வதில்லை. மிகக் கடுமையான முறையில் இவர்களுக்குள்ளேயே தீண்டாமை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய வேறுபாடுகளைகளைந்தெறியவும் சிறுபான்மை தமிழர்கள் முன்வர வேண்டும். அவர்கள் மத்தியிலே சாதிபற்றிய ஏற்றத்தாழ்வுகள் இருக்கவேகூடாது. தம்மில் உயர்ந்தவர்கள் என்று கூறப்படுவோருடன் சம உரிமை கோரும் அதே வேளையில், தம்மில் குறைந்தவர்கள் என்று கூறப்படுவோருக்கும் சம உரிமை வழங்க முன்வர வேண்டும்.

### எல்லோருக்கும் உரிமை வேண்டும்

சிறுபான்மைத் தமிழர்கள் மத்தியிலுள்ள குறிப்பிட்ட சில பிரிவினருக்குமட்டும் ஆலயப்பிரவேச உரிமையும் ஏனைய உரிமைகளும் கிடைத்தால் மட்டும் போதாது. சிறுபான்மைத் தமிழ் மக்களிடையேயுள்ள எல்லாப் பிரிவினர் மத்தியிலும் இன்று காணப்படும் ஏற்றத்தாழ்வுகளும், தீண்டாமையுமொழிந்து தமிழ்பேசும் இனம் ஒன்றுபடவேண்டுமென்பதே நமது திட்டவட்டமான கொள்கையாகும்.

அதேவேளையில் அன்பு வழியில —சமாதான வழியில்,— உயர்சாதியினர் என்று கூறப்படுவோரிடையே மனமாற்றத்தை யேற்படுத்துவதன் மூலமும் சட்டநடவடிக்கை மூலமும்சிறுபான்மைத் தமிழர்கள் தமது உரிமைகளையடைய முயல வேண்டுமே தவிர பலாத்காரத்தில் இறங்குவதின் மூலம் ஒருபோதும் லட்சியத்தை நிறைவேற்றமுடியாது.

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தட்டெழுத்தாளர்கட்கு சிங்கள நிபந்தனை நீங்கும்

தமிழ்த் தட்டெழுத்தாளர்களுக்கு சிங்கள நிபந்தனையிலிருந்து விதிவிலக்களிக்கப்பட வேண்டுமென்று தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் விடுத்த கோரிக்கையை இப்பொழுது திறைசேரி ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது. அனேகமாக இக்கோரிக்கை ஏற்கப்படலாம் என்றும், இதுபற்றி விரைவில் திறைசேரியிலிருந்து சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்படலாம் என்றும் திறைசேரி வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

தமிழத் தட்டெழுத்தாளர்களுக்கு சிங்கள மொழி நிபந்தனை தேவையில்லாத ஒன்று என்றும் அதனை அரசாங்கம் வாபஸ் பெறவேண்டும் என்றும் தமிழ்தட்டெழுத்தாளர்கள் கோரிவருவது தெரிந்ததே.

இது சம்பந்தமாக தமிழரசுத் தந்தை நிதியமைச்சருக்கு அண்மையில் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதத்தில சிங்களத் தகைமை நிபந்தனையை உடனடியாக நீக்கி விடும்படி கோரியிருந்தார் என்று தெரிகிறது.

இக்கடிதத்தை தொடர்ந்து இது விஷயமாகதிறைசேரியின் ஆலோசனையை நிதியமைச்சர் கோரியுள்ளதாகவும், திறைசேரி இப்போது ஆராய்ந்து வருவதாகவும் தெரிகிறது.

திரு. செல்வநாயகத்தின் கோரிக்கையை திறைசேரி ஏற்றுக்கொள்வது சாத்தியமென்று திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அவசரம் வேண்டாம்! பிறகு யோசிக்கலாம்

சென்றடைந்த ஒன்றேகால் நூற்றுண்டுகளாக மலையகத்தில்ஒரு தனிபாரம்பரியத்தைத் தோற்றுவித்தவர்கள் நமது மலையகத் தமிழர்கள். இவர்களது வாழ்க்கை ஒருமாபெருஞ் சோதனையாகயே இது வரை நடந்துள்ளது. இவர்களின் சோக சரிதத்தைப் போல வேறு எந்த நாட்டிலும் ஒரு சம்பவம் நிகழ்ந்ததில்லை.

யார் வாழத் தம்மையே அர்ப்பணித்தார்களோ, எந்த தேசத்தின் செல்வாக்கு ஓங்கத்தம் உழைப்பைத் தத்தம் செய்தார்களோ அந்த மக்களுப், அந்த நாடும் அவர்களைப் போ—போ என்று புறக்கணிக்கிறது—பிடித்துத் தள்ளுகிறது நாடற்றவன் நீ என்று நையாண்டி செய்கிறது—நச்சரிக்கிறது.

இந்தியத் தமிழர்கள் இந்திய பாஸ்போர்ட் வைத்துள்ளவர்கள். வியாபாரத்திற்காக—தொழிலுக்காக இலங்கையில் வசிப்பவர்கள். தோட்டத் தொழிலாளராக இல்லாதவர்கள். இலங்கைப் பிரசா உரிமைகளைப் பெற்றும் இந்தியாவிலேயே தங்கள் பாத்தியங்களை மிகையாகக் கொண்டவர்கள்.

### இலங்கை இந்திய வம்சாவளித் தமிழர்கள்

1948ன் முன்னிருந்தே இலங்கையில் வாழ்பவர்கள். இலங்கைப் பிரசா உரிமைகொண்டவர்கள். அலலது தமது தந்தையின் பிறப்புப் பத்திரம் உடையவர்கள் அல்லது அத்தகைய பிறப்புப் பத்திரங்கள் இருந்தும் அவற்றைப் பெற முடியாபியிருப்பவர்கள், இந்த நாட்டில் அக்கறை காட்டாதவர்கள். இந்தப் பேர்வழிகளே நிச்சயமாகவும், கண்டிப்பாகவும் நாடுகடத்தப்படவேண்டியவர்கள்.

### துரோகிகள்

வாழ்ந்தால் பத்து லட்சம் மலையக மக்களும் இங்கே தான் வாழுவோம். இல்லாவிட்டால் பத்து லட்சம் மக்களும் இந்தியாவுக்கே போய் விடுவோம் என்று குரல் எழுப்பிய வாய்பேச்சு வீரர்கள்—மலையக மக்களின் சாந்தாப் பணத்தில் தலைவர்களாக வளர்ந்த தோட்ட முதலாளிகள் இன்று மலையக மக்களையே காட்டிக் கொடுத்து தங்கள் காரியத்தில் கண்ணுயிருக்கிருர்கள். மலையக மக்களைப் பணயம் வைக்கிருர்கள். துரோகத்திற்கெனவே தோன்றியவர்கள்.

இந்தியாவில் தேனும் பாலும் வெள்ளப் பெருக்கெடுத்துப் பாய்கிறது என்கிருர்கள் இந்தப் பித்தாலட்டக்காரர்கள் அதுவும் போதாது என்ருல் அந்தமானில சொந்தக் காணி சுதந்திர வாழ்வு என்கிருர்கள் இத்தச் [illegible]தோட்டப் பேர்வழிகள். தங்கள் செல்வத்தை எல்லாம் இந்தியாவிலே கொண்டு சேர்த்து வைத்துவிட்டு இங்கே தலைவர்களாக எதேச்சாதிகாரம் பேசுகிருர்கள் ஏழைத் தொழிலாளரைக் காட்டிக் கொடுக்கும் எத்தர்கள்.

பொறுத்திருப்போம்! காலம் வரும்.

### யார் போகவேண்டும்

இ. இ. ஒப்பந்த அமுல் மசோதாவின் அடிப்படையில் இந்தியப் பிரசைகளாக விரும்புவோர் யாவர் என்பதே இங்கு நாம் கவனிக்க

**சக்தீ அ. பாலையா**

கேவலம், தெருவில் திரியும் நாய்களும், பூனைகளும் நன்றியுடையவைகளாக இருக்கும், ஆனல் மலையக மக்களின் சோக வாழ்வை அறிந்தவர்களும் அவர்களினுல் உன்னத நிலையை எய்தியவர்களும் நன்றி என்ற சொல்லுக்கே மாற்றுக் கருத்தைப்படைத்து விட்டார்கள். இந்த விளைவு தான் சிறிமா — சாத்திரியின் இலங்கை இந்திய ஒப்பந்தமும் டட்லி—தொண்டமான் மசோதாவும் என்ருல் அதை உண்மை உணர்ந்தவர்கள் மறுக்க மாட்டார்கள்.

### விபரீத புத்தி

இந்த நாடு கடத்தும் ஒப்பந்தம் இலங்கைக்கு நன்மை விளைவிப்பதாகாது. சந்தர்ப்பச் சூழலில் ஏற்படுத்தப்பட்ட விபரீத புத்தியின் எதிரொலியே இந்த ஒப்பந்தமும் மசோதாவும்.

இதனுல் மலையக மக்களின் எதிர் காலத்தை ஆட்டிப் படைக்கும் அநியாயங்களைத் தான் காண முடிகிறது. மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட கொடுமைகளுக்குத் தமிழ் மக்களை ஆளாக்கும் சதித்திட்டம் இதிலே சங்கநாதம் செய்கிறது. இந்த விபரீத ஒப்பந்தங்களும் மசோதாக்களும் தமிழ் மக்களை மொழி இன, மதமாற்றங்களுக்குள் தள்ளும் வன்முறைகளையும், உறுதியான வாழ்க்கையை வகுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலைகளையும் உருவாக்குமென்பதில் சந்தேகமேயில்லை.

### பாதிக்கப்படுவோர்

இலங்கையிலே நாலு பிரிவுகளாகத் தமிழ் மக்கள் வர்ணிக்கப்படுகிருர்கள். அரசியல் காரணமாகவும், இனம் காரணமாகவும் இவர்கள் பிரிக்கப்பட்டவர்கள்.

1. இலங்கைத் தமிழர்கள்.
2. இந்தியத் தமிழர்கள்.
3. இலங்கை இந்திய வம்சாவளித் தமிழர்கள்.
4. நாடற்ற தமிழர்கள்.

இலங்கைத் தமிழர்கள் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மற்றும் இலங்கைப் பாரம் பரியத்தையுடையவர்கள். இவர்களை இப்போதைக்கு இந்த மசோதா பாதிக்காது.

தவர்கள், இலங்கையரை அல்லது நாடற்றவர்களை மணந்தவர்கள் அல்லது இலங்கை பிரசா உரிமைக்கு விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்கள். இவர்களில் பிரசா உரிமை பத்திரம் பெற்றவர்களைத் தவிர மற்றவர்கள் வம்சாவளியினராகக் கருதப்பட்டதாகத் தெரியவில்லை.

தந்தையின் பிறப்புப் பத்திரமும் தனது பிறப்புப் பத்திரமும் இருந்தாலும் பிரசா உரிமைப் பத்திரம் பெற்ருல் ஒழிய அவர்கள் வம்சாவளிப் பிரசைகள் என்று கூறப்பட்டாலும் இவர்கள் பிரசைகளாகக் கருதப்பட்டவராக இல்லை.

இவர்களையும் இலங்கையிலே பிறந்து இலங்கையோ இந்தியாவோ ஏற்றுக் கொள்ளாத இந்தியமரபில வளர்ந்து வரும் மக்களையும் நாடற்றவர்கள் என இலங்கை கூறுகிறது.

## உதவிப் பணத்தை முதலில் வாங்குக!

இவர்களே இந்த மசோதாவினுல் துன்பப்படுவோராவர். இவர்களின் தலைவிதியை நிர்ணயிப்பது தான் மசோதாவின் நோக்கம்.

மேற் கூறிய நான்கு பிரிவினரிலும் இலங்கைத் தமிழர்களையும் இநதியத் தமிழர்களையும் தவிர இந்திய வம்சாவளியினரும் நாடற்றவர்களுமே பாதிக்கப்படுவோராவர்.

ஆனல் இந்தியபாஸ்போர்ட் இல்லாத இநதியர்கள் நாடற்றவர்களேயல்ல என்பதையும் இவர்களே இந்த மசோதாவின்படி இந்தியபிரசைகளென உறுதி செய்து கொள்ள வேண்டியவர்கள் என்பதையும் வெளிப்படையாகக் கூற விரும்புகிறேன்.

இந்த வகையில் வாழும் இந்தியர்களில் வியாபாரத்திற்காகவும், பணம் சம்பாதிக்கும் நோக்கிலும் இலங்கைப் பிரசாவுரிமை பெற்று இந்தியாவிலே சகல சேமிப்புக்களையும் உறவுகளையும் வைத்துக் கொண்டிருப்பவர்கள். சந்தர்ப்பம் வரும்போது இந்தியாவுக்குப் போக விரும் வேண்டும் முதலில் இந்தியாவில் நிலம், வீடு சொததுக்கள் உள்ளவர்கள் மட்டுமே இந்தியப் பாஸ்போர்ட் பெற்றுக் கொள்ள வேண்டியவர்கள். இவர்களுக்கு நிச்சயமாக இந்தியாவில் வாழ்வதற்கு வசதிகள் தத்தம் ஊர்களிலேயே இருக்கலாம்.

இரண்டாவதாக இலங்கையிலும் பிரசா உரிமை எடுத்துக் கொண்டு இந்தியாவிலும் தங்களுக்கு உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் முதலாளிகள், அரசியல் தொழிற்சங்கத் தலைவர்கள் வர்த்தகர்கள் பத்திரிகை ஏஜண்டுகள், ஓட்டல் முதலாளிகள் பத்திரிகையாளர்கள் தனிப்பட்ட தொழில் புரிகிறவர்கள். இவர்களுக்கு இந்தியாவில் சொந்தமான வசதிகள் நிறையவுண்டு. அவர்களை மனப்பூர்வமாக வழியனுப்பி வைக்கலாம்.

ஆகவே இந்த ஒப்பந்த மசோதாவின்படி இந்தியப் பிரசைகளாக விரும்புகிறவர்கள் மட்டுமே இந்தியப் பிரசைகளாக விண்ணப்பித்துக் கொள்ள வேண்டுமே யன்றி இலங்கையில் வாழ விரும்பும் மலையக தொழிலாளர்கள் இந்தியப் பிரசைகளா விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. இலங்கையில் வாழ விரும்பும் மலையகத் தொழிலாளர்கள் இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் பிரசாவுரிமை கோரி தற்போதைக்கு அவசரப்பட்டு விண்ணப்பித்தல் சிறப்பானதல்ல என்பதே எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும்

### யாரை நாடுகடத்தலாம்

இந்தியர்களாகப் பதிவு செய்து கொண்டவர்களையே நாடு கடத்தல் செய்ய மசோதா வழி செய்கிறது. இலங்கைப் பிரசையாக விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள் எதிர்காலத்தில் தங்கள் இனம் மொழி, கலாச்சாரம், சமயம் ஆகியனவற்றை மாற்றிக் கொள்ளாமாலிருக்கக் கூடிய உறுதியை ஏற்படுத்திக் கொண்டவர்களாக இருக்க வேண்டியது முக்கியமாகும்.

இந்த எண்ணத்திலிருந்து நழுவி விடக்கூடியவர்களாக இருந்தால் அவர்கள் அவசரப்படாமல் பொறுமையாக இருக்கலாம். துன்பத்தைத் தாங்கப்பழகிய நாம் இன்னும் சில ஆண்டுகள் பொறுப்பது கடினமில்லையே.

இனத்தை மாற்றிக்கொள்வதற்காகத்தானு இத்தனை ஆண்டுகளாக உரிமை இழந்திருந்தும் உறுதியிழக்காமல் மலையகத் தமிழ[illegible] வாழ்ந்தான்.

இப்பொழுது மலையக மக்களின் [illegible] மாற்றும் சூழ்ச்சிகள் [illegible]கின்றன. இதில் எதை [illegible]கள் விரும்புகிறீர்களோ அதை ஒரு திட்டவட்டமான முடிவு எனக் கொண்டு அவ்வாறு செய்யத் துணியுங்கள்.

இந்தியாவில் சொத்து நிலம் வீடு வாசல் உள்ளவர்கள் இப்போது முதல் இந்தியப் பிரசைகளாகி விடுவதில் இங்கு யாருக்கும் ஆட்சேபமில்லை.

இந்தியாவில் சொத்துக்கள் இல்லாதவர்கள், இந்தியாவுக்குப் போகவிரும்புகிறவர்கள் தகுந்த வசதுகளை முன்கூட்டியே ஏற்படுத்திக் கொண்டு அரசாங்கத்தின் உதவிப் பணத்தை இங்கிருக்கும் போதே கையில் கேட்டு வாங்கிக் கொண்டு இந்தியப் பிரசைகளாகிவிடலாம்.

ஆனல் இந்தியாவில் ஏதும் இல்லாதவர்கள் இலங்கையிலே பிறந்து நாடற்றவர்களாக இருப்பவர்கள் இலங்கையிலே வசிக்க விரும்புகிறவர்கள் இலங்கைப் பிரசாவுரிமைக்காகவோ இந்தியப் பிரசாவுரிமைக்காகவே அவசரப்பட்டு விண்ணப்பிக்காமல் அமைதியாக அவதானித்து வாருங்கள்.

([illegible]-ம் பக்கம் பார்க்க)

## தமிழில் பிறப்பு இறப்பு பதிவு

# அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் ஏனைய மாகாணங்களிலும் தமிழில் பிறப்பு இறப்பு திருமணப் பதிவுகளை செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? இம்மாதம் 23ம் திகதி பாராளுமன்றம் கூடும் போது உள்நாட்டமைச்சரை இப்படிக் கேட்கவிருக்கிருர் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம்.

திரு. இரத்தினம் உள்நாட்டமைச்சரைக் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ள கேள்விகள் பின்வருமாறு:—

யாழ்ப்பாணத்தில் அரசினர் வைத்தியசாலையில் பிறக்கும் பிள்ளைகளின் பிறப்பைத் தமிழில் பதிவதில்லை யென்பதை உள்நாட்டமைச்சர் அறிவாரா?

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிலும் பிற அரசினர் வைத்தியசாலைகளிலும் பிறப்பு இறப்பு பதிவுகளை தமிழில் பதிய விரும்புவோர்க்கு இலகுவாகப் பதியத்தக்கதாக வசதிகள் செய்து கொடுக்கப்படுமா?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிறப்பு இறப்பு திருமணப்பதிவுகளை சிங்களத்திலும் பதிய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதா?

வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் பிறப்பு இறப்பு திருமணப்பதிவுகளைத் தமிழிலும் பதிய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதா? ஒழுங்கு செய்யப்படாவிடில் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும

# அரசசேவையிலிருந்து தமிழர

# கல்வியமைச்சர் சதி செய

## ஈரியகொல்லையின் இனத்

## பண்டிதர் இரத்தினம்

“இந்நாட்டிலே தமிழ்—சிங்கள மக்களிடையே ஒற்றுமை யேற்பட வேண்டுமெனபதற்காக தேசிய அரசாங்கம் பெருமுயற்சியெடுத்து வருகையில் தேசிய அரசாங்கத்தின் கல்வியமைச்சர் வத்தேகவில் வகுப்புத் துவேஷத்தை விதைத்திருக்கிறார். அரசாங்க சேவையிலிருந்து தமிழ் மக்களை ஒதுக்கி விடவே அமைச்சர் கருதுவதாக நாம் எண்ண வேண்டியிருக்கிறது. 55வயதுக்கு மேல் சிங்களம் தெரியாதவர்களை வேலையிலிருந்து நிறுத்துவோம் என்று சொல்வதும் இந்த அடிப்படையில்தானா? கல்வி அமைச்சரின் கருத்தைத் தேசிய அரசாங்கம் நடைமுறைக்கு கொண்டு வருமானால் தமிழர்கள் அதைத் தீவிரமாக எதிர்ப்பார்கள் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்” இவ்வாறு கிளிநொச்சி பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு முழக்கமிட்டார்.

திரு. இரத்தினத்தின் பேச்சு முழுவதும் கீழே இடம் பெறுகிறது:

‘நான் ஏனைய விடயங்களைப் பற்றிப் பேசப் போகு முன்னர் மகாவலி கங்கைத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசாங்கம் மகாவலி கங்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முன் வந்துள்ளது என்றாலும் அதனுடைய உழைப்புஅதனுடையதிட்டங்கள் போதிய அளவு உற்சாகம் அளிக்கத்தக்கதாக இல்லை.

‘மகாவலி கங்கைத் திட்டத்தை நிறுத்துவதற்குப் பல சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றன என நான் அறிவதனாலே இதனை இங்கே அழுத்திப் பேசுகிறேன். இந்த மகாவலி கங்கைத் திட்டம் நல்ல முறையிலே நிறைவேற்றப்பட்டால்தான் இந்த நாடுமுழுவதும் நல்ல நிலைக்கு வரும்.

‘மகாவலிகங்கையில் கிடைக்கின்ற நீர் வடக்கே கொண்டு செல்வதற்குப் போதியதாகாது என்ற ஒரு காரணத்தைக் காட்டி இந்தத் திட்டத்தைப் பின் போடுவதற்காக பல சூழ்ச்சிகளை முந்திய அரசாங்கத்திலே தமிழர்களை ஒதுக்கிப் பழகிய அரசாங்க உத்தியோகத்தர்கள் பலர், பொறியியற் பகுதியிலே இருக்கின்ற பலர் செய்வதாக நான் அறிகிறேன், எனவே இந்த அரசாங்கத்தை—தேசிய அரசாங்கத்தை— இது பற்றி எச்சரிக்க வேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது.

### நீரைப் பெருக்க நடவடிக்கை எடுங்கள்

‘அரசாங்கம் 20 கோடி ரூபாய்க்குமதிகமான பணத்தை உணவு உற்பத்திக்காக ஒதுக்கியிருக்கின்றது. எனினும், இன்று மக்களிடையே உள்ள மிக முக்கியமான குறை, நீர் கிடையாமை. போதிய நீரை வடக்கு வட மத்திய மாகாணங்களுக்குத் தருவார்களானால், நாம பிற நாட்டை எதிர்பாராது எம் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியும். ஆகவே நீரைப் பெருக்கினால் உணவைப் பெருக்கலாம்.

‘உத்தியோகத்தர்களை மாத்திரம் பெருக்குவதால் உணவைப் பெருக்கிவிடமுடியாது என்பதைக் கூறி வைக்க விரும்புகிறேன். நீரைப் பெருக்குவதற்குள்ள ஒரே வழி — மிகச் சிறந்த, மிகப் பொருத்தமான வழி—மகாவலிகங்கையை வடக்கே அனுப்புவதுதான். எத்துணை விரைவாக இத் திட்டத்தை முடிக்க முடியுமோ அத்துணை விரைவாக இத் திட்டத்தை முடிக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



### எதிர்க்கட்சிகளின் இனவெறி

‘இங்கே சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலேயுள்ள பொருளாதார அடிப்படையில் ஆளுகின்ற தேசிய அரசாங்கத்தை அசைக்க முடியாதென அறிந்த எதிர்க்கட்சியினரும் எதிர்க்கட்சித் தலைவி அவர்களும் மீண்டும் இந்த நாட்டிலே வகுப்பு வாதத்தை உண்டாக்கவும் இன வெறியை வளர்க்கவும் முயல்வது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

‘இப்பொழுது பல முறைகளிலே, பாராளுமன்றத்திலும் வெளியிலும் அவர்கள் பேசுகின்றவற்றைப் பார்க்கின்ற பொழுது இன வெறியை உண்டாக்கவே முயல்கின்றார்கள் என்பது தெரிகிறது.

‘பொருளாதாரத் துறையிலோ வாழ்க்கைத் துறையிலே மக்களை அரசாங்கத்திற்கு மாறாகக் கிளர்ச்சி செய்யத் தூண்டிவிட முடியாதென்பதை அறிந்து அவர்கள் மீண்டும் வகுப்பு வாதத்தைக் கிளப்ப முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

### தி. மு. க. பிரசாரம்

‘இவ்வரவுசெலவுத் திட்டம் பற்றி இப்பொழுது பல இடங்களிலே பேசுகின்ற எதிர்க்கட்சித் தலைவி அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே ஏற்பட்டதாலே இந் நாட்டுச்

# “சிறுபான்மையரின் உரிமைகளை வழங்காத நாடு இறுதியில் அழிந்துவிடும்”

## மட்டக்களப்பு எம். பி. முழக்கம்

“எந்த நாடு சிறுபான்மை மக்களுடைய உரிமைகளைக் கொடுக்க மறுத்ததோ, அந்த நாடு அரசியலிலும் சரி, நாகரிகத்திலும் சரி, பொருளாதாரத்திலும் சரி வீழ்ச்சியடைந்திருப்பதை சரித்திரங்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றன. ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளில் எல்லாம் சிறுபான்மை இனத்தை ஒழிக்க முற்பட்டவர்கள், ஈற்றில் தாங்களே அழிந்து போன வரலாற்றை நான் எதிர்க்கட்சி நண்பர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்” இவ்வாறு வரவு செலவுத்திட்ட விவாதத்தின் இறுதி நாளன்று உரையாற்றிய மட்டக்களப்பு முதல் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை கூறினார்.

திரு.இராசதுரைதொடர்ந்து பேசியதாவது:—

‘இலங்கை அழகும் சுபீட்சமும் பஞ்சசிலத்தில் நம்பிக்கையும் கீழைத்தேய நாகரீக கலாச்சாரத் துறைகளில் முன்னேற்றமும் உடைய ஒரு நாடு. இந்நாட்டில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக உழைக்கின்ற அரசியல் வாதிகள் மலிந்து விட்டதனால் இந்நாட்டின் சௌஜன்ய உறவும், சீரும், சமாதானமும், பொருளாதார உயர்வும் மீண்டும் சீர்குலையக்கூடிய அபாயகரமான நிலை, மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் ஏற்படுவது ஒரு துக்ககரமான நிகழ்ச்சியாகும்.

‘இந்நாட்டின் அரசியல்வாதிகள் அகில உலகத்திற்கும் சென்று வருகிறார்கள். அந்தந்த நாடுகளில் எல்லாம் நடக்கின்ற சிறந்த அரசியல் அமைப்பு முறைகளை நன்கு படித்திருக்கிறார்கள். ஆனால் திரும்பி நமதுநாட்டிற்கு வந்தவுடன் அவர்கள் இந்நாட்டுப் பொதுமக்களை— நல்லெண்ணமும், நல்ல சிந்தையும், நல்லறிவுமுடைய பொதுமக்களை— தவறான அரசியற் பாதையில் வழிநடத்திச் செல்கிறார்கள்.

‘இப்பொழுது இந்தச்சபையில்நடைபெறும் வரவு செலவுத்திட்டவிவாதத்தின்போது அரசாங்கத்தின் உத்தேச மாவட்டசபைகளைப்பற்றி பலமான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

‘மாவட்ட சபை என்பது தேசிய அரசின் ஒரு குழந்தையல்ல; மாவட்டசபை உலகத்தில் பல நாடுகளில் இயங்கிக் [illegible] சியல் அமைப்பு முறையாகும். [illegible] இந்நாட்டில் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப்பின்பற்றுவதாகக் கூறித்திரிகிறார்கள். காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா கடந்த காலங்களில் ஆற்றிய கருத்துமிக்க உரைகளை இவர்கள் கவனித்துப் பார்க்கவேண்டும்,



### பண்டா சொன்னது

‘ஒருசந்தர்ப்பத்தில் திரு. பண்டாரநாயக்கா பின்வருமாறு கூறினார்.

‘ஆம், சுதந்திரம் சிங்கள மக்களுக்கு மாத்திரம் கிடைக்கவில்லை. இந்நாட்டு மக்கள் அனைவருக்கும், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் அனைவருக்கும் பொதுவானதே இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம்’

இதைவிட உயர்ந்த வார்த்தைகளைக் கூறக்கூடிய ஒரு பிரதமர் இருக்க முடியுமா? ஆனால் அவரது கொள்கைகளைப் பின்பற்றுகிறோமென்று சொல்லும் அரசியல்வாதிகள் இன்று என்ன செய்கிறார்கள்?

‘இன்று மாவட்ட சபைகள் நாட்டைத் துண்டு போட முனைகின்றன என்றும், தமிழரசுக்கட்சிக்கு கொடுக்கப்படும் சன்மானமே அது என்றும் வர்ணிக்கப்படுகிறது.

### டொனமூர் கமிஷன் ரிபார்சு

‘மாவட்டசபைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும் அரசியல் அமைப்பு அல்ல; இந்நாட்டின் நிர்வாக இயந்திரத்தை சீர் செய்யவும், அதனைப் பரவலாக்கவுமே கொண்டு வரப்படும் அரசியல் அமைப்பு மாவட்ட சபைகளாகும். இந் நாட்டுக்கு டொனமூர்கமிஷனர்கள் வந்த போது அவர்கள் முன்னிலையில், இந்நாட்டுக்கு மாவட்ட சபைகள் வேண்டும், பிரதேச சபைகள் வேண்டும் என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள்.

### சரித்திரம் காட்டும் உண்மை

‘எந்தநாடுசிறுபான்மை மக்களுடைய உரிமைகளைக் கொடுக்க மறுத்ததோ, அந்த நாடு அரசியலிலும் சரி, நாகரீகத்திலும் சரி, பொருளாதாரத்துறையிலும் சரி விழ்ச்சியடைந்துள்ளது என்பதற்கு நான் பல உதாரணங்களைக் காட்ட முடியும்.

’ஸ்பெயின், பிரான்ஸ்,ஜெர்மனி போன்ற நாடுகளில் எல்லாம் சிறுபான்மை இனத்தை ஒழிக்க முற்பட்டவர்கள் ஈற்றில் தாங்களே அழிந்துபோன சரித்திரத்தை நான்உங்களுக்கு எடுத்துக் காட்ட முடியும்.

### யாருடைய கொள்கையை பின்பற்றுகிறீர்கள்?

‘இன்று இந்நாட்டில், மாவட்ட சபைகள் ஒரு பூச்சாண்டியாகக் கணிக்கப்படுகிறது. ஆனால் இந்த மாவட்ட சபைகளிலும் அதிகாரம்கூடிய பிரதேச சபைகளையே தருவதற்கு காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா எங்களுடன் ஒப்பந்தம் செய்திருந்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ழரை அகற்ற ...சய்கிருரா?

## இனத்துவேசத்துக்கு ...த்தினம் கண்டனம்

சிங்கள மக்கள் அழிவையே அடைவார்கள் என்று கூறுவதை நாங்கள் கேட்கிறேம். இது வெறும் துவேஷப்பொய்ப் பிரசாரமென்பதை இங்கே நாங்கள் கூறக் கடமைப்பட்டிருக்கிறேம்.

### பொருத்தமற்ற கூற்று

'உண்மையிலே அரசியலில் அரிச்சுவடி கூடத் தெரிந்தவர்களுக்குத் தெரியும், தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒரு மாகாண ஆட்சிதான் என்பது. அது வேறெந்த நாட்டினுடைய அரசியலிலும் தலையிட முடியாத ஒரு நிலையிலே உள்ளது. இப்படிப்பட்ட ஒரு ஆட்சியால் இலங்கையிலேயுள்ள

### வரலாறு உணர்த்தும் பாடம்

'இப்பொழுது உலகத்திலே இருக்கின்ற அடக்கப்பட்டிருக்கின்ற இனத்தினர் அனைவரும் தங்களுக்கு உரிமை வேண்டுமென்று கேட்கும் காரணம் என்னவென்ருல், எந்த இனத்தைச் சேர்ந்த தனி மனிதனுவது, அவன் வாழும் நாட்டிலே சம உரிமைகளுடன் தான் வாழ வேண்டுமென்ற உணர்ச்சி அவனிடம் ஏற்பட்டு விட்டதுதான். அவன் எப்பொழுதாவது ஒரு நாள் கிளர்ந்து எழுவான் என்பது சரித்திரம் கற்பிக்கும் பாடம். இப்பொழுது நம் கண் முன்னுல் நடக்கின்ற இச் செயல்களை உதாரணமாக காண்கிறேம்.

## பாராளுமன்றம்

சிங்கள மக்களுடைய, பெரும்பான்மையினராகவிருக்கின்றவர்களுடை வாழ்வு பாதிக்கப்படுமென்று நாளும் பொழுதும் சொல்லுவது ஒரு வெறுக்கத்தக்க, ஒரு பொருத்தமில்லாத கூற்ருகும்.

'ஆகவே, இப்படிப்பட்ட பொய்ப் பிரசாரங்களிலே ஈடுபடாமல். மீண்டும் இந் நாட்டிலே வகுப்புத் துவேஷத்தை உண்டாக்காமல், நாடு முன்னேற்றம் அடையத் தக்க முறையிலே, பெருளாதாரக் கொள்கையைச் சிறப்புற நடத்தத் தக்க முறையிலே எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று இந் நாட்டின் நலன் கருதி நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கருத்தில்லாதவற்றை, பொய்யானவற்றை ஆயிரம் முறை சொன்னுலென்ன, அதனுல் எந்தப் பயனையும் பெற முடியாதென்பதை அவர்கள் அறிந்து, உணர்ந்துகொள்ள வேண்டும்.

### அமெரிக்காவில் நடப்பதென்ன

'இன்று அமெரிக்காவிலே நடப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்: அமெரிக்காவிலே வாழ்கின்ற நீக்ரோ மக்கள் என்ன செய்கின்றுர்கள்? அமெரிக்காவிலே அவர்கள் ஒரே மொழியைப் பேசுகின்றுர்கள். அவர்கள் பேசுவதும் ஆங்கிலம் தான். ஓரே மொழியைப் பேசும் மக்கள் கூட சமுதாய வாழ்விலும் மற்றும் ஏனைய துறைகளிலும் தங்களுக்குச் சமத்துவம் கிடைக்கவில்லையென்று அங்கே கிளர்ச்சி செய்கிருர்கள்.

'நைஜீரியாவிலே நடப்பதைப் பாருங்கள். இன்று கனடாவிலே கியுபெக்கிலே நடப்பதைப் பாருங்கள். இப்பொழுது இஸ்கொத்திலாந்திலே உள்ளவர்கள் கூட தங்களுக்குத் தனியாட்சி வேண்டுமென்று கேட்கிருர்கள்.

### இணைப்பாட்சி தேவை

'ஆகையல், எதிர்ப்பக்கத்திலிருந்தாலும் சரி, வேறு எந்தப் பக்கத்திலிருந்தாலும் சரி, அல்லது தமிழர்களுக்குள்ளே உள்ள சோடரிக் காம்புகளாயிருந்தாலும் சரி, இந்த நாட்டிலே தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சிறப்பாக, ஒற்றுமையாக வாழவேண்டுமானல் இந்த நாட்டுக்கு இணைப்பு ஆட்சிதான் தேவையென்பதை அவர்கள் இனிமேலாவது ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன்.

### பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை

'இந்த நாட்டிலேயுள்ள மூலப்பொருட்களைக் கொண்டு பல கைத்தொழில்களை விருத்தி செய்ய முடியும். அத்தகைய கைத்தொழில்களில் சிறப்பானது பரந்தனிலுள்ள இரசாயனத் தொழிற்சாலை. பரந்தனில் உள்ள இரசாயனத் தொழிற்சாலைக்கு மூலப் பொருளாகஉள்ளது உப்பு. அந்த இரசாயனத் தொழிற்சாலை சென்ற காலத்திலே போதிய அளவு விருத்தி செய்யப்படவில்லை. கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சர் அந்தத் தொழிற்சாலைக்கு வருகை தந்த பொழுது நான் இக் குறையை அவருக்குச் சுட்டிக் காட்டினேன். அவர் அந்தத் தொழிற்சாலையை விருத்தி செய்ய பல திட்டங்களை வகுப்பதாகவும் விருத்தி செய்வதாகவும்' கூறினர். ஆனல் விரைவு போதாது. மிக விரைவாக அதனை விருத்தி செய்ய வேண்டும்.

### வடபகுதி உப்பளங்கள்

'ஒரு சதம்தானும் செலவு செய்யாமல் இயற்கையான முழு மூலப் பொருளை மாற்றுவதால் வருகிற ஒரு

(14-ம் பக்கம் பார்க்க)

# "சிங்களப் பொது மக்களிடம் சமஷ்டிப் பிரசாரம் செய்வோம்"

## டாக்டர் நாகநாதன் பேச்சு

"இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகம் மலரவும், எல்லா மக்களும் சமஉரிமையுடன் வாழவும், இந்நாட்டிற்கு ஒரு சமஷ்டியரசியற் திட்டம் ஏற்பட வேண்டும்' என்பதில் தமிழரசுக் கட்சி அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறது நாட்டின் முழு நலனையும் உத்தேசித்தே நாம் சமஷ்டியரசமைப்பு கோருகிறேமே தவிர தனியே தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக மட்டுமல்ல என்பதை சிங்கள மக்கள் உணர வேண்டும். விரைவில் சிங்கள மக்கள் மத்தியிலும் சமஷ்டிக் கோரிக்கைபற்றி பிரசாரம் செய்வோம்" இவ்வாறு வரவு செலவுத்திட்ட விவாதத்தின் இறுதி நாளன்று பேசிய நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தெரிவித்தார்.

திரு.நாகநாதன்தொடர்ந்து பேசியதாவது:

சமஷ்டியென்பது பிரிவினை என்ற தவருன கருத்து சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்பட்டிருக்கின்றது. இது ஒரு தவருன பிரச்சாரம். சமஷ்டியாட்சியின் கீழ் பிரிவினை செய்ய முடியாது.

சமஷ்டியரசியற் திட்டத்தை நாம் கோருவதற்கு காரணம் இந்நாட்டில் உண்மையான ஜனநாயக வாழ்க்கை மலர்வதற்காகவே. சமஷ்டியாட்சியால் தமிழர்களுக்கு மட்டுமல்ல, முழு இலங்கைக்குமே நன்மை ஏற்பட வழி பிறக்கும்.

இன்று வடக்கு கிழக்கில் சமஷ்டிப் பிரசாரம் செய்யும் நாம், முழு இலங்கையிலும் சமஷ்டிபற்றி எடுத்துக் கூறும் நாள் நெருங்கி வருகிறது. சிங்கள மக்கள் மத்தியிலும் சமஷ்டிக் கோரிக்கையின் அவசியத்தை எடுத்து விளக்க விருக்கிறேம். இலங்கையிலுள்ள சகல மக்களும், சகல அரசியற் கட்சிகளும், சமஷ்டிக் கோரிக்கையை ஆதரித்து நிற்கும் காலம் அதிக தூரத்திலில்லை'

## சபையில் டாக்டர் இ. மு. வி. தொடுத்த கணைகள்

டாக்டர்: நாட்டின் பொருளாதாரம் புயலில் சிக்குண்ட கப்பலைப் போல இருக்கிறது. அதனைக் கப்டனை நிதி மந்திரி காப்பாற்ற முயலுகின்றுர். இந்த நேரத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்?

பீலிக்ஸ்: கப்பலில் இருந்து தப்பி வெளியேற வேண்டும்,

டாக்டர்: [ஆத்திரத்துடன்] 'நீங்கள் அப்படித்தான்செய்வீர்கள், நாங்கள் அப்படிச் செய்ய வேண்டுமென எதிர்பார்த்தால் ஏமாந்து விடுவீர்கள்! நாங்கள் கப்பலைக் காப்பாற்ற உதவுவோம்.

★

'இன்று நாகநாதன் என்ன எண்ணுகிருரோ அதனையே நாளை உலகமும் எண்ணுகிறது.

★

'பெண் இல்லாமல் ஆண் எப்படி திருமணம் செய்ய முடியாதோ அது போல மத்திய அரசாங்கமென்று ஒன்றில்லாமல் சமஷ்டியரசு இருக்க முடியாது.

★

'சோறே கிடைக்காதவனுக்கு புரியாணி சாப்பிடுமாறு எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி கூறுகிருர்.'

## தமிழரசுக் கிளர்ச்சி வெற்றி: தொழிற்சாலை இடமாற்றமில்லை

புல் மோட்டையிலுள்ள இல்மனைட் தொழிற்சாலையை சினன் வாடிக்கு இடமாற்றம் செய்யும் திட்டத்தை கைவிட அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது. இடமாற்றத்திட்டத்துக்கு தமிழரசுத் தந்தை தெரிவித்த கடுமையான ஆட்சேபனையே இதற்குக் காரணம் என்று தெரிகிறது.

புல் மோட்டையிலுள்ள இல் மனைட் தொழிற்சாலையை சினன் வாடிக்கு மாற்றும் திட்டத்தை புல்மோட்டை வாசிகளும், துறைமுகத் தொழிலாளர் கழகமும், தமிழரசு எம். பீக்களும் கடுமையாக எதிர்த்து வந்தது தெரிந்ததே.

இது சம்பந்தமாக நிலைமையை விளக்கியும், தொழிற்சாலை இடமாற்றத்திட்டத்தைக் கைவிடக்கேரியும் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் பிரதமருக்கு அண்மையில் ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

தமிழரசுத் தந்தையின் ஆட்சேபனையைத் தொடர்ந்து இவ் விஷயத்தை பிரதமரின் பரிசீலனையில் விட கைத்தொழிலமைச்சர் முடிவு செய்திருந்தார்.

பிரதமரின் ஆலோசனைக்குப்பின், மேற்படி தொழிற்சாலையை இடமாற்றும் திட்டத்தை காலவரையின்றி ஒத்திப் போட அமைச்சு முடிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது.

## சிங்களச் சட்டத்தால் வேலையிழந்தோர் பிரச்சினை

### தமிழரசுத் தூதுக் குழு பிரதமரைச்சந்திக்கும்

சிங்களம் மட்டும் சட்டத்தினுல் வேலையிழந்தோர் பிரச்சினை குறித்து தமிழரசுத் தூதுக்குழு ஒன்று விரைவில் பிரதமரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக அறியப்படுகிறது. இப் பேச்சுவார்த்தையின் போது ஒரு புதிய மகஜரைத் தமிழரசுத் தூதுக் குழு சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிய வருகிறது.

சிங்களம் மட்டும் சட்டத்தால் வேலை இழந்தோர் பிரச்சினை குறித்து தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து தமிழரசுக்கட்சி பிரதமருடனும் ஏனைய அமைச்சர்களுடனும் பல முறை விவாதித்துள்ளது தெரிந்ததே. எனினும் இப் பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வு இதுவரை [illegible] படுகிறது.

இவ் விஷயமாக மீண்டும் பிரதமரைச் சந்தித்து பேச தமிழரசு எம். பீக்கள் முடிவு செய்துள்ளதாகவும், விரைவில் இச் சந்திப்பு நிகழலாம் என்றும் தெரிகிறது. பிரதமரைச் சந்திக்கும் போது சமர்ப்பிப்பதற்காக புதிய மகஜர் ஒன்றைத் தாயராக்குவதில் தமிழரசு எம். பீக்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்று அறியப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ப் பெருக்கு

மார்கழி மாதத்து இளம் வளர் நிலாவின் அழகை விடிய விடிய நித்திரையின்றி விநாயகர் பெருமான் ஆலயத்தல்; தேவாரம், திருப்புகழ் போன்ற பாமாலைகள் பாடி கச்சேரிகள் செய்து திருவெம்பாவை நிகழ்ச்சியை சிறப்பித்து களித்துக் கொண்டிருக்கும் இளம் வாலிபர் கூட்டம் பார்த்து கண்ணூறு விளைவித்து விடுவார்களோ என்று அஞ்சி வெண்பனி அவர்களின் கண்களை; மாயத்திரை வீசி வெண்மதியின் முழு அழகையும் பார்த்துவ்டாதிருக்குமாறு நிலத்தை நோக்கிப் பரவலாக விழுந்துகொண்டிருக்கிறது.

வெண்நிலவின் பால் போன்ற ஒளியை ரசித்தவண்ணம் இன்புற்றிருந்த மதியழகனின் பிஞ்சு உள்ளத்தில் திடீரென ஒரு இனிய பாடல் வெளிவருகிறது. தன் நண்பர்களின் பாட்டுக் கச்சேரி முடியும் வரையும் பொறுமையுடனிருக்கின்றான்.

அப்பொழுது துயின்றுகொண்டிருந்த ஒரு ஆச்சியின் அசைந்த சத்தத்தையும் கொட்டாவியையும் மதியழகனின் செவிகள் கேட்டுக்கொள்கின்றன. உடனே ஓடிச்சென்று எல்லோருக்குமாக வைக்கப்பட்டிருந்த தேநீர் சருவட்டானையிலிருந்து ஒரு கோப்பைத்தேத்தண்ணியைக் கொண்டுவந்து கொடுத்து ஆச்சியிடம் சில ஆசிகள் பெற்றுக் கொள்கிறான்.

'ஏன்மனே, விடியிறத்திக்கு இன்னும் கனநேரமாகிடக்கு?'

இல்ல ஆச்சி, விடியப் போகுது. இனிமே நான் வயலுக்கும் போகோணும் ஆச்சி அங்க அப்புக்கு சாமான் சட்டுக்களெல்லாம் இல்ல. வயலிலயும் சரியான வெள்ளம் வருதாம். வெள்ளாம வெட்டுற காலத்தில வெள்ளம் வந்து அளிச்சு[illegible]ள் போட்டிருமோ எண்டுதான் பயமாக் கிடக்கு ஆச்சி.

'பயப்பிடாத மனே, அதுக்குத்தான் நம்மட பிள்ளையார் இருக்காரே! வெள்ளாமய் நல்லா விளைச்சுத்தந்தா கடவுளே எண்டு பெரிய பூசையொண்டு 'தைப்பொங்கலண்டை'க்குச்சிறப்பா மோளமெல்லாமெடுத்து செய்யேலும். 'அப்புமுருகா (எழும்புகிறார்) நானும் இனி வீட்ட ஓடிப்போயிற்றுத்தான் மனே வரோணும். அங்க பொடியன் தோட்டத்துச்குத் தண்ணியூத்தப்போகோணும். நான்போய் புளிக்கப் போட்ட மாவை நாலு அப்ப மெண்டாலும் சுட்டுக் குடுத்தா என்ரபுள்ள போயிற்று இனிபொழுதுபடக் கிட்டவாத்தான்வரும். வந்துமென்ன, நான் காச்சிவைக்கிற எதையாகுதல் திண்டிட்டு பேசாமப் படுத்திரும். என்ர புள்ளயில எலும்புதான் இருக்கு. நான்வாறன்மோன.

'சரி ஆச்சிபோயிற்றுவா.' மதியழகன் விடிவெள்ளிகாலித்ததும் தன் நண்பர்களின் கூட்டத்திடம் விடைபெற்றுக்கொண்டு தானும் ஒரு புறமாக வயலுக்கு விரைந்துகொண்டிருக்கிறான். அவன் மனம் ஓரே வினக்களையும், விடைகளையும் எழுப்பி பிரச்சினையை எழுப்பிக்கொண்டிருக்கிறது.

நாங்க நெடுக ஓயாம வெள்ளாம செய்யிறதும், கடனக் குடுக்கிறதும், பிறகு வாங்கிறதும், நெடுகவயலிலயேகிடந்து புல்லிலயும், தண்ணிக்காட்டிலயும், சேத்துக் காட்டிலயும் கிடந்து சாகிறதும், இதையெல்லாம் நினைச்சா?...இதிர முடிவுதான் என்ன? கடவுளும் இருக்கிறார்தானு?...என்ர கூட்டாளிடளெல்லாம் ஒவ்வொரு நாளும் வீட்டில கிளித்தட்டு, நொண்டி கீசகம், பந்து எல்லாம் விளையாடுகிறார்கள். நான் என்ன? எப்பவாகுதல் அவர்களோட கூட விளையாடியிருக்கனு? வயல்காட்டில இந்துவாறதும், பிறகு உடனே போறதும் [illegible]இதுதானுவேல... ...எப்பயாச்சும் வீட்டில ஆறுதலா சோறு திண்டாகுதல் இருக்கிறனு? நல்ல மீன்கறிவைக் கண்டு எத்தின நாள்?... ...அவன் கண்களினின்றும் அவனையுமறியாமல் கண்ணீர் வழிந்தோடுகிறது.. துடைத்துவிட்டுக்கொண்டு நடக்கிறான். தினேரிக்குப் போகும் சண்டக் காட்டுத் துறையடியை நோக்கி.

துறையைப் பார்த்த உடனேயே அவன் உள்மனம் பகீரென எரியத் தொடங்குகிறது. இவ்வளவு வெள்ளம் துறையல வந்தா, அங்க வயலில அப்புவின கெதியென்ன? கடவுளே, ஒருவரும் பக்கத்திலயும் துணையில்லேயே, எல்லாரும் வீட்டிலயெல்லே நிக்கிறாங்க? துறையில் பொங்கிப் பெருகிச் செல்லும் வெள்ளப் பிரவாகத்தின் வேகத்தைக் காண மதியழகனின் மனமும் பயங்கரமாக மாறுகின்றது. தோளிலுள்ள சாமான்பையை கீழேயிருந்த ஒரு கண்ணுக் கட்டையில் வைத்துவிட்டு, நடுக்கடலில் தத்தளித்தவண்ணம் அங்குமிங்கும்ஆடியும், அசைந்தும், ஓரடி முன்னேறி, ஈரடி பின்னும் சென்று சுழன்றுவரும் தோணியைப் பார்த்துப் பெரு மூச்செறிந்தவண்ணம் பலவிதமான யோசனைகளுடன் மூளையைக் குளப்பிக்கொண்டிருக்கிறான்.

வள்ளம் கரைக்கு வந்ததும் அவனோடு கூட இரண்டு வயல்காரர் தானுமாக நால்வரும் ஏறிக்கொள்கின்றனர். வள்ளம் நீற்றிலே விரைகின்றது. எவ்வளவோ பயங்கரமான நீர்ச் சுழிகளினின்றும் தப்பித்துக்கொண்டு தோணி மறுகரையை அடைகிறது. வள்ளக்காரனும் இனியேல்தோணி விட முடியாது என்று கூறிவிடுகிறான். வெள்ளம் வரவரப் பெருகி வருவதால் வளளம் வடமுடியாதுதான்.

**'கேணி வண்ணன்'**

அவன்தான் என்ன செய்வான்?

அக்கரைப்பட்டதும் மதியழகனை வயலுக்குப் போக வேண்டாம் என்று தடுத்தோரும், இவ்வெள்ளத்திலே

**எமது சிறுகதை**

தனியாக வந்தமைக்காக திட்டியவர்களும் எத்தனையோ பேர். என்ன செய்வது? அவைகள் யாவும் அவன் செவிகளில் அப்போது ஏறவில்லை. நல்ல பிள்ளையென்று பெயரெடுத்திருந்தவன், ஒரு நொடியில் அவையெல்லாம இழந்து பல பேரின் சொல்லையும் கேளாது கெட்டவன் என்ற பெயரைப் பெற்றுக்கொள்கிறான். அவனது மனம் தன் தந்தையார் பசியோடு வாடி வெம்பிக்கொண்டிருப்பார் என்றே பதறிக்கொண்டிருக்கிறது. ஒரு நேரம் பசியுடன் இருந்தாலே அவனது தந்தையாருக்கு உடனே தலையிடிக்கத்தொடங்கிவிடுவது வழக்கம். அதை மாற்றுவதென்றால் உடனே அவர் சாப்பிட வேண்டும். இது அவரிடமுள்ள ஓர் அதிசய குணமாகும்.

'பாம்பின் கால் பாம்பறியும்.'

மதியழகன் நன்ருக அறிவான்; இப்ப அப்பு தலைக்குத்து வேதினையால் சுத்தி துடிதுடித்துக் கொண்டிருப்பார் என்பதை ஒருவேளை அவனைக் கண்டதும் ஆத்திரத்தினலையும் தாங்கமுடியாத வேதனையாலயும் அவனுக்கு அவர் அடித்தாலும் ஆச்சரியமில்லை.

எல்லோரினுடைய தடுப்புக்களையும் மீறி மதியழகன் திட்டுக்களின்மேல் ஏறியும், பள்ளத்தில் இறங்கியும், எட்டாத இடங்களில் நீந்தியும் தனது சாமான் பையை நனையவிடாமல் காப்பாற்றிய வண்ணம் [illegible] தன் தந்தையாருக்கு என கொண்டுசெல்லும் அப்பங்கள் இந்நேரம் காய்ந்திருக்கும்.

இன்னும் இரண்டு உப்பு நீர் ஓடைகளைத் தாண்டிவிட்டால் வயலைப்போயடைந்தமைக்குச் சரி. முன்னுள்ள உப்பு நீரோடையின் மூலமாகத்தான் வேளாண்மை வயல்களில் உள்ள அதிகமான நீரை வடியவைப்பார்கள். இதன்மூலம் எப்போதும் நீரோடிய வண்ணமிருக்கும். கோடைகாலங்களில் சாதாரணமாக சாறனை உயத்திக்கொண்டு சென்றுவிடலாம்.

ஓடைக்குச் சமீபத்தில் வந்ததும் மதியழகனின் சித்தம் கலங்கி, கைகால்கள் படபடத்தன. அவனது தைரியமெல்லாம் மறைந்தோடி விட்டது ஓடையைப் பார்த்த ஒரு நொடியில். சிறிய ஓடையாயிருந்தாலும் பயங்கரமான பெரிய நா சுழிகளுடன் மணலைத் தோண்டி மேலே எகிறிப் பரப்பியவண்ணம் குழிகளைத் தோண்டியும் குழியாயுள்ள இடத்தை நிரப்பியும் தனது செயலைக் காட்டிக்கொண்டிருக்கிறது.

ஒரு திட்டியில் ஏறி நின்று பெரும் சுழியுடன் ஓடும் ஆற்றைப் பார்ததும் அவனுககு மனவருத்தம் அதிகமாகிறது. தன்னநதனியாக, யாருமறற அனதையாக, எங்கு பார்க்கினும் சமுத்திரப்போன்றுதென்படும் நீர்ப்பரப்பைப் பார்த்து தன்னிரு கண்களினின்றும்கண்ணீர்சோர தந்தையை நினைந்து வாய்விட்டு அழுகிறான். 'அப்போய்...அப்போய்...ம்... ...ம்ஹூம்...என்னண்டு அப்பு நான் அங்காலவாற? நீ...இப்ப அங்க தலைக்குத்தால சிறும்பிகுமேல இருந்து துடிப்பியே அப்பு...அப்பூ...அப்பு...'

வெகுநேரத்தின் பின் அவன் ஏறிநின்றபண்புட்டியும்நீரால் அழிக்கப்படுகின்றது. அவனது பிஞ்சு உள்ளம், அல்ல அனதையுளளம் பேதலிக்கின்றது.

இனிமேல் நான் நின்று என்ன பலன் என்பதையுணர்கிறான். இப்பொழுது மதியழகனின் நிலை இருதலைக் கொள்ளியெறும்பின் நிலைபோன்று காணப்படுகின்றது. ஏழைகளின் நிலை இப்படியானதுதான் என்பதை மதியழகன் இன்று நன்று உணர்ந்து கொள்கிறான்.

தன்து சாறனை உரிகிறான். பையை தலையிலே வைக்கிறான் மெதுவாக நீருள் இறங்குகிறான். பக்கங்களில் சடைத்து நின்ற கண்டல் கண்ணமரத்தின் அருகே மெதுவாகவும், மிகக் கவனமாகவும் சென்று சமீபிக்கிறான். ஆற்றின் விழிம்பில் நின்ற மரத்தின் தாங்கும் வேரின் உதவியோடு; திடீரென தன் இரு கண்களையும் மூடிய வண்ணம் 'பிள்ளையாரே' என்று கூறியவண்ணம் சுழி நீருள் இறங்கிவிடுகிறான்!

'நீரின் வல்லமை யெங்கே? இச்சிறு பயலின் அறியாமை யெங்கே?' விழுந்த இடத்திலேயே ஏற்பட்ட சுழி அவனைச் சுருட்டி கண்டல் வேர்களின் இடுக்குகளில் கொண்டுபோய் மாட்டிவிடுகிறது. கால்கள் பின்னுப்பட்டுஅடர்ந்துவளர்ந்திருந்த வேரின் இடுககுகளில் அகபபட்டபடியால் நீருள் அமிழ்ந்தி மூச்சுத் திணறவைக்கும் நிலையில் கீழிலிருந்து மேலெழுந்த சுழியொன்று அவனை சுழற்றி முறுக்கியது... ...'ஐயோ...அம்மா...என்... ...ர...அப்போ...ய்...என்... ...ர கால்போச்...ஆ...' பரிதாபகரமாக எழுந்த அவலக்குரலும் ஓடையருகில் அடர்ந்து வளர்ந்திருந்த கண்ணக்காட்டின் மோதி அமைதியாக அழிந்துபோகின்றது. அவ...

விட வேறு எந்த விதமான சத்தமும் எழவில்லை!

மதியழகனின் முழங்காற்சில்லு ஒடிந்து மறுபக்கமாக திரும்பிவிடுகிறது. அத்தோடு நில்லாமல் ஒரு சுழியுடன் மறுகரையிலிருந்த ஒரு பெரியகண்ணக்கட்டையில் மோதியும் விடுகிறது. தலையில் ஒரு சிறிய அடிபட்டுவிடுகிறது. மயக்கநிலையில் இருந்த அவனுடல் இவ்வடிபட்டதன் காரணத்தால் விழிப்புறுகின்றது. கண்களைத் திறந்து எவ்வளவோ கஷ்டப்பட்டு எழுந்திருக்க முயன்றுபார்க்கிறான், முடியவேயில்லை. மீண்டும் நீருள் தவறிவிடுமுன்பக்கத்திலிருந்த கட்டையைப் பற்றுக்கோடாகப் பிடித்து அதினின்றும் விடுபட்டு கரையோரமாக மெதுவாக அரக்கி, அரக்கி நழுவி வந்து கொண்டிருக்கிறான்.

இரண்டாவதுஉப்புநீரோடையில் கயிறு கட்டியிருந்தார்கள். அதைப் பிடித்துச்சென்று தன் வயலின் எல்லை வரப்பின் முனையை தொட்டுவிடுகிறான்;

அப்பொழுது அவனது உடலிலிருந்த களைப்பு யாவும்நீங்கி தன் தந்தையைக் காணும் ஆவல் உந்த வயல்களில் நிறைந்துவழியும் நீரினுதவியால் ஒற்றைக்காலை இழுத்துக்கொண்டும், ஒற்றைக்காலினல் உதைத்துக் கொண்டும் பல வயல் வரம்புகளையும் தாண்டி முடிவில் மால்வரம்பையும் தாண்டிவிடுகிறான்.

அப்பொழுது கால்செய்யும் வேதனை நெரு நெருவென குத்திக்கொண்டிருக்கிறது. மெதுவாக தவழ்ந்து தவழ்ந்துபோய் தன் தந்தையாரின் குடிலுக்குள் நுளைகிறன் மதியழகன். உள்ளே வழமையாக தந்தையார் துயில்வதுபோன்று பசிக்களையின் வேகத்தாலும், தலைவலியின் உக்கிரத்தாலும் ஒரு எல்லைவைத்து நிம்மதியாகநித்திரை செய்துகொண்டிருக்கிறார். அவர் வெறும் கோவணத்துடனேயே படுத்திருந்தாராகையால் அவரின் வயிறு சுருங்கிக் காய்ந்துகிடந்தது.

'அப்பு, அப்பு...(விம்மலுடன் அழுகை பொத்துக் கொண்டு வருகிறது) அப்பு... ...அப்போய்...'

மெதுவாக கண் விழித்த அப்பு விரைவாகச் 'சிறும்பியி னி'ன்றும் கீழிறங்கி 'என் கதிரமலைக்கந்தா! இப்ப இந்த வெள்ளத்துக்குள்ள ஆர்வரச் சொன்ன? நான் ஒரு நேரம் பட்டினியிருந்தா என்ன குறைஞ்சாபோயிரும்? என்றவாறே வெளியில் வருகிறார்.

தன்மகனின் உண்மை நிலைமையையுணர்ந்த தந்தையார் வாயிலும், வயிற்றிலும் பரிதாபமாக அடித்துக் கதறிமுடிவில் பசிக்களையின் மிகுதியாலும் தலைவலியின் உரத்தாலும் மகனின் பரிதாப நிலையையும் கண்டு சுய நினைவை இழந்துவிடுகிறார்.

தந்தையினருகே தனயனும் சிறிது களைப்பாறிக்கொண்டிருந்தான்.

மறுநாள் விடியும் அதிகாலை வேளை. வெள்ளம் நன்ருக வடிந்துவிடவில்லை. பெரிய வள்ளமொன்றில் பக்கத்து வயல்காரர்கள் எல்லாம் வந்து சேர்கின்றனர்.

கால்முறிந்ததன் காரணமாக வெளியேறிய இரத்தம், கட்டுப்படாமல் ஓடி முடிந்துவிட்டபடியால் மதியழகனின் இதயம் இயங்க முடியவில்லை. மதியின் உயிரற்ற ஊனை வந்த வள்ளத்திலேயே மீண்டும் ஏற்றிக்கொண்டு ஆலங்கேணியை நோக்கிப் பயணமாகின்றனர் வந்தோர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த நெற்குலைகள், தங்களை வளர்ந்த சின்ன எசமான் மடிந்துவிட்டாரே; என்று ஆழ்ந்த அநுதாபத்தையும், இறுதி மரியாதையையும் தலைகுனிந்து தெரிவித்துக்கொண்டிருக்கின்றன.

(யாவும் கற்பனை)


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் அச்சு வார்ப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ் ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்த எங்கள் இயந்திரம் சாதாரண எழுத்துக்களையும், அலங்கார, எழுத்துக்களையும் வார்க்கக் கூடியது.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் அச்சு வார்ப்பகம்,**

194 ஏ. பண்டாரநாயக்கா வீதி,

கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாவட்டசபையின் அதிகாரங்கள்

## ஜெர்மன் ஜனநாயக குடியரசின் முன்மாதிரி

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் மாவட்டசபைகளுக்கு ஜூலை 2ந் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்றது. பரப்பு அளவிலும் சனத்தொகையிலும் இக் குடியரசு சிறியது. ஆனால் அங்கு 14 மாவட்டசபைகள் உண்டு.

பொருளாதார வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், விவசாய அபிவிருத்தி, போக்குவரத்து வசதிகளை அளித்தல் முதலிய பல்வேறு துறைகளில் தத்தம் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் இந்த மாவட்டசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளாகும்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் சனத்தொகையில் பெரும் பகுதியினர் தொழிலாளராதலின், பொதுத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டசபைகளின் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் தொழிலாளர்களாவர்.

டிரெஸ்டன் பிரதேச மாவட்டசபையில் உறுப்பினர்களில் 151 பேர் தொழிலாளர், 40 பேர் விவசாயிகள், 20 பேர் வாலிப, மாதர் சங்கப் பிரதிநிதிகள், 8 பேர் கலாசார சங்கங்களின் பிரதிநிதிகள், 22 பேர் கட்சி சார்பற்றவர்கள் உண்டு.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பாராளுமன்றத்துக்கு நடைபெறும் பொதுத்தேர்தலின் போதுதான் மாவட்டசபைகளுக்கும் பொதுத்தேர்தல் நடைபெறுகிறது.

மாவட்டசபைகளுக்கு உட்பட்ட பிரதேசங்கள் சம்பந்தமாக, மத்திய அரசாங்கமோ, அமைச்சுகளோ ஒரு முடிவைச் செய்ய வேண்டுமானால், முதலில் சம்பந்தப்பட்ட மாவட்டசபைகளைக் கலந்தாலோசிக்க வேண்டும். சில சமயங்களில் மத்திய அரசாங்கத்தின் முடிவுகளையே மாவட்டசபைகள் அவசியமான திருத்தங்களைச் செய்து அமுல்நடத்துவதும் உண்டு.

இந்த மாவட்டசபைகள் தத்தம் பிரதேசங்களின் முன்னேற்றத்திற்கான அபிவிருத்தித் திட்டங்களை தாங்களே தீட்டிக்கொண்டு அமுல் செய்வார்கள்.

நாட்டிலுள்ள 5 அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், வாலிபர் சங்கங்களும், மாதர் ஸ்தாபனங்களும், கலாசார நிறுவனங்களும் இம் மாவட்டசபைகளில் பிரதிநிதித்துவம் தாங்குகின்றன.

மாவட்டசபைகள் பல்வேறு நடவடிக்கைகளுக்காக உபகுழுக்கள் நியமிப்பது உண்டு. தத்தம் பிரதேசங்களிலுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு—அவை முழுநாட்டுக்கும் பயன்படும் தேசிய முக்கியத்துவம்வாய்ந்த திட்டங்களாக இருந்தாலும் கூட—மாவட்டசபைகளும் அவற்றின் உபகுழுக்களுமே பொறுப்பாகும்.

## சிறுபான்மையினரின்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தார். ஆகவே எனது எதிர்க்கட்சி நண்பர்களைக் கேட்கிறேன்—இன்று யாருடைய கொள்கைகளைப் பின்பற்றுகிறீர்கள் நீங்கள்? ஸ்டாலினைப் பின்பற்றுகிறீர்களா? குருசேவைப் பின்பற்றுகிறீர்களா? மார்ஷல் டிட்டோவை பின்பற்றுகிறீர்களா? அல்லது உங்களுடைய மாபெருந் தலைவர் என்று நீங்கள் கருதுகின்ற காலஞ் சென்ற திரு. பண்டாரநாயக்காவைப் பின்பற்றுகிறீர்களா? நீங்கள் இவர்களில் யாருடைய கொள்கையைப் பின்பற்றுகிறீர்கள் என்று தெரியவில்லை!

### கிழக்கு புறக்கணிப்பு

'அடுத்து, கிழக்கு மாகாண மக்களுக்கு பல ஆண்டுகளாக ஒரு அவநம்பிக்கை அரசாங்கத்தில் ஏற்பட்டு வந்திருக்கின்றது. அந்த அவநம்பிக்கை இன்னும் தொடர்ந்து வருகின்றது. காரணம் யார்? அரசாங்கங்களா? அல்லது அரசாங்க நிர்வாக இயந்திரங்களை இயக்கும் உத்தியோகத்தர்களா என்பது கவனத்திற்கு எடுக்கப்படவேண்டும்.

'உணவு உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு காண வேண்டும் என்பதற்காக எவ்வளவோ முயற்சிகள் எடுக்கப்படுகிறது. ஆனால் இலங்கையின் நெற்களஞ்சியமான கிழக்குமாகாணம் இன்று விவசாயத்துறையில் புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

அங்குள்ள வயல்களுக்கு போதிய நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். உன்னிச்சை வெலது கரை வாய்க்காலைப் புனருத்தாரணம் செய்யுமாறு நான் வருடக்கணக்காக வற்புறுத்தி வருகிறேன். ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரசாங்க அதிகாரிகள் இவ்வளவு உதாசீன மனப்பான்மையோடு நடந்து கொள்ளும் போது நெல் உற்பத்தி எவ்வாறு பெருக்க முடியும்.

'நாட்டிலுள்ள சகல வாவிகளையும் குளங்களையும் நாம் புனருத்தாரணம் செய்ய வேண்டும். இங்கினியாகலைத் திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து செய்திருந்தால், 50,000 புசல் நெல் அதிகரித்திருக்க முடியும்.

'கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் வடக்கே தென்னமரவாடி தொடக்கம், பொத்துவில் வரையில் உள்ள சகல வயல் நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டால் இலங்கையின் நெற்தேவையின் பெரும் பகுதியை கிழக்கு மாகாண விவசாயிகளே ஈடு செய்வார்கள் என்று நான் உறுதியாக கூறமுடியும். விவசாயத்தை ஊக்குவிக்கு முகமாக, விவசாயத்தைப் பாடமாகப் படித்தவர்களை அரசாங்கப் பாடசாலைகளில் போதிப்பதற்கு விவசாய மாணவ ஆசிரியர்களாக நியமிக்க முன்வர வேண்டும்.

'இன்று பென்சன் சம்பந்தமாகவும் அரசியல்வாதிகள் தலையிட வேண்டியுள்ளது.

'திருகோணமலைப் பகுதியில் 30 தலைமை ஆசிரியர்களுக்கு கடந்த ஐந்தாண்டு காலமாக சம்பள படியேற்றம் வழங்கப்படவில்லையென்று தெரிகிறது. அரசாங்க காரியாலயங்கள் இப்படி அலட்சியமாகச் செயலாற்றினால் அரசியல்வாதிகள் அதில் தலையிட்டு சீர் செய்யும்படி கேட்பதில் என்ன தவறு இருக்க முடியும்.?

# ஜனவரிக்குமுன் இந்திரா அரசாங்கம் கவிழுமா?

திருமதி இந்திராவின் அரசாங்கம் ஆட்டங்கண்டு வருகிறது. திருமதி இந்திராவின் சொல்லுக்கு காங்கிரஸ் காரர் மத்தியில் மதிப்புக் குறைந்து வருவதையே அண்மையில் ஒரு திருத்தப் பிரேரணை மீது லோக சபையில் அவரது அரசாங்கம் அடைந்த தோல்வி எடுத்துக் காட்டுகிறது.

அடுத்த சனவரி மாதத்துக்கிடையில் டெல்லியில் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்து விடுமென்று சோசலிஸ்ட் எம். பி. ராஜ் நாராயண் அரசியல் சோதிடம் கூறியிருக்கிறார். திரு. வாஜ்பாயியும் இதை ஆமோதித்திருக்கிறார். அறிஞர் அண்ணாவும், எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்தால், டெல்லியில் காங்கிரஸ் ஆட்சியை கவிழ்த்து விடலாம் என்று கூறியுள்ளார்கள். இவர்கள் இப்படி உசாராக கூறுவதற்கு அண்மையில் எதிர்கட்சியால் கொண்டுவரப்பட்ட திருத்தம் ஒன்று டெல்லி பாராளுமன்றத்தில் யாரும் எதிர்பாராமலே முதல் வாக்கெடுப்பின் போது நிறைவேறியதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

### மராத்திய ஏடு கூற்று

பிரபல மராத்தியப் பத்திரிகையொன்று உள்துறை அமைச்சர் திரு. சவான் தலைமையில் 50 காங்கிரஸ் உறுப்பினர்கள் காங்கிரசிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சிப்பக்கம் சேருவார்கள் என்று சோதிடம் கூறியிருந்தது. இதை திரு. சவான் 'முழுப் பொய்' என்று மறுத்திருந்தார்.

எனினும் இதில் சிறிதளவாவது உண்மையிருக்கும் என்று டெல்லி அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

காங்கிரஸ் தலைமையிலும் மந்திரி சபையிலும் கண்ட விரிசல் சென்ற சில வாரங்களாக சிறுபிளவாக வளர்ந்து பெரிதாகிக் கொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆட்சிமொழிப்பிரச்சினையில் மட்டுமல்லாமல் ராஜமானியத்தை ரத்து செய்வதுபற்றியும் கருத்தடைத் திட்டம் ப்ற்றியும், பொருளாதாரக் கொள்கைபற்றியும் தீவிர கருத்து வேறுபாடு டெல்லி அமைச்சர்களுக்கிடையே நிலவி வருகிறது.

மொரார்ஜியும் இந்திராவும் இவ்விஷயங்களில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் இருவருககுமிடையே வெளிப்படையாக தகராறோ, சச்சரவோ இதுவரை ஏற்படவில்லை. அப்படி வெளிப்படையாக இருவரும் மோதிக்கொண்டாலும் அதில் ஆச்சரியப்பட இடமில்லை.

### பிரச்சினைக்குரியர் சவான்

இப்பொழுது சவான்தான் பிரச்சினைக்குரிய மனிதராக இருக்கிறார். சவானை வைத்துத்தான், அரசியல் வாதிகளும், பத்திரிகைகளும் ஹேஷ்யங்கள் கூறிவருகின்றன.

திருமதி இந்திராவையே தனது தலைவர் என்று திரு. சவான் கூறி வந்தாலும், இந்திராவை நம்பியிருந்தால் தனக்கு முன்னேற்றம் கிடையாதென்பதையும், தனது தனித்துவம் பறிபோய்விடுமென்பதையும் சவான் உணர்ந்து வருவதாக கூறப்படுகிறது.

மத்திய பிரதேசத்தில் அண்மையில் எழுந்த நெருக்கடியின் போது, மத்தியப் பிரதேசத்தில்மறுதேர்தல் நடத்த வேண்டும் என்று திருமதி இந்திரா காந்தியுடன் சவான் ஒத்துப்பாடினார். ஆனால் திருமதி இந்திரா திடீரென்று பல்டியடித்து மறுபக்கம் சாய்ந்து மத்திய பிரதேச ஆட்சியை எதிர்க்கட்சிகளிடம் ஒப்படைத்த போது சவானுக்கு தர்மசங்கடமான ஒரு நிலைமை ஏற்பட்டது.

### ராஜமானியப் பிரச்சினை

ராஜமானியங்களை நிறுத்தும் விஷயத்திலும் இதே நிலைதான். ராஜமானியத்தை நிறுத்தவேண்டும் என்பதில் சவான் உறுதியாக இருக்கிறார். ஆனால் திருமதி இந்திரா உறுதியுடன் இல்லை. வழவழா நிலையில் இருக்கிறார். மொரார்ஜியோ ராஜமானியம் நிறுத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார். ஆட்சிமொழி மசோதா விஷயத்திலும் இந்திராவிற்கும் சவானுக்கும் கருத்து வேறுபாடுண்டு. இது விஷயமாக இந்திமாநிலங்களின் சார்பாக மொரார்ஜி கொண்டுள்ள கருத்தை ஆதரிப்பவர் சவான். ஆனால் இந்திராவோ ஆங்கிலம் நீடிக்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்பதில் உறுதியாக இருந்து வருகிறார்.

சவானின் அண்மைக்கால நடவடிக்கைகளைப் பார்க்கும் போது இந்திராவிடமிருந்து மெல்ல மெல்ல விலகிச்செல்வதும், மொரார்ஜியுடன் நெருங்குவதும் தெரிகிறது; இந்திரா, மொரார்ஜியைவிட மூன்றுவது சக்தியாகவளர்ந்து வருகிறார் சவான்.

எது எப்படியிருந்தாலும் டெல்லி மத்திய ஆட்சியில் அண்மையில் பல மாறுதல்கள் நிகழப் போவதற்கான அறிகுறிகள் டெல்லிவட்டாரத்தில் தோன்றி விட்டன.

## யாழ்ப்பாணம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தித்துஇதை வலியுறுத்தியிருந்தார்.

'அவர்கள் அமைச்சரைக் கண்டபோது, "கட்டாயமாக இந்த பொருளுற்பத்தி வரி—ஐக் குறைப்பேன். இந்த வரி இருப்பதனால் சுருட்டுத் தொழில் எவ்வளவு குன்றிய நிலைக்குப் போறது என்பதை நான் நன்றாக உணர்கிறேன்" என்று ஒரு வாக்குறுதி கொடுத்திருந்தார். அவர் எங்களுக்குத் தந்த வாக்குறுதியைக் காப்பாற்றியதற்காக அவருக்கு எமது நன்றியைத் தெரிவிக்க நான் ஆசைப்படுகிறேன்.

### மலையாளப் புகையிலைப் பிரச்சினை!

'இந்தியாவுக்கு நாங்கள் ஏற்றுமதி செய்யும் பொருட்கள இந்தியாவிலிருந்து நாங்கள் இறக்குமதி செய்யும் பொருட்களிலும் பார்க்க குறைவாக இருப்பதால், நாங்கள் இந்தியாவுக்கு கொடுக்க வேண்டிய காசு, இந்தியா எமக்குத் தர வேண்டிய காசிலும் பார்க்கக் கூட இருக்கிறது என்று குறிப்பிட்டார். இந்த நேரத்திலே அரசாங்கத்துக்கு நான் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். எத்தனையோ ஆண்டுகளாக மலையாளம்—கேரள ஸ்டேட்டுக்கும் யாழ்ப்பாணம் இலங்கை அரசாங்கத்துக்கும்-ஒரு வர்த்தகத் தொடர்பு இருந்ததை நான் இங்கு ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

## அழுவதா?...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார், தமிழரசுக்கழகத்தைசேர்ந்த ம. பொ. சி வந்தார். யாரும், திரு. பொன்னம்பலத்தைப் பார்ப்பதில் அக்கறைகாட்டவில்லை.

ஆனால் சில வாரங்களுக்கு முன் வந்த திரு. சிற்றரசுவைக்கண்டுபேசி விடவேண்டுமென்று திரு. பொன்னம்பலம் முழு முயற்சி செய்தாராம். ஈற்றில் ஒருவாறு சிற்றரசு தரிசனம் கிடைத்தது தெரிந்ததே.

தி. மு. க. தலைவர்களைக் கண்டுபேசிவிட்டால்மட்டும் தமிழ்மக்களின் ஆதரவு கிடைத்துவிடுமென்று திரு. பொன்னம்பலம் தப்புக் கணக்கு போடுகிறார் என்றும், அவரதுஅரசியல்வாண வேடிக்கைகளில் இதுவும் ஒன்று என்றும் அரசியல் வட்டாரங்களில் கிண்டலாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## இபோச.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றுகள் ஏற்படாமற் பார்த்துக் கொள்ளவும் பொறுப்பாக ஒரு அதிகாரியை நியமிக்கும்படியும் திரு. செல்வநாயகம் வற்புறுத்தினார் என்று தெரிகிறது.

தாம் இதுவிஷயகாக உடன் நடவடிக்கை எடுப்பதாக தேசியப் சேவை அமைச்சர் தமிழரசுத் தந்தைக்கு உறுதி [illegible] அறியப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிப்புக்கு இலக்கணம் வகுத்தவர் சாவித்திரி"

## நடிகையர் திலகமாகவே எப்பொழுதும் விளங்கட்டும்"

### நெடுஞ்செழியன் வாழ்த்து

"சாவித்திரி நடித்துள்ள 150 படங்களும் பொருளாதார முறையில் பெரிய வெற்றிகளாக இல்லாது போயிருக்கலாம். ஆனாலும் அவரது நடிப்பு வரை யாரும் குறை சொல்ல முடியாது. பதினைந்து ஆண்டுகளுக்குள் ஒரு நடிகை 150 படங்களில் நடித்து முடித்திருக்கிறார் என்பது ஒரு பெரிய சாதனைதான். உலகில் வேறெங்கும் இம்மாதிரி நடந்திருக்க முடியாது. நடக்கவும் முடியாது. நடிகையர் திலகம் நல்ல நடிப்பிற்கு இலக்கணம் வகுத்துக் காட்டியவர். பண்பிலும் அப்படியே! வாழ்வெல்லாம் நடிகையர் திலகமாகவே இவர் விளங்கட்டும்" இவ்வாறு மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தில் நடிகையர் திலகத்துக்கு நடந்த பாராட்டுவிழாவிற்குத்தலைமை வகித்துப் பேசிய அமைச்சர் நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.

*சாவித்திரி 150 படங்களில் நடித்ததைப் பாராட்டி இவ் விழா நடைபெற்றது.*

டைரக்டர், படாதிபர் ஏ.பி. நாகராஜன் பேசினார். 'பொது



வாக பெரும்பாலான நடிகர்கள் கால் ஷீட்டு என்று கொடுத்தாலும் அரைக் கால் ஷீட்டு வேலைகூட நடந்திராது. ஆனால் சாவித்திரி முழு ஷீட்டுகளாகவே தந்து ரொம்ப கரெக்டாகவேலைக்கு வந்து 'குதி நெருப்பில்' என்று ராமன் சொன்னால் எப்படி பரதன் சற்றும் யோசியாது நெருப்பில் குதிப்பானே அதேபோல் பரதனது தன்மையைக் கொண்டவர் சாவித்ரி. எந்த வேடத்திலும் சோபிப்பார்'' என்றார்.

#### இணைத்தது நான்தான்!

டைரக்டர், படாதிபர் புல்லையா பாராட்டியபோது "எனக்கொரு பெருமை, ஒரு மகிழ்ச்சி, நான்தான் மனம் போல மாங்கலியத்தை டைரக்ட் செய்தேன். அதில் தான் முதல் முதலாக சாவித்ரியும் ஜெமினியும் இணைந்து நடித்தார்கள்; அதில் நடித்துக் கொண்டிருந்தபோது தான் இவ்விருவரும் திருமணம் செய்துகொண்டார்கள். அது சாவித்திரியின் 8வது படம். அதற்கப்பால் சாவித்திரி 150 படங்களில் நடித்திருக்கிறார். நானும் பாராட்ட வந்திருக்கிறேன். மகிழ்ச்சிக்குரிய விஷயம்' என்றார்.

#### ஜெய்சங்கருக்கு ஒரு சந்தர்ப்பம்

நடிகர் ஜெயசங்கர் மேடை ஏறினார். "இன்று வேலை செய்து கொண்டிருந்தபோதே கொஞ்சம் மட்டம் போட்டு விட்டு, பத்துமணிவரை அநுமதியும் பெற்று ஓடி வந்தேன் இங்கு. எதற்கு? சிறந்த நடிகை, நடிகையர் திலகம் சாவித்திரி பாராட்டப்படுவதைக் கண்டு மகிழ, அவருக்கும் எனக்கும் அதிகப்பரிச்சயமில்லை. ஆனாலும் அவர் நடித்துள்ள படங்கள் பலவற்றைக் கண்டு மகிழ்ந்தவன் நான்.

அவர் இப்பொழுது ஒரு படத்தை டைரக்டட் செய்யப் போவதாக அறிந்தேன். அது ஒரு தமிழ்ப்படமாக இருந்தால் நல்லது. அவ்வாறு இருந்தால் அதிலே கதாநாயகனாக நடிக்க எனக்குத்தான் அவர் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும், எனக்கு ஜெமினி கணேஷ் போட்டியாக இருப்பார் என்பது தெரியும். இருந்தாலும் அவர் நூறு படங்களில் நடித்ததாயிற்று புதிதாக முன்னுக்கு வரும் எனக்கே அவர் சந்தர்ப்பமளிக்க வேண்டும். வேறெதற்காகவும் இதைநான் கேட்கவில்லை. திறமையுள்ள ஒரு நல்ல டைரக்டர் டைரக்ட் செய்யும் படத்தில் நடித்தோம் என்றால் பெருமை அல்லவா? நல்ல பெயர் வருமல்லவா?... என்றார்.

#### சண்டையேற்படுவதுண்டு

ஜெமினிகணேசன், கணவர் என்ற ஹோதாவில்தான் பேசமுடியும் என்று கூறி



தாமும் சாவித்திரியும் மனமொத்து வாழ்வதாகவும், ஒருவரையொருவர் புரிந்து வாழ்வதாகவும், அவருக்கு இத்தனை பேர்கள் புகழ்மாலை சொரிவது தம்மை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டிருப்பதாகவும் கூறினார்.

"எங்களுக்குள் சண்டையே ஏற்பட்டதில்லை என்று நினைக்காதீர்கள், தினம் சண்டைதான். அவர் கத்துவார். அல்லது நான் கத்துவேன். எங்கள் இருவரில் விட்டுக் கொடுக்கும் மனப் பான்மை யாரில் இருக்கும் எண்ணிப்பார்த்துக் கொள்ளுங்கள்.

சாவித்திரி ஒரு சிறந்த மனைவி. உத்தமமான தாயார். அவளை என் மனைவியாகப் பெற்றது என் பாக்கியமே என்றார்.


#### தொடர்ந்து நடிப்பேன்

*சாவித்திரி முதன் முதலில் ஜெமினியைச் சந்தித்ததிலிருந்து அவரை மணந்தது வரை விவரமாகக் கூறினார்.*

"நான் வீட்டிலிருக்கும் பொழுது நான் ஒரு நடிகை என்பதை மறந்து விடுவேன், என் கணவருக்கும் என் குழந்தைக்கும் செய்யவேண்டியவற்றையே கவனிப்பேன். இன்று தந்த பாராட்டுதலகளால் எனக்குப் பெரிய பொறுப்பைத் தந்திருக்கிறீர்கள். என்னாலான வரை தொடர்ந்து நல்ல முறையிலேயே நடித்து வருவேன் என்று கூறுகிறேன்.

ஒரு விசேஷம். எனக்கு 100வது படம் கொஞ்சும் சலங்கை அதில் என்னுடன் நடித்தார் என் கணவர். இப்பொழுது சீதா எனக்கு 150 வது படம்: அவருக்கு 100 வது படம். இதிலும் சேர்ந்து நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது என்று கூறினார்

மொத்தத்தில் நல்லதொரு பாராட்டு விழா இது.



தம்பியின் மேல் அண்ணனுக்கு ஏன் இத்தனை கோபமோ? — 'ராமு' படம் சினிமாஸ் திரைகளில் திரையிடப்பட்டதும் தெரிந்து விடும்.

## நாகேஷ் சொன்ன "பேய்க்" கதை!

ஒரு படத்தில் நடிக்க வந்திருந்த நகைச்சுவை நடிகர் நாகேஷ் மேக்கப் அறைக்கு வெளியே தரையில் உட்கார்ந்திருந்தார். அப்போது அப்பக்கமாக வந்த படாதிபதியொருவர், 'என்ன நாகேஷ் தரையில் உட்கார்ந்திருக்கீங்க?' என்று கேட்டதும் 'எல்லோரும் இங்கே உட்கார்ந்துதான் மேக்கப் அறைக்குப் போகணும். பழைய ஞாபகம் வந்திடுச்சி; உட்கார்ந்தேன்' என்றார் நாகேஷ்.

அதே நேரம் அங்கே வந்த இன்னொருவர் 'என்ன நாகேஷ் சார், இங்கே உட்கார்ந்திட்டீங்க' என்று கேட்டதும் 'ஆமாம், நீங்களும் அப்படியே உட்காருங்க' என்றார் நாகேஷ்'

வந்தவர் தன் காலில் கிடந்த செருப்பை, தன் முன்னுல் போட்டுக்கொண்டு அமர்ந்தார். அச்சமயம், [illegible] செருப்பை இப்படிப் போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கீங்க?' என்று ஒருவர் கேட்டதும் பேய் பிசாசு நடமாட்டம் இங்கே அதிகம். அதனால்தான் அவர் இப்படி செருப்பை போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கிறார்' என்றார் நாகேஷ்.

'பேய் பிசாசா?' என்றார்வந்தவர்.

'ஆமாம், பயப்படாதீங்க, இப்போ மேக்கப் அறையிலிருந்து வரப்போகுது பாருங்க' என்று நாகேஷ் சொல்வதற்கும், ஒரு படத்தில் நடிக்கவந்திருந்த பெண்கள் தலையை அவிழ்த்துக்கொண்டு'மேக்கப்' அறையிலிருந்து வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

'பார்த்தீங்களா? நான் சொன்னது சரிதானு? என்று நாகேஷ் கேட்டதும் அங்கிருந்தோர் அனைவரும் சிரித்தனர்!

## திரைவாணன் பதில்கள்

த. மணிவண்ணன்,
ஊரெழு.

கே: 'ஞாயிறும் திங்களும்' படம் தயாரிக்கப்பட்டு விட்டதா?

ப: தயாரிப்பில் இருக்கிறது.

கே: 'சரசுவதி சபதம்' சென்னையில் எத்தனை நாட்கள் ஓடியது?

ப: 20வது வாரங்கள்.

கே: 'பேசும் தெய்வம் வெற்றிப்படமா?

ப: ஆம்.

கே: நடிகர் திலகத்தின் 'மகாகவி காளிதாஸ்' சென்னையில் எத்தனை நாட்கள் ஓடியது?

ப: 100 நாட்கள் ஓடவில்லை.

வி. கணேஸ்,
ஊரெழு.

கே: சிவாஜியின் வயது என்ன?

ப: 39.

கே: சிவாஜிகணேசன் நடித்த படம் மேல் நாடுகளில் திரையிடப்பட்டதுபோல எம்.ஜி.ஆரின் படம் ஏதும் மேல்நாட்டில் திரையிடப்பட்டிருக்கிறதா?

ப: எம். ஜி. ஆர், நடித்த 'நாடோடி மன்னன்' இங்கிலாந்தில் திரையிடப்பட்டதே!

கே: சிவாஜியின் தங்கை படம் எத்தனை நாட்கள் சென்னையில் ஓடியது?

ப: 70நாட்கள்.

எம். அசிஸ்,
ஏருவூர்.

கே: ஜெயலலிதாவின் எதிர்காலம் எப்படி? அவர் எத்தனை படங்களில் நடித்துள்ளார்?

ப: சுமார் 25 படங்களில் நடித்துள்ள ஜெயலலிதா கவர்ச்சியை மட்டும் நம்பியிராமல் நடிப்பை நம்புவாரானல் அவரது எதிர்காலம் ஒளி பொருந்தியதாக இருக்கும்!

எம். ரொசாரியோ,
கொழும்பு 13.

கே: டைரக்டர் ஸ்ரீதரின் முகவரி யாது?

ப: ஸ்ரீதர், வெங்கடராமய்யர் தெரு சென்னை-17.

வே. பத்மகாந்தன்,
நல்லூர் வடக்கு.

கே: நடிப்புக்கு அரசி விஜயா கவர்ச்சிக்கரசி. ஜெயா நான் சொல்வது சரிதானே?

ப: நடிப்புக்கும் அரசி விஜயாதான்! கவர்ச்சிக்கும் அரசி விஜயாதான்!

தழையூர், நாகராஜன்,
தாளங்குடா.

கே: எம். ஜி. ஆர். நடித்த 'பறக்கும் பாவை' பர்ட்லங்காஸ்டர் நடித்த 'டிரபீஸ்' படத்தை தழுவியதா?

ப: இக்காலத்தில் தழுவல் இல்லாமல் தமிழ்ப்படமே தயாரிக்கப்படுவதில்லையே.

ஞா. சந்திரசேகரம்,
ஏருவூர்.

கே: நாடோடி, சந்திரோதயம், முகராசி, ஆசை முகம் நான் ஆணையிட்டால், தொழிலாளி, கன்னித்தாய் ஆகிய படங்களில் சென்னையில் நூறு நாள் ஓடிய படமெது?

ப: முகராசி, கன்னித்தாய் ஆகிய படங்கள் 100 நாட்கள் ஓடின.

தி. கோணைநாயகம்,
பாண்டிருப்பு.

கே: 1965ம் ஆண்டில் வெளிவந்த படங்களில் (குறிப்பாக) எம். ஜி ஆர் நடித்த எங்க வீட்டுப் பிள்ளை சிவாஜி நடித்த திருவிளையாடல் ஆகியவற்றுள் எது அதிக வசூலக் கொடுத்து அதிக நாட்கள் ஓடியது?

ப: 'எங்க வீட்டுப் பிள்ளை'

திரைவாணன்,
சுதந்திரன் கல்பூத்தோசை
த. பெ. இல. 1183.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'எம். ஜி. ஆரின் வாரிசு ஜெய்சங்கர் தான்

## அறிஞர் அண்ணா பாராட்டு

எம். ஜி. ஆரின் வாரிசாக வரக்கூடியவர் நடிகர் ஜெய்சங்கர் தான்! இப்படி தமிழக் முதலமைச்சர் அறிஞர் அண்ணாவே நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.



சென்ற மாதம் சென்னையில் பெரிய அளவில் தீ விபத்து ஏற்பட்டது தெரிந்ததே. இந்தத் தீ விபத்து நிதிக்காக மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ரூபாய் 25,000 வழங்கியிருந்தார்.

மக்கள் திலகத்துக்கு அடுத்தபடியாக தீ விபததுக்கு ஓடோடிச் சென்று உதவி செயதவர் நடிகர் ஜெய்சங்கர். கோட்டைக்குச் சென்று அறிஞர் அண்ணாவிடம் நேரில் ரூபாய் 5001 ஐ கையளித்தார்.

அப்பொழுது ஜெய்சங்கரிடம் பின்வருமாறு அண்ணா கூறினாராம்.

'தம்பி, உன்னைப்போன்ற நடிகர்களின் ஒத்துழைப்பு மக்களுக்கு எந்தநேரமும் தேவைப்படும். ஆகவே நீங்கள் எந்நேரமும் தயாராக இருக்கவேண்டும். தம்பி ராமசசந்திரனைப் போல முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் நீஅவருடைய வாரிசாக வருவாய் என்று நான் நம்புகிறேன். எல்லாவற்றிலும் ராமச்சந்திரனைப் பின்பற்று! மக்கள் மத்தியில் உனக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும்.'

'எல்லாம் உங்களைப்போன்ற பெரியவர்களின் ஆசியால்தான் நான் இவ்வளவு புகழ்பெற்றேன். இப்பொழுதுதான் எனது மனம் நிம்மதியடைகிறது. ஏழை மக்களுக்காக நாமும் உதவி செய்தோம் அவர்களின் கண்ணீரைத் துடைத்தோம் என்ற நற்செய்தியில் எனக்கும் பங்கிருக்கிறது. நான் மேன்மேலும் புகழ்





பெற, நன்மைகள் செய்ய, உங்கள் ஆதரவும் அன்பும்தேவை' என்று அண்ணாவிடம் கூறி விடைபெற்றார் ஜெய்சங்கர்.

# பத்மினிக்கு கருணாநிதி பாராட்டு

'நடிகை பத்மினி நான் எழுதிய மணமகள் படத்தில்தான்



முதன் முதலில் நடித்தார். நான் எழுதிய வசனங்களை உச்சரித்தே முதலில் தமிழ் கற்றுக்கொண்டார். ஆனால் இன்று எந்த அளவு தனது தமிழ் உச்சரிப்பை பெருக்கியிருக்கிறார் என்று பார்க்கும் போது மகிழ்ச்சி யேற்படுகிறது.

'தமிழ்நாட்டில் நாட்டியக் கலை அழிந்துபோகாமல் காப்பாற்ற பத்மினி எடுத்தமுயற்சி பாராட்டுக்குரியது.

'பாதக்கலை மக்களின்உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பவை. அந்த அடிப்படையில்தான் அவை ஆண்டாண்டுகாலமாக வளர்ச்சிபெற்று வந்தன. இடைக்காலத்தில் அவை அழிந்துபோகும் நிலையேற்பட்டது. ஆனால் பத்மினிபோன்ற சிலரால் காப்பாற்றப்பட்டுவிட்டது.'

இப்படி பத்மினியைப் பாராட்டியவர் அமைச்சர் கலைஞர் கருணாநிதி. வேலூரில் நடைபெற்ற பத்மினியின் 'கண்ணகி' நாட்டிய நாடகத்துக்கு தலைமை வகித்துப் பேசும்போதே கருணாநிதி பத்மினியை மேற்கண்டவாறு பாராட்டிப் பேசினார்.

# வாழூ வாழவிடு

இராஜாதோட்டம் ப. க. பாரதிமன்றத்தின் ஆறுவது வெளியீடாக வாழு! வாழவிடு!! என்ற நாடகத்தை தீபாவளியன்று இராசாதோட்டம் திறந்தவெளியரங்கில் அரங்கேற்றப்படும்.

இந்நாடகத்தின் கதை, வசனம், டைரக்ஷன், நிர்வாகம் ஆகிய பொறுப்புகளோடு நாடகத்தின் முக்கிய பாகத்திலும் நடிக்கின்றார், பாரதிமன்றத் தலைவர் என். கருப்பையா. ஏனைய நடிகர்கள், எஸ். சூரியநாதன், பி. முத்தையா, எஸ். பொன்னையா, எம். பி. முத்தையா, எஸ். லெட்சுமன், பி. பாக்கியம், எஸ். சுப்பிரமணியம், மு. முத்தையா, கே. ஜெயராஜ், எம். ராமு, எம். சுப்பிரமணியம், ஏ. கே. கந்தையா, வேலு. பின்னணியைப் பி. பாலதம்புவும் இசையை முத்துலிங்கம், [illegible] முத்து, அர்ச்சுனன் ஆகியோரும் அமைக்கின்றனர்.

# "ஞாபக மறதி" நிர்மலா

வெண்ணிற ஆடை நிர்மலா இருக்கிறாரே அவரை ஞாபக மறதி நிர்மலா என்று அழைப்பது பொருத்தமானது. ஏன் தெரியுமா? ஞாடகமறதிக்கு அடிமைப்பட்டவர்தான் இந்த நிர்மலா.



வீட்டில் இவருக்கென்று ஒரு சீப்பு இருக்கிறது. அதைவைத்துத்தான் தலையலங்காரம்செய்வார். திடீரென்று அந்தச் சீப்பு அடிக்கடி காணாமல்போய் விடுவதுண்டு. அதைத் தேடி வீடு முழுக்க அலசிவிடுவார்.

வீடுமுழுக்க சல்லடைபோட்டுத் தேடிவிட்டு அலுத்துப்போய் நிர்மலா கண்ணாடி முன் போய் நின்றால், சீப்பு ஒளிந்து கொண்டிருக்கும் இடம்தெரிய வரும். எங்கே ஒளிந்திருக்கும் என்கிறீர்களா? நிர்மலாவின் தலையிலேதான் இருக்கும்! சீப்பைத் தலையில் வைத்துக் கொண்டே வீடு முழுவதும் தேடுவார் நிர்மலா. அந்த அளவுக்கு ஞாபகமறதி நிர்மலாவுக்கு! இவரை வெண்ணிற ஆடை நிர்மலா என்று அழைப்பதைவிட 'ஞாபகமறதி' நிர்மலா என்று அழைக்கலாமே!

—

# "ஜெனேவா" நாடகம்

தேசிய கலைஞர்களை ஊக்குவிக்கும் பணியில் தலைசிறந்த அண்ணாவிமார்களது மேற்பார்வையில் நாட்டுக் கூத்துப் பாணியில் யாழ். நாடகாலயம் தயாரித்து அளிக்கும் வரலாற்று நாடகம் 'ஜெனேவா" எதிர்வரும் பௌர்ணமி நாளில் (19-8-67) யாழ். திறந்த வெளி அரங்கில் [illegible] நிகழ்ச்சி இடம் பெறும் என்று தெரிகிறது.

திரை விமர்சனம் ஜெமா திரையில்

# மனம் ஒரு குரங்கு

சமூகத்தின் அடி மட்டத்தில் வாழும் கள்ளங்கபடமற்ற ஒருவனை நவநாகரீகத்தின உச்சியில் போலி வாழ்க்கை வாழும் ஒருவனாக மாற்றி விடலாம். ஆனால் அப்படி உயர்த்தப்பட்டவன் மீண்டும் பழைய அமைதியான வாழ்வை அடைய முடியாது என்ற கருத்தை வைத்துப் பின்னப்பட்டிருக்கும் படம் 'மனம் ஒரு குரங்கு.'

தமிழ்ப்பட வரிசையிலே ஒரு புதிய கோணத்திலிருந்து இப்படத்தின் கதை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் வெளிவந்த 'மை பெயர் லேடி'யை தழுவி கதை, வசனம் எழுதியிருக்கிறார் 'சோ'

போலி கௌரவத்தை நம்பி வாழும் உயர்ந்த மனிதர்களின் சமூகத்திலே பிறந்தவன் கோபி. ஆனால் பணக்காரர்களையே வெறுப்பவன். செல்லப்பா என்ற பணக்கார இளைஞன் மருதாயி என்ற காய்கறிக்காரியை, அவள் ஒரு நடிகையென்றெண்ணிக் காதலிக்கிறான். ஆனால் அவள் ஒரு காய்கறிக்காரியென அறிந்தபோது, அவளைக் கேலி செய்துவிட்டு போகிறான்.

மருதாயிக்கு ஏற்பட்ட பழியைத்துடைக்க கோபி முன் வருகிறான். மருதாயியை 'மொடேன் கேர்ல்' ஆக்குகிறான். மருதாயி மாலதி ஆகிறாள் செல்லப்பாவை பழிக்குப்பழி வாங்குகிறாள். மாலதி மல்லிகாதேவியாகி சினிமா நடிகையாகிறாள். பணம் அந்தஸ்து கௌரவம் குவிகிறது மல்லிகா தேவிக்கு.

ஆனாலும் என்ன? மல்லிகாதேவி மருதாயியாக இருந்த போதுஅவளது அத்தானாக இருந்த முருகையனின் அன்பை இழக்கிறாள். பழைய வாழ்க்கையில் இருந்த மகிழ்ச்சி புதிய வாழ்வில் இல்லை.

இன்றைய சமூகத்தில் வாழும் பெரிய இடத்து மனிதர்களின் போலி வாழ்க்கைக்கும நவநாகரீகப் பெண்மணிகளுக்கும் சுரீர் சுரீர் என்று கசையடி கொடுக்கிறார் சோ தனது வசனங்களால். இன்றைய தமிழ்ப்படங்களையும் கிண்டல் செய்கிறார்.

கோபியாக நடித்துள்ள ராஜன் நன்றாக நடித்திருக்கிறார்.

மருதாயியாக வந்து மாலதியாக மலர்ந்து மல்லிகா தேவியாகப் பரிணமிக்கும் விஜயா நடிப்பு பலே ஜோர்! காய்கறிச்காரியாக அவர் நடிக்கும் போது அவரது நடிப்பு சிறப்பு பெறுகிறது. அசல் காய்கறிக்காரியாகவே தோன்றுகிறார்.

முத்துராமன், முருகையன். அதிகச் சந்தர்ப்பம் அவருக்கில்லை.

அடிக்கடி மாறி மாறி 'தெய்வீகக்காதல்' கொள்ளும் 'சோ'வுக்கு ஒரு சபாஷ் போட வேண்டும். நல்ல நடிப்பு! அவரது ஜோடி விஜயராணி.

பாலையா வேறு இருக்கிறார்.

'டைட்டில்' காட்டப்படுவதில் ஒரு புதுமையைக் கையாண்டிருக்கிறார்கள். நல்ல முயற்சி!

பாட்டுக்களில் 'மனம் ஒரு குரங்கு' நன்றாக உள்ளது!

மொத்தத்தில் தமிழ்த்திரை உலகில் ஒரு புதுமைப் படம் 'மனம் ஒரு குரங்கு'

— மகேஸ்



இந்த இளம் காதலர்கள் இப்படி ஆச்சரியத்துடன் எதிரே பார்ப்பது என்ன? விரைவில் சினிமாஸ் திரைகளில் திரையிடப்பட விருக்கும் ஜனாதிபதியின் பாராட்டுப்பெற்ற படமான 'குழந்தையும் தெய்வமும்' படத்தில் ஜெய்சங்கரும் ஜமுனாவும் இப்படி தோன்றுகின்றனர். இப்படம் தமிழகத்தில் 100 நாட்கள் ஓடி வெற்றியீட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வாரம் உங்களுக்கு வெற்றியா?

திருமதி. அன்னலெட்சுமி மாணிக்கம்

## 20-8-67—26-8-67

### மேடம்

மனக் குளப்பம். இடை இடையே குடும்ப ரோகம். பணத்தினுல் மற்றவர்களிடையே கோள் கூறுதல். பிள்ளைகளின் கல்வி குறையை யிட்டு வசதி தேடுதல். வாழ்க்கையில் திடமான எண்ணத்திற்கு மறுப்பு. பொருள் கஷ்டமிருந்தும் மற்றவர்களின் உதவியினுல் ஒருவித நிம்மதி ஏற்படல்: கிழமையின் முடிவில் தொழிலைக் குறித்து மனச் சஞ்சலம் அடைதல்.

### இடபம்

நிலையான வழியைத் தேடுதல். செல்வமிருந்தும் செலவுக்குக் கஷ்டமடைதல் கல்வி ஏற்றம். வியாபாரத்தில் உன்னத ஸ்தாபனம் அடைதல். குடும்பத்தில் காலில் ரோகம் உண்டாகுதல் வசிக்குமிடத்தில் உறவினருடன் வேற்றுமை. பிள்ளைகளினுல் நன் மதிப்பு. பெற்ருேரின் சுகத்தைப் பேண வேண்டும்.

### மிதுனம்

தொழில் மதிப்பு. பொது விஷயங்களில் நேர்மை தவறுமை. பொருள் சேர்க்கை. பழைய கடன் அனுகூலமாகுதல். சினேகிதர், உறவினர் கூட்டம். பெரியவர்களின் ஆற்ற[illegible]ம் மன ஆசி கூறல். செல்வச் செருக்கு. தெய்வ வழிபாடு. கீர்த்தி. அதிகாரம் உண்டு.

### கடகம்

குறை கேட்டல். பிரயாணம். அன்னியர் வாழ்த்தல். செலவு மித மிஞ்சி கடன் படுதல். குடும்பத்தில் சுகவாழ்வு. மாதா சுகக் குறைவு. வாத ரோகம். தொழிலில் முன்னேற்றம். வருமானம் குறைவு. இடை இடையே சினேதர் வெறுப்பும், வசிக்குமிடத்தில் மனஸ்தாபமும் புதுமனை தேடுதல் உண்டு.

### சிங்கம்

பெற்ருேர் பெருமகிழ்ச்சி. கல்வியில் மகிழ்வான செய்தி அறிதல். சென்ற விடத்தில் மிகவும் நன் மதிப்பு. சகோதர முன்னேற்றம். வயோதிபரினுல் ஆசி. எண்ணிய கருமம் அல்லது செய்து வந்த தொழிலில் திருப்பம். போசன சுகம். மனச் சந்தோஷம் வெற்றி உண்டு.

### கன்னி

செல்வு ஓர் அளவில் குறைவு. நினைத்தவை கை கூடுதல். குடும்பத்தில் சமசிய வாழ்க்கை. பிள்ளைகள் அனுகூலம். தெய்வவழிபாடு. பிரயாணம். கடன் மனதில் கிலேசம் உண்டுபண்ணல். சகோதர நிந்தனை நினையாப்பிரகாரமான அதிர்ஷ்டம் உண்டு. சுகத்தைக் கவனிக்க வேண்டும்.

### துலாம்

துர் நடப்பு. மற்றவர்கள் நிந்தனை. தொன்று தொட்டு பழகிய ஒழுக்க முறைகளை தப்பி நடத்தல். செல்வச் சிதைவு. சினேகிதரினுல் ஏமாற்றமடைதல். நம்பிக்கையிழந்து செய்தொழிலில் நட்டம். பெற்ருரினுல் மனங் கலங்கல். வீட்டுத் தொல்லையுமுண்டு.

### விருச்சிகம்

தொழிலில் இடமாற்றம். இடையருமன வேதனை. பிள்ளைகளினுலும், குடும்பத்திதினுலும் மனத் தேர்வுகாணல். கடனைக்குறித்து மற்றவர்கள் கோள் சொல்லல். கொடுத்து உதவிய நண்பன் கைவிடுதல். பிரயாணம். உறவினருள் மனஸ்தாபம். செலவு கூடுதல். வருமான நிலை மாறுதல் அடையும்.

### தனு

தற் பெருமை. மனத்தில் பயம் ஏற்படுதல். குடும்ப சுகம். பிள்ளைகளை அணைத்து ஆசீர் வதித்தல். பெண பாலாரினுல் செலவு. வியாபார முன்னேற்றம். பொது விஷயங்களில் அயரா ஊக்கம். தெய்வ அனுக்கிரகம். மற்றவர்கள் நன்றி கூறல்; நினைத்தவை தருணத்தில் தடைபடுதலுமுண்டு.

### மகரம்

குடும்ப மகிழ்ச்சி. வருவாய் சந்தோஷமாக தான தருமம் செய்ய ஏவுதல். பிள்ளைகளின் வருங்கால வழியைச் சீர்படுத்துதல். பந்துக்கள் கூட்டம். மனையில் அவசிய திருத்தம் செய்தல். அதிர்ஷ்டம். பொன் பொருள் பல வழிகளும் சேருதல். தெய்[illegible] வழிபாடு செய்யவும் நேரிடும்.

### கும்பம்

கடன் படல். குடும்பத்தில் மனக் குளப்பம். பிள்ளைகள் சுகக்குறைவு. நினையாப் பிரகாரமான பிரயாணம் சென்ற விடத்தில் பொருள் நழுவுதல். வியாபாரத்தில் துணைவராக விருப்போர் வஞ்சித்தல். எவரையும் நம்பிக் கஷ்டமடைதல். இல்லத்தில் மாற்றம். காது ரோகம். சுகம் உண்டு.

### மீனம்

வியாபார வழிகளில் நம்பி நடப்பது நன்றல்ல. வெளி இடங்களில் நயமாகப் பேசி வஞ்சித்தல். குடும்ப மகிழ்ச்சி. பிள்ளைகள் ஆரோக்கியக் குறைவு. செல்வச் செருக்கு. புதுமனை கட்ட ஒழுங்கு தேடல். சந்தோஷம். சகலருக்கும் புத்தி மதி கூறல். வெற்றி உண்டு.

---

## தமிழ் . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் நமது தேக்கத்துக்கு கருத்துக்களினதோ, கலைஞர்களினதோ, எழுத்தாளர்களினதோ வளர்ச்சியின்மை என்பது காரணமல்ல. நமது 'மேடை'களின் 'பலவீனம்' தான் காரணம் எனில் 'நிராயுதபாணியை வாள் கொண்டு தாக்கக் கூடாது' என்ற தர்மத்தின் படி 'பின் தங்கிய நிலை' என்ற குரல் அர்த்தமற்ற ஒன்று!

'ஆமாமம் நமது நாடகங்கள் எட்டிப் பிடிக்க வேண்டிய வளர்ச்சியின் இடைவெளி கேவலம் ஒரு இருநூற்றி ஐம்பது (250) மைல் தூரம்தான்.

---

## அவசரம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

15 ஆண்டு கெடுவுக்குள் ஒரு புதிய எழுச்சி தோன்ருமல் போகுமா என்ன; அவசரப் படுத்துவோர் யாராயிருந்தாலும் அவர்களை முதலில் வழி காட்டிப் போகச் சொல்[illegible] வேண்டுமானுல் பிறகு [illegible] யோசிக்கலாம். எங்கே வாழ்வது எப்படி வாழ்வது என்று.

# அரசசேவையிலிருந்து . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் உப்பு. இந்த உப்புடிக்குக் கூட நாங்கள் பிற நாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருேமென்ருல் இந்த நாடு இன்னமும் கைத்தொழிலில் முன்னேறவில்லை என்று தான் பொருள். ஆகவே உப்பளங்களை நல்ல முறையில் விருத்தி செய்ய வேண்டும்.

'ஆனையிறவிலுள்ள உப்பளத்தையும் யாழ்ப்பாணப் பெருங்கடலேரி உப்பளத்தையும் விருத்தி செய்தால், அவ் விரு உப்பளங்களிலுமிருந்து கிடைக்கிற உப்பு இந்த நாட்டில் ஒரு தன்னிறைவைக் கொடுப்பது மட்டுமன்றி பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத்தக்கதாகவும் இருக்கும்.

'இத்திட்டங்களை இப்பொழுது நடைமுறைப்படுத்த முயன்ருலும் விரைவு போதாது. விரைவாக, மிகத் துரிதமாக அவை நடைமுறைப் படுத்தப்பட வேண்டியது இன்றியமையாது. இந்த விதமாகப் பிறநாட்டுப் பணத்தைப் பெறவும் எங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

### தமிழ் மக்கள் சந்தேகம்

'இன்று இந்தத் தேசிய அரசாங்கம் சிங்கள மக்களிடையேயும் தமிழ் மக்களிடையேயும் ஒரு சிறந்த ஒற்றுமையை வளர்க்க முயன்று கொண்டிருக்கிறது; வளர்த்திருக்கிறது என்று நான் சொல்ல மாட்டேன், வளர்க்க முயன்று கொண்டிருக்கிறது என்று தான் சொல்வேன்.

'முன்பிருந்தஅரசாங்கத்திலும் பார்க்க தேசிய அரசாங்கம் இன ஒற்றுமையை வளர்ப்பதற்காகச் சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது. என்ருலும் தமிழ்ப் பகுதியின் ஒரு பிரதிநிதி என்ற முறையில் இந்த வரவு செலவுத் திட்டத்தில் தமிழ் மக்களுக்கு, தமிழ் மொழிக்கு கொடுக்கப்பட்ட உரிமைகளையிட்டு பெரிதும் சந்தேகத்தோடு தான் தமிழ் மக்கள் வாழ்கிருர்கள் என்பதை வலியுறுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

### தமிழ் ஒதுக்கப்படுகிறது

'இன்று ஆட்சி மாறினுலும் கூட அரசாங்க அலுவல்களிலேயுள்ள பல உத்தியோகத்தர்கள் இன்னும் தமிழர்களை ஒதுக்குகிற கொள்கையோடு தமிழை ஒதுக்குகிற கொள்கையோடுதான் வாழ்கிருர்கள் என்பதை நான் பல காரணங்களால் நிரூபித்துக் காட்ட முடியும். ஆனுல், அவற்றையெல்லாம் இப்பொழுது பேசவில்லை. சமயம் வரும் போது குழு நிலையில் எடுத்துக் காட்டுவேன்.

### பெயர்ப்பலகைகளில் தமிழ்

'இந்தச் சபையிலே நிதிஅமைச்சரவர்களைக் கேட்டேன், உங்களுடைய அமைச்சிலேயிருக்கின்ற பெயர்ப் பலகைகளிலே தமிழைச் சேருங்கள், அமைச்சின் கீழுள்ள திறைசேரியிலேயிருக்கின்ற பெயர்ப் பலகைகளிலே தமிழுக்கும் ஒரு இடம் கொடுங்கள் என்று, ஆனுல் இன்றுவரை அது செய்யப்படவில்லை. இந்தச் சபையிலே உறுதி தந்த நிதி அமைச்சரவர்கள், நான் அவர்களுக்குப் பல முறை நினைப்பூட்டியும் இன்னமும் இதைச் செய்யவில்லை யென்ருல், நாங்கள் இங்கே தமிழ் உரிமையைப் பெற்றுக்கொண்டிருக்கிருேமா என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

'இன்று [illegible] போதிய ஒரு கல்வித்திட்டம் இல்லை இந்தக் கல்வித்திட்டத்தை அமைப்பதாகச் சொல்லி இரண்டு ஆண்டுகள் சென்று விட்டன. கல்வித்திட்டம் செம்மையாக இல்லாதபடியால் பல படித்த இளைஞர்கள் உத்தியோகம் இல்லாது தெருவிலே திரிகின்ருர்கள். இப்பொழுது நடைமுறையிலே இருக்கின்ற கல்வித்திட்டம் படித்த பட்டதாரிகள் கூட உத்தியோகமின்றி நடுத்தெருவில் விடப்படுகின்ற முறையிலே அமைந்து விட்டது;

'கலைத்துறை பயில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சேர்ந்து மிகச் சிரமப்பட்டுப் படித்த பிறகு உத்தியோகமில்லாமல் இருக்கின்ற காட்சியைத் தான் நாம் காண்கின்ருேம். இனியும் காணப் போகின்ருேம். எனவேதான் இந்நாட்டுக்கு உகந்த தான வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கக் கூடியதான ஒரு கல்வித்திட்டம் மிக இன்றியமையாதது.

### கல்வியமைச்சரின் இனத்துவேஷம்

'எனினும் கல்வி அமைச்சர் பேசுகின்ற பேச்சை நாங்கள் பார்க்கின்ற பொழுது அரசாங்க சேவையிலேயிருக்கின்ற தமிழ் மக்களை ஒதுக்கி விடவே அவர் எண்ணுகிருர் என எண்ண வேண்டியிருக்கிறது. வத்தேகமவில் பேசிய கல்வி அமைச்சர் தம்முடைய பேச்சை—அது இன்றுவரையிலே மறுக்கப்படவில்லை-ஒரு வகுப்புத் துவேஷப் பேச்சாகவே பேசியிருக்கின்ருர்.

'எதிர்க்கட்சியிலேயுள்ள அங்கத்தவர் ஒருவர் அரசியல் பிரசாரம் செய்தால் நாங்கள் அதை அரசியல் பிரசாரம் என்று சொல்லி விடலாம். ஆனுல் பொறுப்பு வாய்ந்த அமைச்சரொருவர் ஒருவிதமான பொறுப்புமில்லாமல் அங்கு ஒரு துவேஷத்தையே விதைத்திருக்கிருர்.

### பொறுப்பற்ற பேச்சு

'இங்கே நாங்கள் எவ்வளவோ இடர்பாடுகளுடன், இந்நாட்டிலே தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்ருக வாழவேண்டும். இந்நாட்டிலே இன ஒற்றுமை வேண்டுமென்பதற்காக எங்களுடைய வேற்றுமைகளைமறந்து அந்த ஒற்றுமையை வளர்க்க முனைகின்ற நேரத்திலே பொறுப்பு வாய்ந்த அமைச்சரொருவர் மேல்பதவிகளிலேயிருக்கின்றவர்கள் எல்லாரும்தமிழர்கள் என்று அளவு கணக்கில்லாமல் பேசுவது கண்டிக்கத்தக்கது.

'அதை இங்கே நாம் கண்டிக்காமல் விட்டால் எங்களுடைய மக்களுக்கு நாம் எந்தவிதமான மறுமொழியையும் சொல்லிவிட முடியாது. இன்றைய பத்திரிகைகளிலே அதைப்பற்றிய மறுப்புகள் பல வந்திருக்கின்றன.

### கல்வியமைச்சரின் கருத்தை அரசு பின்பற்றுகிறதா?

'அரசாங்க உத்தியோகத்திலே உயர்ந்த பதவிகளிலே எத்தனை தமிழர்கள் இருக்கின்ருர்கள் என்று நாம் பார்ப்போமானுல் விகிதாசாரப்படி கூட இல்லை என்றுதான் நான் சொல்லுவேன். 55 வயதுக்கு மேலே, சிங்களம் தெரியாதவர்கள் அனைவரையும் வேலையிலிருந்து நிறுத்துவோம் என்று சொல்லுவதுகூட இந்த அடிப்படையில்தானே என்று நாமும் சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது.'

### எதிர்ப்போம்

'இன்றைய 'சன்' பத்திரிகையிலே, 1956ம் ஆண்டுக்கு முன்னர் உடல்நலக்குறைவு காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் திரும்பவும் வேலைக்கு அழைக்கப்படுவார்கள் என்ற ஒரு செய்தி வந்திருப்பதை நான் பார்த்தேன். நிதி அமைச்சர் அவர்களுடைய செய்தி அது. ஆகவே நாம் கேட்கின்ருேம், நெஞ்சைத் தொட்டு இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் சிறப்பாகக் கல்வி அமைச்சரவர்களும் சொல்லட்டும், 55 வயது வரையும் இங்கே முழுநேர வேலைசெய்தவர்களுக்கு ஒரு நாளிலே எப்படி வேலையில்லாது போகும்? அந்த வேலையை அவர்கள் செய்யலாம்தானே? அதற்கு சிங்களம்தான் வேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள். இதனுடைய கருத்து, உயர்ந்த உத்தியோகத்திலேயிருக்கின்ற தமிழர்களைப் பதவியிலிருந்து ஒதுக்க வேண்டுமென்கின்ற கல்வி அமைச்சரவர்களுடைய கருத்துத்தானு?'

'அவருடைய இந்தக்கருத்தை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவர விரும்பினுல் அதைத் தமிழர்கள் எதிர்ப்பார்கள் என்று நான் கூறி வைக்க விரும்புகிறேன்.'

'எனவே 55 வயதடைந்தவர்கள், இந்நாட்டுக்குச் சேவை செய்தவர்கள், இதேவேலையை இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்து செய்ய முடியும். ஆசையினுலேயே அவர்கள் எல்லோருக்கும் வேலை கொடுக்கவேண்டும். வெளி நாட்டுக்குச் சென்றவர்களை நீங்கள் அழையுங்கள்; ஆனுல் வேலையிலே யிருக்கின்றவர்களை சாக்குப் போக்குச் சொல்லி வேலையிலிருந்து நீக்காதீர்கள் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.'

---

## வடபகுதியில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியானுல் சிறுபான்மையினரான தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையினரான சிங்கள மக்களிடமிருந்து சமாதான ரீதியில் உரிமைகளைப் பெற முயலாது போராட்டம் நடத்தலாமா என்று சிலர் கேட்கலாம். இரண்டு பிரச்சினைகளும் வெவ்வேறு பட்டவை. தமிழ்பேசும் மக்கள் ஆண்டாண்டு காலமாக அனுபவித்துவந்த உரிமைகளை பெரும்பான்மை சிங்கள அரசாங்கம் பறித்தபோது சிறுபான்மைமக்களான தமிழர்கள் போராட்டம் நடத்தினர்.

சிறுபான்மைத்தமிழர்களின் பிரச்சினையில், பல நூற்றாண்டுகளாக அவர்களுக்கு இல்லாதிருந்துவந்த உரிமையை இன்று பெற்றுக்கொடுக்க முயற்சியெடுக்கிருேம். ஆகவே இரண்டு பிரச்சினைகளையும் ஒன்ருகப்போட்டு குழப்ப எவரும் முயலவேண்டாம்.

உயர்சாதித் தமிழர்கள் என்று கூறப்படுவோருக்கும் ஒரு வார்த்தைகூற விருமபுகிருேம். சிறுபான்மைத் தமிழர்களுக்கு அவர்களின் மனித உரிமைகளையளித்து, தமிழ் இனத்தின் ஐக்கியத்தைக் கட்டிக்காக்க முன்வாருங்கள்.

---

## சிவானந்த வீதி பெயர் சூட்டு விழா

16-8-67 சனிக்கிழமை பிற்பகல் 3—30 மணிக்கு கொட்டாஞ்சேனையிலுள்ள லஸ்கரீன் வீதி, கொழும்பு மாநகராதிபதி ஜனுப் எம். ஜபீர் ஏ. காதர் அவர்களால ஸ்ரீ சிவானந்த வீதி எனப் பெயர் சூட்டப்படும்.

இந்தப் பெயர் சூட்டும் வைபவத்தையொட்டி இமாலயம் ரிஷிகேஷம் திவ்ய ஜீவன் சங்கத்தலைமைப்பீட அதிபர் ஸ்ரீ சுவாமி சிதானந்தஜி மகாராஜ் ஓர் விஷேட ஆசிச் செய்தியை அனுப்பியுள்ளாரென்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அரங்கு

எப்பொருள் யார் யார் வாய்க்,
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவது

## செல்வம் வந்ததும்...!

—அமுதன்—
குரும்பசிட்டி

தேவனுக்கு விடிவது வசைப்படலத்துடன் 'தின்று தின்று சும்மா இடப்பதுதான் வேலை' 'ஒரு வேலையோ, உழைப்போ ஒன்றுமில்லை' போன்றவை தவறுது வாசிக்கப்படும். 'காலை உணவு கிடைக்குமுன், அன்றைய நாள் வேலை அட்டவணை கொடுக்கப்படும். சுத்தம் செய்தல் முதல், சமையல் வரை சகல வேலைகளும் அதில் இடம் பெற்று இருக்கும். இத்தனைக்கும் காரணம், தேவன் போதிய படிப்பற்று, உழைப்பற்று இருப்பதொன்றே யாகும்.

தேவனுக்குத் தாயும் அக்காவும், தம்பியும், உற்ருர்—உறவினரும் உளர். ஆனால் அன்போ ஆதரவோ ஆறுலோ யாரிடமிருந்துமில்லை.

இந்த நிலையைத் தேவனால் சகிக்க முடியுமா? அன்று மாலை இருந்தாற்போல ஏதோ நினைவு வந்தது. கால்கள் போனவழியே போய்க்கொண்டிருந்தான். பாதையின் முடிவு புகையிரத நிலையமாகயிருந்தது. அதே நேரம் புகை வண்டியொன்றும் வந்தது. எதுவித திட்டமுமின்றி முன் நின்ற பெட்டியுள் ஏறிவிட்டான்.

'டக்' 'டக்' என்ற பலத்த கதவடிச் சத்தம் தேவனை யெழுப்பியது. இதுவரை நித்திரையென்பதையும், தன் முன் 'ரிக்கற்' பரிசோதகர் நிற்கின்ருரென்பதையும், தேவன் தெரிந்துக் கொண்டான். 'ரிக்கற்' என்ற அதிகாரக் குரல் எழுந்ததும், முதலிலிருந்து நடந்த கதையைச் சொல்லி, பொறியுள் தானகவே உட்புகுந்த எலி போலாகி விட்டான்.

கும்பிட்ட தெய்வம் குறுக்கே வந்தாற் போல், முன்னிருந்த நடராசா முதலாளி குற்றத்தைப் பொறுப்பேற்று தண்டனைப் பணத்தைக் கட்டி, தேவனைக் காப்பாற்றினர். அத்துடன் நின்றுவிடாது அவனை வரவழைத்து தனது வாழைப் பழக் கடையில் வேலையும் கொடுத்தார். மாதம் மூன்றே மூன்று தான் முடிந்தது. அதனுள் தேவன் கடை நடத்தும் கலையை நன்கு கற்று விட்டான்.

வெறும் கண்ணுக்குத் தாரசிங் போல் காட்சி தந்த நடராசா முதலாளி, ஒரு போயா காலை கடைசி மூர்ச்சை விட்டு விட்டார். அதன் மேல்தான், அவர் மார்படைப்பு வருத்தக்காரர் என்ற மர்மம் வெளித்தது.

சாவீட்டின் இரண்டாம் நாள். தேவன் மேசை மேலிருந்த டெயிலி நியூஸ் செய்தித் தாளைப் படித்துக்கொண்டிருந்தான். அவன் கண்களுக்கு முன்னையநாள் இழுக்கப்பட்ட சுவீப் வெற்றி எண்கள் தட்டுப்பட்டன. ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியம்! முதலாம் அதிட்டசாலி அவனே தான்.

சுவீப் பணக்காசோலையைப் பெற்றுக் கொண்டு, வீட்டு வாசலில் காரால் இறங்கும் போது வேகமாக பின் வந்த கார் ஒன்று 'படார்' என தேவனின் காரைக் கடந்து சென்று முன் நின்றது. காரிலிருந்து தேவனின் தாயும், அக்காவும், தம்பியும் இன்னும் சிலரும் இறங்கினர். அவர்கள் இறங்கியது தான், திரும்ப ஏற வேண்டி நேர்ந்தது. தேவனின் 'ஓடி விடுங்கள்' என்ற இரைச்சல் தொலைவில் போன பொலீஸ் வானையே வரவழைத்து விட்டது.

## அணுவை பிளந்த அறிஞர்

இன்று எங்கு பார்த்தாலும் அணுவைப் பற்றிய பேச்சாகவே இருக்கிறது. அணி உலை, அணு மருந்துகள், அணு ஆற்றலால் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல்கள், மின்சார நிலையங்கள் இவை போன்ற பலவற்றை நமக்கு அளித்திருக்கிறது அணு அறிவு. அணுவின் அமைப்பு, அதன் இயக்கம் என்ன என்பதை அறியாத பாமரனும் அணுகுண்டைப் பற்றியும் அதன் ஆற்றலைப் பற்றியும் அறிந்திருக்கிறன். இவற்றிற்கெல்லாம் மூல காரணமானவர் அணுவின் உள் அமைப்பினை எடுத்துக்காட்டி அதனைப் பிளப்பதால் கிடைக்கும் அளவற்ற ஆற்றலைப் பயன்படுத்தும் முறைக்கு வித்திட்ட லார்டு-ருதர் போர்டு (Lord Ruther ford) என்னும் பேரறிஞர் ஆவார்.

லார்டு ருதர் போர்டு நியூஸ்லாந்தின் தெற்குத் தீவில் 1871ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 30ம் நாள் பிறந்தார். அவருடைய தந்தை ஓர் உழவர் தாய் ஒரு பள்ளியில் ஆசிரியை. சிறுவயதில் பள்ளியில் படிக்கும்போதே இவர் வகுப்பில் தலைசிறந்தவராவரா க இருந்தார். எல்வாப்பாடங்களிலும் மற்ற மாணவர்களை விட மிகுந்த மதிப் பெண்கள் பெற்று ஆசிரியர். பெற்ருேர் ஆகியோரின் பாராட்டுதலைப் பெற்ருர். இளமையிலேயே முதல் தரமான ஒளிப்படக்கருவியைச் செய்தார். மணிப் பொறி, நீர்ச் சக்கரங்கள் (Woter W he e l s) இவை போன்ற பல கருவிகளை ஆக்கும் திறன் இளமையிலேயே இவரிடம் இயல்பாக விருந்தது.

பௌதிகத்தில் (Physics) இவர் நோபல்பரிசு பெற்றதையும் தாம்சனுக்குப் பிறகு காவன்டிஷ் ஆய்வு கூடத்தில் பேராசிரியர் பொறுப்பினை ஏற்றதையும் அவருடைய தந்தை கண் குளிரக் கண்டார். ருதர் போர்டுக்கு 'லார்டு' என்ற பட்டம் கொடுத்துப் பெருமைப்படுத்தியதைக் கண்டு அவருடைய தாய் பெரு மகிழ்ச்சி கொண்டார். பள்ளிப் படிப்பு முடிந்து மேற்படிப்புக்கா க ருதர் நியூஸ்லாந்தை விட்டு1895ம் ஆண்டு இங்கிலாந்து வந்தார்.

**வ. ஜெயக்கொடி.**

இங்கிலாந்திலுள்ள கேம்பிறிச்சர்வகலாசாலையில் உள்ள காவன்டிஷ் ஆய்வு கூடத்தில் அவர் சேர்ந்தார். காவன்டிஷ் ஆய்வு கூடத்தில் நடத்திய பரிசோதனைகளின் பிரகாரம் அவர் வெளியிட்ட ஆராய்ச்சிகள் அறிவியலில் உயர்ந்த இடத்தை 1898ம் ஆண்டில் இடம் பெற்றது.

அதன் பின் இங்கிலாந்திலுள்ள மான் செஸ்டர் பள்ளிக்கூடத்தில் 1907ம் ஆண்டில் சேர்ந்தார். அங்கும் அணுவைப் பற்றித் தொடர்ந்து ஆராய்ச்சி செய்த ருதர் அப்பல்கலைக்கழகத்தை உலகம் புகழும் ஓர் ஆராய்ச்சி நிலையமாக்கினர். இங்கும் பல ஆராய்ச்சிகளைச் செய்து வெற்றியும் கொண்டபின் 1919ல் ருதர் போர்டு கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவியை ஏற்றுக் கொண் தமக்கு முதலில் வழிகாட்டிய காவன்டிஷ் ஆய்வு கூடத்தில் தமது இறுதிக்காலம்வரை வாழ்ந்தார். அணுவைப் பிளந்த அறிஞராகிய போர்டு ருதர் போர்டு 1931ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம்நாள் அவரது 60வயதில் இம்மண்ணுலகை விட்டு மறைந்தார்.

## தீயோர் உறவு

—அரியாலையூர் மோசேஸ்—

கனிந்து பழுத்துக் கண்விரும்பும்
காட்சிக் கினிய பொருளாகி
மினுங்கும் மஞ்சள் நிறத்துடனே
மாம்பழம் மரத்தில் தொங்கியது.

கையாற் பறித்து ஆவலுடன்
கத்தி யாலதைப் பிளந்தேனே;
கைகால் அசைத்துத்துப் புழுக்கள், அக்
கனிந்த பழத்தில் நெளிந்தனவே

இத்தனை அழகாய்ப் பொலிந்திருக்கும்
இப்பழத் தினுமா புழுக்களெனச்
சித்தமே வியப்பால் அதிவுறநான்
தூர எறிந்தேன் பழத்தினையே.

மனித உருவில் நடமாடும்
மாக்களும் பிறரைப் போலிங்கே
மினுக்காய் உடுத்துப் பகட்டுடனே
நல்லவர் போலத் தோன்றிடுவார்.

நெருங்கி நெருங்கிப் பழகவன்னுர்
நெஞ்சத்திடையே மலிந்திருக்கும்
பொருமை சூழ்ச்சி இன்னேரன்ன
புழுக்கள் நெளியக் காண்போமே.

இவரின் இதய வீட்டிலுமா
''இத்தகைக் குணங்கள்'' எனவியந்து
உவந்து வளர்த்த நட்பினைப்பின்
உதறித் தள்ளத் தோந்திடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை நமதே!

தற்காலத்து இளைஞர்கள் நாளை நமதே என்பதை உணருவதில்லை. காரணம் இவர்களிடையே நிலவிவரும் சோம்பேறித்தன்மையாகும். ஒரு நாட்டிலுள்ளவர்களிடம் எவ்வளவுக்கெவ்வளவு சோம்பேறித்தன்மைகுறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்நாட்டின் பொருளாதார நிலை உயரும். இதை எம் நாட்டு இளைஞர்கள் உணருவதில்லை.

எமது நாடு அந்நியா ஆட்சியில் இருந்தபோது ஏற்றுமதி பயிரான தேயிலை, றப்பர், தென்னை ஆறியவற்றை விருத்தி செய்வதையே அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதனால் இந்நாட்டு விவசாயிகளும் விவசாயமும் பாதிக்கப்பட்டது. எனினும் தற்போது எம் நாட்டில் ஓரளவு விவசாயம்முன்னேறியுள்ளது. ஆனால் அதை நரியான முன்னேற்றம்என்றுகூற முடியாது. எனவே நம் நாட்டு விவசாயத்தை மேலும் விருத்தி பண்ண எம் நாட்டு வாலிபர்கள் இதில் அக்கறை கொள்ள வேண்டும்

எம் நாட்டில் நல்ல செழிப்பான மண் உண்டு இதைப் போல குளங்களிலிருந்து நீர்பாசன வசதி உண்டு. இவை மட்டுமல்லாலல் எம் அரசாங்கம் விவசாயிகளை ஊகப்படுத்தி உதவி செய்ய முன் வருகிறது. ஆனல் எம்நாட்டு வாலிபர்கள் பின் தங்குகிருர். காரணம் விவசாயம் ஓர் இழிவான தொழில் என்று அவர்கள் எண்ணும் தவருன அபிப்பிராயமாகும். தற்போது கூட நாம் உணவில் ஒரு பகுதியை இறக்குமதி செய்கிறேம். இச் செய்கையிலிருந்து வெளிநாட்டவர் எம்பொருளாதாரத்தை மதிப்பிட முடிகிறது. பிச்சைக் காரர்கள் வீடு வீடாக சென்று தமது உணவை பிச்சை எடுக்கிருர்கள். இதே போல் நாமும் நாடுநாடாக எமது உணவை பெறுகிறேம். இக்குறையை நிவர்த்தி செய்ய எம் வாலிபர்கள் ''நாளை நமதே'' என்ற எண்ணத்தைக் கொண்டுமுன் வரவேண்டும்.

ஜி. நிர்மலராஜன்
பருத்தித்துறை

எம் நாடு ஏனைய துறைகளிலும் பின்தங்கி இருக்கிறது. நாம் எம் நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்த பெரிதும் பாடுபடவேண்டும். இப்படியாக நாம் பாடுபடும் போது நேர்மை, நம்பிக்கை, அவா, ஒற்றுமை என்னும் நல்லெண்ணங்களை மனதில் கொண்டு, ''நாளை நமதே'' என்ற உணர்ச்சியையும் மனதில் ஊட்டி தொழிற்பட்டால் நிச்சயமாக வெற்றி காண்போம் என்பதில் ஐயமில்லை.

## ஈழத்தின் எழில் மலை

எழில் மிக்க இயற்கைக் காட்சிகள் மலிந்த நம் ஈழத்திரு நாட்டிலேயுள்ள அதி உயர்ந்த ஐந்து மலைகளில் ஒன்றுதான் சிவனொளிபாத மலை. இதன் உயரம் 7360அடி. இம்மலை சப்பிரகமுவா மாகாணத்தில் உள்ளது.

மற்றெல்லா மலைகளையும் விட இம்மலை பிரசித்தி பெற்று விளங்குகின்றது. இன்று நேற்று தொடக்கம் அல்ல-ஆதம், அவ்வா காலம் ஈருக.

ஆதம், சொர்க்கலோகத்தில் இறைவனின் கட்டளையை மீறியதற்கு தண்டனையாக சிவனொளிபாதமலைக்கு தூக்கி எறியப்பட்டாரென்றும் தான் செய்த பாவத்திற்கு ஈடேற்றம் தேடி அவர் இங்கு ஒற்றைக்காலில் நின்று தவம் செய்தாரென்றும் கதை கூறுகிறது.

மகா அலெக்சாண்டர் மன்னன் சிவனொளிபாதத்தை தரிசித்துள்ளாரென்றும், இன்று அங்கு காணக்கிடக்கும் சங்கிலி, இரும்புத் தூண்கள் முதலியன அவரால் நிர்மாணிக்கப் பட்டவையென்றும் பலர் எண்ணுகின்றனர்.

பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய பல்வேறு மதத்தினரும் சிவனொளிபாதத்தை தரிசித்து வணங்கி காணிக்கை செலுத்தி வருகின்றனர். ஒவ்வொரு மதத்தினரும் இப்பாதத்தைப் பற்றி ஒவ்வொரு மாறுபட்ட கருத்துக்களை கொண்டுள்ளனா.

'பௌத்தர்கள், 'ஸ்ரீபாத' என்றும் 'சமனளகந்தை' என்றும் அழைப்பர். இந்துக்கள் சிவபெருமானின் பாதம் என்றும்; முஸ்லிம்கள் ஆதிமனிதர் ஆதத்தின் பாத அடையாளம் என்றும்: கிறிஸ்தவர்கள் அர்ச் தோமஸ் குருநாதரின் பாதச் சின்னம் என்றும் பலவாறு வழங்கி வருகின்றனர்.

—மீ. ஜெய்னுல் ஆப்தீன்.

முற்காலத்தில் போலன்று, இன்று இம் மலையுச்சியை அடைய போதிய வசதிகள் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. வழிநெடுகிலும் மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன; தங்கு மடங்கள் கட்டப்பட்டுள்ளன; தேவையான பொருட்களை விலை கொடுத்து வாங்கிக் கொள்ள கடைகள் திறக்கப்பட்டுள்ளன. இப்படியே இன்னும் எவ்வளவோ! காடடர்ந்த மலைதானென்ருலும் அரவத்திற்கும் அரிமாவுக்கும் பயப்படத்தேவையில்லை. ஆனல் சிவனொளிபாத மலையுச்சியையொரு முறை தரிசிக்க வேண்டுமென்ற ஆர்வமுடையவர்களெல்லாம் தாம் மஸ்கெலியாவைத் தாண்ட முன் அவசியமாகத் தேவைப்படும் பொருட்களை கையோடு வாங்கிக் கொண்டு போவதே மேல். அல்லது 'கருப்பு மார்க்கெட்' விலை தான் மலையடிவாரத்தில்!

# ஜனத்திரள் மிகுந்த ஐந்தாவது ஆனந்த வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மொடேன் (பதுளை) விஜிதா (அட்டன்)







* எம்.ஜி.ஆர். * சரோஜாதேவி

அசோகன், நாகேஷ், மனோரமா,

டி. ஆர். ராமச்சந்திரன் சாரங்கபாணி

நடிக்கும்

# அன்பேவா

(ஈஸ்மன் கலர்)

கதை— வசனம் — டைரக்ஷன்: திருலோகசுந்தர் பாடல்கள்: வாலி



# 2-வது ஜனத்திரள் வாரம்!

செல்லமஹால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) இம்பீரியல் (மட்டக்களப்பு) நெல்சன் (திருமலை)

காசினோ (மாத்தளை) றிகல் (கண்டி) ஸ்ரீ முருகன் (வவுனியா)

2வது வாரமாக வின்சர் (யாழ்ப்பாணம்) காண்பிக்கப்படுகிறது

சிவாஜிகணேசன். சௌகார்ஜானகி,

கே. பி. சுந்தரம்பாள், நாகேஷ், எஸ். வி. சுப்பையா

வி. கே. ராமசாமி எல். விஜயலட்சுமி நடிக்கும்

# மகாகவி காளிதாஸ்

கெப்பிட்டலில் — 7வது வாரம்

● எம். ஜி. ஆர். ● ஜெயலலிதா

## தனிப்பிறவி

# ஏற்றமிகு ஏழாவது வாரம்

நாடும் ஏடும் போற்றிப் புகழும் நவீன பொழுது போக்குச் சித்திரம்!



சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்)

சிகிரி (பண்டாரவளை) ஆனந்த (கம்பளை) ஈஸ்டர்ன் (சம்மாந்துறை) சுஹையா (ருகலை)

* ஜெய்சங்கர் * கே. ஆர். விஜயா



* நாகேஷ் நடித்த

# பட்டணத்தில் பூதம்

ஈஸ்ட்மென் வண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலேசன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1967-ம் வருடம் ஒகஸ்ட் மாதம் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.